Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அபயாம்பிகை சதகம்

அபயாம்பிகை பட்டர் அருளியது

(அபயாம்பிகை தரிசனம்)

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆண்டு விழா பரிசு

அரசர் கல்லூரி, திருவையாறு.

(தஞ்சை மாவட்டம்)

~~செல்வன்~~/செல்வி V. மங்களகௌரி

பயிலும் வகுப்பு II B.A. [illegible]

போட்டி இசை

தகுதி இரண்டு

நாள் 9-4-95

முதல்வர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

சிவமயம்

ஸ்ரீ அபயாம்பிகைபட்டர் அருளிய

அபயாம்பிகை சதகம்

(அபயாம்பிகை தரிசனம்)

விளக்கவுரை:

இலக்கியமணி மாயூரம் V. தண்டபாணி

பதிப்பகத்தார்:

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
சென்னை-600 017

விலை ரூ. 8

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

© பதிப்புரிமை பதிப்பகத்தாரைச் சார்ந்தது.
முதற் பதிப்பு: 1989

சென்னையில் லிப்கோ ஸ்டாகிஸ்டுகள்:

எம். தாமோதரம் & கம்பெனி,

108, கார்ப்பொரேஷன் பழக் கடை, சென்னை-600 108.

அச்சிட்டோர்: இந்தியா ஆப்செட், சென்னை - 600 014.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முன்னுரை

அம்பிகையின் பெருமைகளைப் பேசும் நூல்களை ஆராய்ந்து சொற்பொழிவுகள் நிகழ்த்த வேண்டும் என்பது அடியேனுடைய நீண்ட நெடுநாளைய ஆவல். அதற்குக் காரணம் தமிழ்ப் பெரியார், வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களுடைய எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் அடியேனுக்குள்ள ஈடுபாடுதான்.

அப்படியே தமிழகம் முழுவதும் மட்டுமல்லாமல், டெல்லி, பம்பாய், ஹைதராபாத், திருவனந்தபுரம் முதலிய வேறு மாநிலங்களின் தலைநகர்களிலும் ''அபிராமி அந்தாதி'' சொற்பொழிவுகள் நிகழ்த்த அடியேனுக்கு அம்பிகை திருவருள் கூட்டியிருக்கிருள்.

தமிழக அரசின் துணைச் செயலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரும், எனது இனிய நண்பருமான மாயூரம் திரு. எஸ். கோவிந்தராஜ பிள்ளையவர்கள், அடியேனுடைய சொற்பொழிவு எங்கு நடந்தாலும், அங்கு வந்து அடியேனை ஊக்குவிக்கும் பண்புடையவர்கள். அவர்கள் ஒரு நாள் ''அபயாம்பிகை சதகம்'' என்னும் நூலை என்னிடம் கொடுத்து, இந்த நூல் பிரபலமடைய வேண்டும் என்ருர். பயபக்தியுடன் அந்த நூலை அம்பிகையின் திருவடியைப் பற்றிக் கொண்டு ஆராய்ந்தேன். சௌந்தர்ய லஹரி, அபிராமி அந்தாதி போல் ஓர் அற்புதமான நூல் இது என உணர்ந்தேன். அபயாம்பிகை சதகப் பாடல்களைச் சொற்பொழிவுகளில் இடையே எடுத்துக் கூறினேன்.

மறைந்த பெரியவர், வேதவிற்பன்னர் பைங்காஞடு திரு ஆர். வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்கள், தான் பொறுப்பாசிரியராகப் பணியாற்றிய ''ஜகத்குரு'' மாத இதழுக்கு ஏதேனும் தொடர் கட்டுரை எழுத வேண்டும் என்று பணித்தார்கள். அபயாம்பிகை சதகத்தைப் பற்றி அவரிடம் சொன்னபோது ஆனந்தப்பட்டார்கள். ஸ்ரீ காஞ்சி பரமாச்சார்யாளின் கருணையை மனத்தில் இறுத்தி மூன்ருண்டுகள் ''அபயாம்பிகை சதகம்'' பாடல்களுக்கு விளக்கவுரை எழுதினேன்.

ஆன்மீக நூல்களை வெளியிடுவதை வியாபாரமாக இல்லாமல், தொண்டாகச் செய்து வரும் சிறந்த ஸ்தாபனம் ''லிப்கோ''

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
அண்மையில் அவர்கள் வெளியிட்ட "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" ஒன்றுபோதும் அந்த நிறுவனத்தின் புகழ் தமிழ் உள்ளளவும் நிலைத்திருக்கும் என்பதற்கு.

"லிப்கோ" திரு. தி. ந.ச. வரதன் அவர்களிடம் "அபயாம்பிகை சதகம்" கையெழுத்துப் பிரதியைக் கொடுத்தபோது, மனமுவந்து நூலை வெளியிட ஒப்புக் கொண்டார். எல்லாம் அன்னை அபயாம்பிகையின் கருணை.

இந்த நூலை நல்ல முறையில் அச்சிட்டு வெளியிடும் "லிப்கோ" நிறுவனத்திற்கும், போற்றுதற்குரிய நண்பர் திரு. வரதன் அவர்களுக்கும் அடியேனுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"மீனாட்சி இல்லம்", வி. தண்டபாணி.
சேலையூர், சென்னை-73.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihara Collection, Sholinganallur, Chennai

முகவுரை

மயிலாடுதுறை

"சோழவளநாடு சோறுடைத்து" என்பது ஆன்றோர் வாக்கு. பொன்னி நதி பாய்வதால் நீர் வளமும், நில வளமும் கொண்ட பகுதியாகும் அது. கருணை பொழிகின்ற அன்னை அபயாம்பிகையும், அப்பன் மயூரநாதனும் கொலுவீற்றிருக்கும் உன்னதமான ஸ்தலம் மாயூரம் எனப்படும் மயிலாடுதுறை. நிலமகளுக்கு முகம் போன்றது சோழ நாடு என்று சேக்கிழார் போன்ற சான்றோர்கள் பகர்வார்கள். சோழ நாடு முகமாகும்போது அதன் திலகமாக விளங்குவது மாயூரம் ஆகும்.

இந்த மயிலாடுதுறையிலுள்ள இடப தீர்த்தத்தில் ஐப்பசி மாதம் முழுவதும் கார்த்திகை முதல் நாளும் நீராடுவது புண்ணியச் சிறப்புடையது என்பது நம்பிக்கை. காவிரியின் நடுவிலே மேற்கு நோக்கி இடப் பெருமான் எழுந்தருளியிருக்கிறார். இந்தத் தலத்திலே தான் பிரும்மன் சிவபெருமானை பூஜித்து அருள் பெற்றான். தக்கன் சிவனை மதியாது யாகம் செய்ய வீரபத்திரக் கடவுள் யாகத்தை அழிக்க உமையம்மை தக்கன் மகளாக இருந்த தன் உரு நீத்து மயிலுருக் கொண்டு, இறைவனை வழிபட்டு உயர்ந்தாள்.

தக்கன் தன் தவறுதலுக்காக வருந்தி மாயூரம் வந்து பிரம்ம தீர்த்தத்தில் நீராடி திருநீறு முதலிய சிவ வேடப் பொலிவுடன் மயூரநாதரைப் பூசித்து வந்தான். சிவ பெருமான் அருள் பாலிக்க தக்கன் தனது பாபங்கள் அனைத்தும் நீங்கி தன் இருப்பிடம் சேர்ந்தான்.

அன்னை உமை ஐயனை மயிலுருக் கொண்டு பூசித்தபோது பூசனையின் அழகைக் கண்டு ஆனந்தப் பட்டு தானும் ஒரு மயிலுருக் கொண்டு பூசையைப் பார்த்துகொண்டே ஆடினான்.

பிறகு சிவபெருமான் காட்சி கொடுத்து அன்னைக்கு அருள் செய்து "அபயாம்பிகை" என்ற நாமமும் சூட்டி ஆட்கொண்டார். இறைவி சிவபெருமானைப் பார்த்து வேண்டினாள்: "வள்ளலே! முன்னொரு நாள் மயிலுருவாக என் பக்கம் வந்து, நான் பூசை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
செய்த போது ஆடினீர்கள்; இப்போது மத்தளம் முதலிய பக்க வாத்தியங்களுடன் திருநடனம் செய்து அருள வேண்டும்.''

தேவியின் வேண்டுகோளை ஏற்று தேவர்களும் சிவகணங்களும் காண அனைவருக்கும் ஞானம் மீதூர 'ஆனந்த தாண்டவம்' ஆடினார். இதற்கு ''கௌரி தாண்டவம்'' என்று பெயர்.

மார்க்கண்டேயருக்கு அடைக்கலம் தந்து சிவபெருமான் எமனைக் காலால் உதைத்தார்; அந்த யமன் சிவபெருமானால் தண்டிக்கப்பட்டு அழிந்த போது, பூமி தேவியின் வேண்டுகோளை ஏற்று மீண்டும் சிவபெருமான அவனை எழுப்ப அவன் மாயூரத்தை அடைந்து அங்குள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி திருநீறு அணிந்து ஐந்தெழுத்து ஓதி சிவலிங்கம் ஸ்தாபித்து பூசை செய்து சிவ பெருமான் அருள் புரிய பழைய நிலையை அடைந்தான்.

அகத்தியர் பூசித்த ஸ்தலம் இந்த மயிலாடுதுறை இது லக்ஷ்மியும் கண்ணுவ மகரிஷியும் பூசித்த இடமுமாகும்.

ஐப்பசி மாதம் கடைசி நாள் கடைமுகம், இங்கு சிறப்புக் குரிய தினமாகும். அன்று காவிரியில் இடப தீர்த்தக் கட்டத்தில் பஞ்ச மூர்த்திகள் தீர்த்தம் கொடுப்பார்கள்.

ஐப்பசி கடைமுகம் அன்று காவிரியில் இடப தீர்த்தக் கட்டத்தில் முழுகுவதற்கு ஒரு முடவன் வெகு தொலைவிலிருந்து வந்தான். அவன் முடவன் ஆகையால் அவனால் வேகமாக நடக்க முடியவில்லை. அவன் மாயூரம் வந்து சேர்வதற்குள் ஐப்பசி கடைசி நாள் முழுக்க முடிந்து நள்ளிரவையும் தாண்டி விட்டது.

தன் துர்பாக்கியத்தை எண்ணி சிவபெருமானை நோக்கி அழுது கதறினான் முடவன். மயூர நாதர், அன்னை அபயாம்பிகையுடன் இணைந்து காட்சியளித்து, ''முடவனே, உன்னுடைய பக்தியை உணர்ந்தோம்; ஐப்பசி கடைசி நாளில் உன்னால் மயிலாடுதுறைக்கு வந்து சேரமுடியாமை குறித்து வருந்த வேண்டாம். நாளைக் காலை கார்த்திகை முதல் நாள் நீ இந்த இடப தீர்த்தக் கட்டத்தில் மூழ்கி முக்தி பெறுவாய். இனிமேல் ஐப்பசி கடைசி நாள் மட்டு மல்லாது கார்த்திகை முதல் நாளும் இங்கு முழுகுபவர்கள் எல்லா பாபங்களும் தொலைந்து முக்தியடைவார்கள். உன் பெயரால் கார்த்திகை முதல் நாள் 'முடவன் முழுக்கு' என்று பெயர் பெறும்'' என்று அருளி மறைந்தார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Shri V Harihara Collection, Sholinganallur, Chennai

இத்தகைய புண்ய பூமியான மயிலாடுதுறைக்குக் கீழ்ப் புறமுள்ள நல்லத்துக்குடி என்ற கிராமத்தில் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு அந்தணர் குலத்தில் கிருஷ்ணசாமி என்று ஒருவர் தோன்றினர். இவர் இளமையிலேயே தாய் தந்தையரை இழந்த துர்பாக்கிய சாலி. இவர் தன் அன்னையை இழந்த போது, துக்கம் மேலிட்டு மயங்கி அன்னை மறைந்ததையும் மறந்து "அம்மா" என்று கதறினர்.

அப்பொழுது அன்னை அபயாம்பிகை ஓர் அந்தண மாது உருவில் இவர்முன் தோன்றி, "மைந்தா! அழாதே; இதைச் சாப்பிடு," என்று சிற்றுண்டி அளித்தார். சிறிது நேரம் அங்கு இருந்த அன்னை மீண்டும் மறைந்தார். மற்றும் ஒரு நாள் இவர் குழந்தை யாக இருக்கும்போது பசியால் அழ, அதேபோல் அம்பிகை தோன்றி, உணவு அளித்து. அழுகையை நிறுத்தி, தனது திருக் கோயில் சந்நிதிக்கு அழைத்து வந்து மறைந்தார்.

அது முதல் கிருஷ்ணசாமி ஐயர் அம்பிகையை தரிசித்து வந்தார்.

ஒரு நாள் இரவு அர்த்தசாம தரிசனம் செய்து விட்டு, வீட்டிற்குத் திரும்பும் போது, கோபுர வாயிலுக்கு வெளியில் காலில் கல் இடறி விழுந்தார். காலில் பலமாக காயம் பட்டு விட்டது. வலி பொறுக்காமல் "அம்மா! அம்மா!" என்று அலறினர். உடனே அன்னை அபயாம்பிகை இவரைக் கரம் பற்றி தூக்கி விட்டு ஒரு கை விளக்குடன் வந்து இவருக்கு நல்லத்துக் குடியிலுள்ள இவர் வீடுவரை வழி காட்டினள்.

அன்று முதல் இவர் ஒவ்வொரு நாளும் அர்த்தசாம பூசை முடிந்து வீடு திரும்பும்போது ஆள் யாரும் இல்லாது ஒரு கைவிளக்கு மட்டும் இவருக்கு முன் சென்று வழிகாட்டி மறையும்.

அன்னையின் கருணையை எண்ணி உருகிய கிருஷ்ணசாமி ஐயர், "தாயே! உன் கருணைக்கு நான் யாது செய்வேன்?" என்று புலம்பினர். அன்னை உடன் இவர் முன்பு "செந்தமிழில் என் சிந்தை குளிரச் செய்வாய்" என்று அருளினள் அசரீரியாக.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

அன்னை அபயாம்பிகையின் திருவடியன்றி வேறு ஒரு பற்றும் இல்லாது வாழ்ந்து வந்த கிருஷ்ணசாமி ஐயரை ஊரிலுள்ளவர்கள், "இவர் ஏதோ துர்தேவதையை உபாசிக்கிறார். அந்தணருக்குரிய நித்ய கர்மானுஷ்டங்களையும் செய்வதில்லை" என்று அவதூறு பேசினார்கள்.

Vaidika Dharma Trust/ Sri Krishnan Collection, Sholinganallur, Chennai

ஆனால், எதைப் பற்றியும் கவலைப்படாது, அன்னையை எண்ணி வாழ்ந்த கிருஷ்ணசாமி ஐயர் என்னும் அபயாம்பிகை பட்டர், அன்னை அபயாம்பிகையின் பெயரில் காப்புச் செய்யுளைத் தவிர 100 பாடல்கள் இயற்றினார். அதுதான் அபயாம்பிகை சதகம். ஒவ்வொரு பாட்டின் இறுதிப் பகுதியும் ஒரே தொடரா யிருப்பது சதகத்திற்கு இலக்கணம். இதை மகுடம் என்று அழைப்பது மரபு.

தமிழில் தொண்டை மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், சோழ மண்டல சதகம், ஈழ மண்டல சதகம், கார் மண்டல சதகம், குமரேச சதகம், அறப்பளீச்சுர சதகம் முதலிய பல சதகங்கள் உள்ளன.

இந்நூல் 'மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத் தாயே' என்ற மகுடம் உடையதாக நூறு பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களால் அமைந்திருக்கிறது.

ஸௌந்தர்ய லஹரீ, அபிராமி அந்தாதி போன்று அன்னையின் பெருமை பேசுகிற ஓர் அற்புதமான நூல் இந்த அபயாம்பிகை பட்டர் அருளிய அபயாம்பிகை சதகம்!

அபயாம்பிகை சதகம் என்னும் இந்த நூலை, திருவாவடுதுறை ஆதீனத்தார் தங்கள் அருளாட்சியின் கீழ் அமைந்துள்ள ஸ்ரீ மயூரநாத சுவாமி தேவஸ்தான சார்பில் அருளியுள்ளார்கள்.

திரு. மீனாட்சி சுந்தரனார்

தமிழ் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களுடைய குருநாதர், மகா மகோபாத்யாய திரிசிரபுரம் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இந்த மயிலாடு துறையில் வீடு வாங்கிக்கொண்டு தெற்கு வீதியில் வசித்து வந்தார்கள். இவர்கள் 'மாயூரப் புராணம்' என்ற 64 படலங்களையும் 1894 செய்யுட்களையும் கொண்ட ஸ்தல புராணத்தை எழுதியிருக்கிறார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், அபயாம்பிகை பற்றி ஒரு தோத்திரம் எழுதியுள்ளார். அதில் அன்னையின் அழகுத் திருக்கோலத்தையும் அவளின் கருணைப் பெருவெள்ளத் தையும் நம்மை தரிசிக்கச் செய்கிறார்.

அன்னையின் கூந்தல் மேகத்தை ஒத்த கரிய நிறமும் கள்ளிருக்கும் மலருமாக உள்ளதாம்; அன்னையின் அழகுச் செவ்வாயும் வெள்ளை வெளேரென்ற பற்களின் நகையும் மூங்கிலை ஒத்த தோள்களும் அழகுக்கு இலக்கணம் வகுக்கின்றன.

அன்னையின் இரு விழிகளும் கருணை வெள்ளத்தை அடியார்கள் பால் பொழிகின்றன. சந்திர மண்டலத்தை ஒத்த திருத்தோடுகள் அன்னையின் வதன அழகுக்கு அழகு கூட்டுகின்றன.

மெலிந்த அழகிய இடையும் செம்பட்டு உடையும் மங்கள கரமாகத் திகழும் பொற்கழுத்தும் நூபுரமும் கொண்ட அந்த பெருங்கருணைக் கடவுள் அவள் கருணைக்கு ஏங்கும் அடியார் களுக்கு பரிபூரணமாக அருள் பாலிக்கிறார்கள். அவளை அடி பணிந்து வாழ்வோம்.

அஞ்சல் நாயகி

''ப்ரந்தமலர்க் கருங்குழலும் செவ்வாயும்
வெண்ணகையும் பசுவேய்த் தோளும்
சுரந்தஅருள் பொழியும்இரு விழியும்எழில்
வழிமுகமும் துணைப்பொற் றோடும்
கரந்ததிரு இடையும் ஒண்செம் பட்டுடையும்
மங்கலப்பொற் கழுத்தும் நாளும்
இரந்தவருக்கு அருள் அஞ்சல் நாயகிநா
பரப்பதமும் இறைஞ்சி வாழ்வாம்.''

கூத்தபிரானின் மூத்த பிள்ளை

அபயாம்பிகை சதகத்தை எழுதத் துவங்கும் முன் அபயாம்பிகை பட்டர் அன்னையின் பெயரில் பாடப் போகும் பாடல்கள் முறையாகவும் சரியாகவும் வரவேண்டுமானால் விநாயகப் பெருமானின் அருள் வேண்டும் என்று பூரணமாக நம்புகிறார். எனவே விநாயகருக்குக் காப்புச் செய்யுள் செய்து விட்டு தமது துதிப்பாடல்களைத் துவங்க எண்ணுகிறார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நூலாசிரியர் மயிலாடுதுறையில் வாழ்ந்தவர். அவர் பாடிய அன்னை அபயாம்பிகை கொலு வீற்றிருப்பதும் அந்த மயிலாடு துறைதான். அன்னையின் மூத்த பிள்ளையான ஆனைமுகத்தோன் அன்னைக்கு உரிய ஆலயத்திலேயே இருக்கிறார். அம்மையும் பிள்ளையும் மட்டுமல்ல அப்பன் மயூரநாதனும் அங்கே இருக்கிறார். ஆனால், விநாயகருக்குக் காப்புச் செய்யுள் செய்யும் அபயாம்பிகை பட்டரின் நினைவு வேகமாக தில்லைக்குப் போகிறது. அங்கே ஞான நடம் புரியும் கூத்தபிரானின் மூத்த பிள்ளை விநாயகர் என்று சொல்லி காப்புச் செய்யுள் செய்கிறார். தென்னாட்டில் ஆயிரமாயிரம் சிவாலயங்கள் இருந்தாலும் கோவில் என்றவுடனே நினைவுக்கு வருவது தில்லைதானே!

அபயாம்பிகை பட்டர் அன்னையின் பெயரில் அபயாம்பிகை சதகத்தை உரைக்க தில்லையின் கனகசபையில் நடனமிடும் நடராஜப் பெருமானின் மூத்த பிள்ளை ஒற்றைக் கொம்பை உடையவனான ஆனைமுகத்தவனின் இரண்டு திருவடிகளையும் தனக்குத் துணையாகத் தந்து உதவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

அபயாம் பிகைசதகம் அன்பாய் உரைக்க
உபய சரணம் உதவும் - சபைநடுவுள்
ஆடுகின்ற ஐயன் முதல் அன்பாகப் பெற்ற ஒரு
கோடு முகத் தானை குறித்து.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தரிசனம்

அன்னை அபயாம்பிகையின் அழகு திருக்கோலத்தை தன் கண்களால் கண்டு உள்ளத்தில் சரியாக எழுதிக் கொண்டு ஆனந்த வெள்ளத்தை மொண்டு களிக்க விரும்புகிறார் பட்டர். அப்படி அன்னையின் திருக்கோலத்தைக் காண முற்படும் பொழுது அவர் கண்கள் முதலில் பார்ப்பது அம்பிகையின் திருவடிகளே. அடியார்களுக்கு பற்றுக்கோடு அந்தத் திருவடிகள் தானே! அந்தப் பாதங்களில் அன்னை என்னென்ன அணிகலன்களை அணிந்திருக்கிறாள்? சிறிய சதங்கை அணிந்திருக்கிறாள், சிலம்பு அணிந்திருக்கிறாள், மணியின் ஒலியெழுப்பும் பாடகம் என்ற ஒரு அணியும், தண்டையும், கொலுசும் அணிந்திருக்கிறாள்.

அன்னையின் திருவடித் தாமரையை உற்று நோக்கி உள்ளக் கிழியில் ஒரு சரியான சித்திரக்காரனைப் போல் அழகு ஒழுக எழுதிவிட்டார் அபயாம்பிகைபட்டர். அடுத்து என்ன என்று அம்பிகையின் அழகு திருக்கோலத்தை காண முயல்கிறார்.

எப்(பாதும் அன்னையைப் பிரியாத, அன்னையின் இடையைப் பிரியாத அரைஞாணும் மாலைகளும் நவமணிகளால் அலங்கரிக்கப்பட்ட "பரஞானம்" "அபரஞானம்" என்ற அடியார்களுக்கு வழங்குவதற்காகவே அமைந்த இரண்டு தனபாரங்களையும் அழகிய இரண்டு கரங்களையும் தரிசிக்கிறார், "அவள் பேச்சு அமுத மொழி" என்கிறார். மலர் போன்ற திருவாயை உடைய அன்னையின் கண்கள் மீனைப் போன்றவை என்று கூறுகிறார். அவள் அழகிய நெற்றி தாமரையைப் போல் உள்ளது என்றும் சொல்கிறார்.

அன்னையின் கூந்தல் பொன் போன்ற பிரகாசம் கொண்டது; முகம் சந்திரனை ஒத்தது ஐயனோடு வாதாடுவதில் பேரின்பம் கொண்டு, காணும் அடியார்களுக்கு பேரின்ப ரசமாக திகழும் கொடியைப் போன்றவள் அவள் என்கிறார் பட்டர். இவ்வாறு அன்னையின் புகழ்பாடி அவளுடைய திருவடியைப் பற்றிக் கொள்கிறார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihararan Collection, Sholinganallur, Chennai

1. "பாதாம் புயத்திற் சிறுசதங்கைப்
பணியுஞ் சிலம்புங் கிண்கிணியும்
படர்பா டகமுந் தண்டையுடன்
படியுங் கொலுசுந் தழைத்தருளும்
பீதாம் பரமுந் துவள்இடையும்
பிரியா தரைஞாண் மாலைகளும்
பெருகுந் தரள நவமணியும்
புனையுங் குயமும் இருபுயமும்
போதா ரமுத வசனமொழி
புகலும் வாயும் கயல்விழியும்
புண்ட ரீகத் திருநுதலும்
பொன்போற் சடையும் மதிமுகமும்
வாதா டியபே ரின்பரச
வதனக் கொடியே உனைஅடுத்தேன்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

எழில் உருவம்

அன்னையின் திருக் கோலத்தை அழகு ஒழுக தன் உள்ளத் திரையில் எழுதிக் கொண்டு விட்டார் அபயாம்பிகை பட்டர்.

அடுத்தாற் போல் அன்னையின் திருமுகத்தையும் அவை பேசும் தத்துவங்களையும் பற்றிக் கூறுகிறார் தனது இரண்டாவது பாடலில்.

சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் உண்டு, ஈசானம், தத் புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோத்ஜாதம் என்று அந்த முகங்களை சொல்வார்கள். ஐயனைப் போலவே அம்மைக்கும் ஐந்து முகங்கள் என்பர். ஐயனுக்குச் சக்தியாக இருப்பவள் அம்மைதானே! ஐயனுக்கு ஐந்து முகங்கள் தான் உண்டு; அம்மைக்கோ ஒன்பது முகங்கள் என்றார் அபயாம்பிகை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பட்டராகிய ஸ்ரீவித்யா உபாசகர். வாமை, ஜேஷ்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரதமணி, சர்வபூததமனி, மனோன்மணி ஆகிய ஒன்பது சக்திகளாய் இருக்கும் போது ஒன்பது முகத்தையும் உடையவளாகத் தோன்றுகிறாளாம் தாய்.

அந்த அன்னை கௌமார நிலையில் ஆறு திருமுகங்களைக் கொண்டவளாகக் காட்சியளிக்கிறாள். பிரம்மனுக்குத் துணையாக இருந்து அவனுக்குப் படைக்கும் திறனை அருளும் போது அவள் நான்கு முகங்களை உடையவளாகிறாள்.

அந்த ஆதிபராசக்தி திருமாலுக்கு அருள் செய்து அவர் காக்கும் பணிபுரிய துணை இருக்கும் பொழுது மால்முகத்தியாகத் திகழ்கிறாள், மகேசுவர நிலையில் செந்நிறமான முகம் கொண்ட தாய் ஆகாயமே வடிவாகத் திகழ்கிறாள்.

அம்பிகை பஞ்சாட்சரத்தைத் தன் இருப்பிடமாகக் கொண்டவள். அவள் பரிபூரணமானவள் என்பதைக் காட்ட சிலம்பினை அணியாகக் கொண்டு திகழ்கிறாள். தாய் தன் கையில் பாசத்தையும் அங்குசத்தையும் கொண்டு திகழ்கிறாள். பூமிக்கு நடுவணதாகிய விந்திய அடவியில் வசிக்கிறாள் அவள்.

அவள் சகஸ்ரமாகிற தாமரையில் வீற்றிருப்பவள். ஐயன் ஆளுகை கொண்ட ஊர் சிவபுரம். அந்த சாம்ராஜ்யத்திற்கு சொந்தக்காரன் என்னவோ அப்பனாகிய சிவபெருமான்தான். ஆனால் மெய்யாக ஆட்சி செய்பவள் அன்னையே.

ஞானசம்பந்தப் பெருமானுக்கு அருளியது போல அடியார்களுக்கு அள்ளி வழங்குவதற்காகவே பெருமைக்குரிய கருணை மிகுந்த தனபாரங்களைக் கொண்டிருக்கிறாள் அன்னை. பிரம்மனுக்கு படைக்கும் குணத்தை வழங்குபவளும், திருமாலுக்கு காக்கும் குணத்தை வழங்குபவளும் சிவபெருமானுக்கு பிரளய காலத்தில் அழிக்கும் குணமாகத் திகழ்பவளும் ஆன அந்த ஆதி பராசக்தி முக்குணத்தையும் உடையவள்.

அவள் தாமரையொத்த முகம் உடையவள். தேவர் உலகத்தில் உள்ள கற்பகம் எல்லோருக்கும் வேண்டுவன வேண்டியபடி வழங்கும் சக்தி உள்ளது. அந்த கற்பகத்துக்கும் சக்தி தருபவள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
இந்த அன்னை பராசக்தி. அன்னையின் கருணைக்கு எல்லையே இல்லை.

அவளைப் போல் இன்னொருவர் தவம் இயற்ற முடியாது. தடசன் மகள் தாட்சாயிணியாக இருந்து சிவபெருமானைக் கணவனாக அடைய தவம் இருந்தாள். பர்வதராஜன் குமாரி பார்வதியாக தோன்றிய போது ஐயனை அடைய அவள் செய்த தவம் மாதவம். காத்யாயன ரிஷியின் மகள் காத்யாயினியாக அவதரித்து காசி க்ஷேத்திரத்தில் பஞ்சத்தால் அவதியுற்ற மக்களின் பசிப்பிணியைப் போக்க சிவபெருமானை நோக்கித் தவம் செய்து அக்ஷய பாத்திரம் பெற்று அன்னபூரணியாகத் தொண்டாற்றி விசாலமான கண்களால் கருணை பொழிந்து விசுவத்துக்கு அதிபதியான விசுவ நாதனை கரம் பற்றி விசாலாட்சியாகத் திகழ்ந்தாள்.

அவள் கைலாயத்தை இருப்பிடமாகக் கொண்டு ஐயனுடன் கொலுவீற்றிருக்கிறாள். அவள் ஒன்பது விதமான நவரச குணநாயகி. காந்தள் மலர் போன்ற நான்கு கரங்களை உடையவள். மேகத்தை ஒத்த நிறம் கொண்டவள். அவள் பரம்பொருளான சிவபெருமானையும் தன் கருணை ஆளுகைக்குள் கொண்டவள். சிவந்த உதடுகளை உடையவள்; அவள் உலகனைத்துக்கும் மங்களத்தைத் தருபவள். அந்த அன்னை சோழ நாட்டில் வாழும் அடியார்களுக்குக் கருணை பொழிவதற்கு என்றே மயிலாபுரியில் கொலுவீற்றிருக்கும் மாயூரநாதனின் வாழ்வாம் அபயாம் பிகையாக தோன்றி உள்ளாள் என்கிறார் அபயாம்பிகைபட்டர்.

2. "அஞ்சு முகத்தி நவமுகத்தி
ஆறு முகத்தி சதுர்முகத்தி
அலையில் துயிலும் மால்முகத்தி
அருண முகத்தி அம்பரத்தி
பஞ்சா க்ஷரத்தி பரிபுரத்தி
பாசாங் குசத்தி நடுவனத்தி
பதுமா சனத்தி சிவபுரத்தி
பாரத் தனத்தி திரிகுணத்தி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கஞ்ச முகத்தி கற்பகத்தி
கருணை கரத்தி தவகுணத்தி
கயிலா சனத்தி நவகுணத்தி
காந்தள் மலர்போல் சதுர்கரத்தி
மஞ்சு நிறத்தி பரம்பரத்தி
மதுரச் சிவத்தி மங்களத்தி
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

பச்சைக்கிளி

அபயாம்பிகை பட்டர் தனது வணக்கத்திற்குரிய தாயான அபயாம்பிகையைக் கிளியாக உருவகப்படுத்திப் பேசுகிறார் இந்தப் பாடலில். ஸ்ரீவித்யா சக்கரத்தின் உச்சியில் இருக்கிற கிளி அவள். அவள் ஏன் உச்சியில் வீற்றிருக்கிறாள் தெரியுமா? உயரமான இடத்தில் வீற்றிருந்தால்தான் எங்கெங்கு தன் அடியார்கள் கருணைக்கு ஏங்குகிறார்கள் என்று அவளுக்குத் தெரியும். அடியார்களுக்குக் கருணை பொழிவதற்காகவே அவள் அப்படி வீற்றிருக்கிறாள் அந்த அருட்கிளி. அன்பர்களுக்கு உணர்வாய் உயிராய் விளங்குகிறாள் அந்தத் தாய்.

பழம் எங்குள்ளதோ அங்கு போய் அதனை கொத்தித் தின்னும் இயல்பு கிளிகளுடையது. ஆனால் இந்தக் கிளி விரும்பி உண்ணும் பழம் சாதாரண பழமா என்ன? பரகாயத்தில் விளங்குகின்ற ஒளி வடிவமான நமச்சிவாயப் பழத்தை எண்ணி ஓடிவரும் இனிய மொழி பேசும் கிளி அல்லவா. இது ஞானக்கிளி. மறை வனமாகிய வேதாரண்யத்தில் தனக்குரிய நாயகனை அடைய விரும்பி நடனமிடுகிறது. சிவனைக் குறித்து ஆடுவதாலே இது ஒரு சிவக்கிளி. பச்சை வண்ணமாய் உள்ள இந்தக் கிளி அடியார்கள் அறிவின் வடிவாகப் படர்ந்தோடுகின்ற உயிராகிற ஓடையில் பரவும் கிளி. அடியார்களுக்கு எல்லா தனங்களையும் செல்வங்களையும் வழங்கக் காத்திருக்கும் நிதிக்கிளி.

இந்தக் கிளி கதம்பவன நகரில் அங்கயற்கண்ணி என்ற பெயரில் விளங்குகிறது. இந்தப் பாடலில் ஒரு தத்துவம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit ... Hariharan Collection, Sholinganallur, Chennai
இருக்கிறது. மிருகங்கள், பறவைகள் இவைகளுக்கும் மனிதனுக்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. மிருகங்கள், பறவைகளுக்கு ஐந்து அறிவு தான் உண்டு. மனிதனுக்கு இறைவனின் கருணையால் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவும் அருளப்பட்டிருக்கிறது.

"மனிதர்களே! கிளியாகப் பிறந்தாலும் சாதாரண பழத்தை நோக்கி ஓடாமல் நமச்சிவாய ஞானப் பழத்தை தேடிப் போகும் எண்ணம் கொண்டு அந்தப் பேரின்பப் பழத்தை அடைவதையே வாழ்வின் இலட்சியமாகக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்துகிறார்."

அன்பர்களே! இந்தக் கிளி சாதாரணக் கிளியல்ல; பவழக்கிளி; பதியாகிற இறைவனை அடையத் துடிக்கும் பசுவாகிற கிளி. அதற்குத் தடையாகவுள்ள பாசங்களை வேரறுத்த வச்சிரம் போல் உள்ளத்தில் உறுதியாக நின்று எப்படியும் அந்தப் பசுபதியை அடைந்தே தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் கிளி. நவகோணங்களாகிய பீடத்தினை உடைய வாயிலில் வீற்றிருக்கும் அருள் பொழியும் மயிலாபுரியில் வளரீசன் வாழ்வாகிய அபயாம்பிகைத் தாய் என்று அந்த அஞ்சல் நாயகியை நமக்கு இப்படி அடையாளம் காட்டுகிறார் அபயாம்பிகை பட்டர்.

3. "உச்சிக் கிளியே அருட்கிளியே
உணர்வுக் குணர்வாய் உயிர்க்குயிராய்
உதித்த கிளியே பரவெளியில்
ஒளிவான் பழத்தை உன்னிவரும்
நற்சொற் கிளியே கதம்பவன
நகரில் வாழும் பரைக்கிளியே
ஞானக் கிளியே மறைவனத்தில்
நடனக் கிளியே சிவக்கிளியே
பச்சைக் கிளியே அன்பர்மதி.
படரும் ஆவி ஓடையினில்
பரவுங் கிளியே நிதிக்கிளியே
பவழக் கிளியே பதிக்கிளியே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

வச்ரக் கிளியே நவபீட
Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
வாசற் கிளியே அருள் அமையும்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

ஞானப்பழம்

இதற்கு முந்தைய பாட்டில் அன்னை அபயாம்பிகையை கிளியே என்று பேசி மகிழ்ந்தார். இப்போது பழமே என்று உருகுகிறார். அன்னையைப் பழம் என்று சொன்னவர் அவள் சாதாரண பழம் அல்ல; பழமையான வேத விருக்ஷத்தின் முடிவிலுள்ள பழுத்தபழம் என்கிறார். சாதாரணப் பழமா அது? அருட்பழம் அல்லவா?

பக்குவமடைந்த அடியார்கள் நெஞ்சில் படரும் பழம் அது. நவ கோணங்களின் உச்சியில் என்றும் கனிந்து காணும் அழகிய பழம். சில பழங்கள் உண்பதற்குச் சுவையாக இருக்கும். வேறு சில பழங்கள் உண்பதற்குச் சுவையாக இருப்பது மட்டு மல்ல, காட்சிக்கும் அழகாய் இருக்கும். அதுபோல அன்னை காண்பதற்கும் உணர்வதற்கும் இனிய கனிந்த பழம்.

ஞானப்பழமாகிய அன்னை தேவர்கள் தேடித் தேடியும் அவர்களுக்கு எட்டாத பழம். ஆனால் அதே நேரத்தில் மண்ணுலகில் உள்ள மெய்யான அடியார்கள் அவளின் கருணையாலே கண்டு புசிக்கும் சிவப்பழம் என்கிறார்.

''ஏ! மனித ஜீவன்களே! நீங்கள் விரும்பி அடைய வேண்டிய பழம் ஞானப் பழமாகிய அன்னை அபயாம்பிகை. அவளால் அருளப்பட்ட வாழ்க்கையின் அர்த்தங்களைப் புரிந்து கொண்டு பசுவாகிய இந்த ஜீவனுக்கு பதியாக அமையும் அந்த பதிப் பழத்தை அடைய தவம் இருங்கள்'' என்கிறார் பட்டர்.

4. ''பண்டு மறையின் முடிவினுள்ளே
பழுத்த பழமே அருட்பழமே

2

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரிபூர கத்துப் பத்தர்நெஞ்சில்
படர்ந்த பழமே நவமுடிமேல்
என்றுங் கனிந்த திருப்பழமே
இமையோர் தேடித் தேடியுமே
எட்டாப் பழமே காசினியில்
எவர்தாம் தனையே உணர்ந்தோர்கள்
கண்டு புசிக்கும் பதிப்பழமே
கருணைப் பழமே சிவப்பழமே
கயிலாயத்தில் அரன்முடிமேல்
களிந்த பழமே கதிப்பழமே
மன்றுள் மணக்கும் அடியவர்க்கும்
மாயோ கியர்க்கும் உதவிநிற்கும்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

மலைமகளே

எல்லோரும் விரும்புவது இனிப்பு. ஏனெனில் நாவுக்கு சுவை தருவது அது. இனிப்புச் சுவை தருவது பாலும், தேனும், சர்க்கரையும். கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமோ என்பார்கள். இனிப்பு என்றால் வேண்டாதார் யார்?

அபயாம்பிகை பட்டர் அன்னை அபயாம்பிகையைத் தேனாக, பாலாக, சர்க்கரையாக, தெவிட்டாத அமுதாக, கற்கண்டாக, சீனியுடன் கலந்த பழச்சாறாக, பழத்தின் ரசமாக எண்ணிப் பாடுகிறார்.

அன்னை இமயமலையில் பிறந்து வளர்ந்தவள். கொடியைப் போன்றவள். வனத்தில் வசிப்பவள், அழகால் அவள் மயில்; குரலால் அவள் குயில். அடியவர்களுக்குச் செல்வங்களை அள்ளி வழங்குபவளும் அவளே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்த உடலை அருளியது அவள் கருணை, அதன் உள்ளே உயிர் ஊட்டியது அவள் பெருமை. மனத்தால் அவளையே எண்ணவேண்டும். வாயால் அவள் மொழியே பேசவேண்டும். தலையை அவள் திருவடியில் சாய்க்கவேண்டும். ஒளியைப் பெருக்கும் பொன்மயமான கற்பகம் அவளே. அக இருளை நீக்கி புற இருளைப் போக்கும் ஒளி அவள், அனைவருக்கும் கதி அவள்தான்

அவள் பரகாச வெளியில் திகழ்பவள். அவள் வானமாக, காற்றாக, கனலாக, நீராக, பூமியாக இருப்பவள். அவள் இமயமலையரசன் தவம் இருந்து பெற்ற தவமாம் தையல்.

அன்னை அபயாம்பிகை சன்னதியில் நின்று கொண்டு அவளின் அழகு திருக்கோலத்தையும், அவளுடைய பெருமையையும், அடியார்களுக்கு செல்வங்களை வாரி வழங்கும் அவளுடைய கருணையையும் எண்ணி உருகும் அபயாம்பிகைபட்டர் பார்க்கும் பொருளாகிய அன்னையும், பார்க்கும் தானும், பார்வையும் இவை மூன்றும் ஒன்றிப் போகும் வகையில் ஒருமைப்பாட்டு உணர்வில் ஒருவகை சமாதி நிலையை எய்தி விடுகிறார். அவருக்கு அன்னையிடம் தனக்காக ஏதேனும் கேட்க வேண்டும் என்று கூடத் தோன்றவில்லை. அபயாம்பிகையை புகழ்ந்து பேசி அவளைப் பற்றிய நாமாவளியை சொல்லிக் கொண்டிருப்பதே அவருக்குப் பேரானந்தமாக இருக்கிறது. அதுவே அவரை ஒருவகை சமாதி நிலைக்கு இட்டுச்சென்று விடுவதால் வேறொன்றும் அவருக்கு விண்ணப்பிக்கத் தோன்றவில்லை.

5. "தேனே பாலே சர்க்கரையே
　　தெவிட்டா அமுதே கற்கண்டே
சீனி யுடன்முப் பழச்சாற்றில்
　　சிறந்த ரசமே செம்பொன்மலை
மானே மடலே மடக்கொடியே
　　வளர்ந்த வனமே திருவதன

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
மயிலே குயிலே அன்பமரெலாம்
வாரிச் சொரியும் மணிநிதியே
ஊனே என்றன் உயிர்க்குயிரே
உள்ளும் புறம்பும் உறுமொழியே
ஒளிசேர் கனகக் கற்பகமே
உதித்த சுடரே திருப்பரமே
வானே வானின் வளிக்கனலே
வனமே பூவே வரைமகளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

தவசரணி

அன்னை ஐந்து வகை ஆபரணங்களைத் தரித்திருக்கிருள், அவள் பழமைக்குப் பழமையானவள், புதுமைக்குப் புதுமையானவள்.

''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் போத்துமப் பெற்றியனே''

என்று மணிவாசகர் சொன்னதுபோல் அன்னை அபயாம்பிகை பழமையும், புதுமையும் நிறைந்தவள் என்கிருர் அபயாம்பிகை பட்டர்.

அவள் எத்தனையோ ஆபரணங்களைத் தரித்து இருக்கிருள். அவளைப் பார்க்கிற பொழுது அவள் மிகப் பெரிய இடத்தைச் சேர்ந்தவள் போல் தோன்றுகிருள். மிகுந்த செல்வமும் செல்வாக்கும் உள்ள பெரிய மனிதர்களிடம் சாதாரணமானவர்கள் எளிதில் நெருங்கி உரையாட முடியாது. ஆனுல் இவள் அப்படி அல்ல. தன்னை எண்ணுபவர்களுக்குத், தன்னை தொழுபவர்களுக்குத் தன்னை நோக்கித் தவம் இருப்பவர்களுக்குத், தன்னிடம் சரண் அடைபவர்களுக்கு ஓடிவந்து அடைக்கலம் தருகிருள். தத்தி தத்தி நடக்கும் குழந்தை தாயை நோக்கி வருகிற பொழுது அந்தக் குழந்தையைப் பெற்ற தாய் ஓடி வந்து வாரி அணைத்துக் கொள்வதைப் போல அன்னை அபயாம்பிகை தன்னை எண்ணித் தவம் இருப்பவர்களுக்குத் தானே வந்து பரிபூரணமாக அடைக்கலம் தருகிருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவள் அப்படிச் செய்யக் காரணம் அவளே உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்துக்கும் தாய். அவள் பஞ்சாட்சரத்தில் உறைபவள்; தாமரைப்பூவில் வாழ்பவள்.

இந்த எண் சாண் உடம்பில் தொண்ணூற்றுறு நிலைகள் உள்ளன. அவை தொண்ணூற்றுறு தத்துவங்களைச் சொல்வன.

இந்தச் சரீரம் அழகான மதிர்சுவர்களால் அமைக்கப்பட்ட ஒரு அரண்மனை என்று திருமூலர் திருமந்திரத்தில் கூறுவார். இந்த உடலாகிய அரண்மனை உள்ளே தொண்ணூற்றுறு ஏவலாளர்கள் வேலை செய்கிறுர்கள். யோக முறைப்படி இந்த தொண்ணூற்றுறு தத்துவங்களும் 30, 30, 36 என்ற மூன்று நிலைகளாக நின்று உடம்புக்குள்ளே கருவிகளை இயக்குகின்றன. பேசுதல், கேட்டல், உணவு உட்கொள்ளுதல் ஜீரணம் செய்தல் முதலிய பல தொழில்கள் இந்த உடம்புக்குள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றையே தொண்ணூற்றுறு தத்துவங்கள் என்றனர் நம்முடைய பெரியோர்கள். இந்த எண் சாண் உடம்பில் இயங்கும் தொண் ணூற்றுறு தத்துவங்களையும், பணியாளர்களையும் இயக்கும் அரசி அவள் என்கிறுர் பட்டர்.

அந்த அன்னை இறைவனிடத்தில் எப்போதும் நடனமாடிக் கொண்டிருப்பவள். தேவர்களுக்கெல்லாம் அவள் அரசி. அவள் தாமரையைத் தான் வாழும் கோயிலாகக் கொண்டவள். அவ்வளவு பெரிய இடத்தில், பெரிய சாம்ராஜ்யத்தில் அரசியாக இருந்தாலும் அவள் அடியார்களுக்கு அருளுவதில் ஓடி வந்து கருணை புரிபவள். அவள் வாழும் இடத்திற்குப் பெயரே ''கருணலயம்'' தானே!

அடுத்து அம்பிகையின் கையிலுள்ள கரும்பு வில்லையும், பஞ்ச பாணங்களையும் பற்றி நமக்கு சொல்கிறுர். கரும்பு வில்லும், மலர் அம்புகளும் மன்மதனின் ஆயுதங்கள் அல்லவா! ஆனுல் அன்னை ஏன் அவற்றை வைத்திருக்கிறுள் தெரியுமா?

அன்னையை வணங்குபவர்களைக் காம விகாரங்கள் நெருங்காது. அவள் நம்முடைய ஐந்து வகையான அழுக்குகளை எல்லாம் தன் அருட்புனலால் போக்கி நமது உள்ளத்தையே கோயிலாகக் கொள்பவள், அதுவே அவள் கருணை! அவள் அருட்கடல் அல்லவா!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

6. "பஞ்சா பரணி நவபூர்ணி
பரணு பரணி தவசரணி
பரமேஸ் வரியே ஈஸ்வரியே
பஞ்சா க்ஷரத்தி பங்கயத்தி
எண்சாண் உடம்பில் தொண்ணூற்ரு
றிசைந்த தத்வா திகமுகமே
இறையோ னிடத்தில் நடனமிடும்
இமையோர்க் கரசே ஏகவெளிக்
கஞ்சா சனத்தின் நிலையாளே
கருணு லயத்துள் உறைபவளே
கன்னற் சிலையும் ஐங்கணையும்
கரத்தில் சிறந்த பரைத்திருவே
அஞ்சா ணவங்கள் அகன்றடியார்
மனத்துள் உறையும் அருட்கடலே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

மணியே

மாணிக்கம், வைரம், வைடூரியம் போன்ற விலை மதிப்பற்ற கற்களை மணி என்று சொல்வது வழக்கம். அபயாம்பிகை பட்டர் அன்னை அபயாம்பிகையை "அருள்மணி" என்கிருர். நாமெல்லாம் கேள்விப்பட்டிருப்பது அல்லது காண்பது "பொருள் விலை மதிப்புள்ள" மாணிக்கம் வைரம் போன்ற மணிகளை. ஆனால் இவர் சொல்வது "அருள் மணியான" அபயாம்பிகையைப் பற்றி.

நமக்கெல்லாம் பொருள் மணியைப் பற்றித்தான் தெரியும். மெய்யுணர்வு கூடிய அபயாம்பிகை பட்டர் போன்ற ஜீவன் முக்தர்களுக்குத்தான் "அருள் மணியைக்" காணவும் அது பற்றி எடுத்து இயம்பவும் முடியும். அன்னை அபயாம்பிகை எங்கும் நிறைந்தவளாகையால் அவளை எங்கும் "நிறைந்த அருள்மணி" என்று சொல்லுகிருர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Cholinganallur, Chennai

அவளுக்கு ஒப்புவமை இன்ஞெரு பொருள் இல்லாததால் அவளே எங்கும் நிறைந்த அருள் மணியும் ஏக மணியும் ஆவாள். அந்த மணியைப் போன்று பிரகாசிக்கக் கூடிய இன்ஞெரு பொருள் இந்த ஈரேழு பதினன்கு உலகங்களிலும் இல்லே.

அவள் பெருமை இன்னமும் கூடுவதற்குக் காரணம் பல உண்டு. அவள் சாதாரணமாகத் தோன்றியவள் அல்ல. இமய பர்வத ராஜன் தவம் இருந்து அடைந்த தவமாம் தையல் அவள். சர்வேஸ்வரனிடத்தில் நடனமிடுபவள், அவள் புதுமைக்குப் புதுமையானவள் பழமைக்கும் பழமையானவள். அவள் நவமணி.

அந்த அன்னே அடியவர்களுக்குத் தஞ்சம் அளிக்கும் அஞ்சல் நாயகி. இரவையும் பகலேயும் கடந்து அப்பாற்பட்ட பராகாயத்திலே தோன்றிய கலேகள் நான்கு உடைய திருமணி. கலே என்ருல் ஞானம் என்று பொருள். நான்கு வகையான ஞானங்களே உடைய கருணேத் தெய்வம் அன்னே அபயாம்பிகை. அந்த நான்கு வகை ஞானங்கள் எவை? சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனேயறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம், உவமையிலாக் கலேஞானம், உணர்வரிய மெய் ஞானம். இரவையும் பகலேயும் கடந்து அப்பாற்பட்ட பரகாயத்திலே தோன்றிய மேலே குறிப்பிட்ட கலேகள் நான்குமுடைய அழகிய மணி அவள்.

அந்த அன்னேயைக் கண்ணின் மணியாகக் காணலாம். பொன்னின் மணியாகக் காணலாம். தாமரை மலரில் வளரும் மணியாகவும் காணலாம். அவள் அடியார்கள் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு தவமிருக்கும் தவமணி. உலகுக்கு எல்லாம் ஒளிதரும் சூரியனிலும், சந்திரனிலும் ஒளிரும் தளிர் மணி ஆவாள்.

அறிவு இரண்டு வகைப்படும். ஒன்று விஞ்ஞான அறிவு மற்றது மெய்ஞான அறிவு. விஞ்ஞான அறிவு மங்கும், மெய்ஞான அறிவு பொங்கும். மங்கும் விஞ்ஞான அறிவை மங்காமல் நிலேநிறுத்தி மெய்ஞ்ஞான அறிவைப் பொங்கச் செய்பவள் அன்னே அஞ்சல் நாயகி. அவள் ஆகாயத்தை முகமாகக் கொண்டு பிரகாசிப்பவள். அந்த அன்னேயை வணங்குவோம் வாரீர் என்று நம்மை அழைக்கிருர் அபயாம்பிகை பட்டர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

7. "எங்கும் நிறைந்த அருள்மணியே

Vaidika Pandit Sri D Hariharan Collection, Sholinganallur, Chennai

ஏக மணியே ஒளிர்மணியே
இறையோ னிடத்தில் நடனமிடும்
கங்குல் பகலும் கண்டவெளிக்
கலைநான் குடைய திருமணியே
கண்ணின் மணியே பொன்மணியே
கமலா சனத்தில் வளர்மணியே
தங்கும் அடியார் இதயமதில்
தழைத்த மணியே தவமணியே
தரணிக் கொளியாய் இரவுபகல்
தானே வளர்ந்த தளிர்மணியே
மங்குங் கருத்தை நிலைநிறுத்தி
வதன வெளியில் படர்ம்ணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

யோக முக்தி

"ஏ! மனித ஜீவன்களே! நீங்கள் ஆசைகளை ஒழித்து பிறவிக் கடலிலிருந்து விடுபட, அலையும் மனத்தை அம்பிகையின் திருவடியில் நிலைநிறுத்துங்கள்.

மனித உடலில் மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாஹதம், ஆக்ஞை என்ற ஆறு நிலைகள் உள்ளன.

மூலாதாரத்தின் மேலே அக்னி இருக்கிறது, யோகம் செய்பவர்கள் அந்த அக்னியை எழுப்புவார்கள், அதற்கு மேல் சுருண்ட பாம்பு போன்ற குண்டலினி சக்தி இருக்கிறது. அந்த அக்னி எழக் குண்டலினி சுருண்டிருந்தது நீண்டு முன்போகும் மெல்ல மெல்ல ஒவ்வொரு ஆதாரமாகத் தாண்டி ஆறு ஆதாரங்களுக்கும் மேலே உள்ள சந்திர மண்டலத்தை அந்த அக்னி தாக்கச் செய்தால், அப்போது அங்கிருந்து அமுதம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உண்டாகும். அதை உண்டவருக்கு நரை, திரை, மூப்புப் போகும் என்று யோகிகள் சொல்வர்.

ஆறுதாரத்தின் மூலமான மூலாதாரத்தின் மேலே உள்ள அக்னியை அடியிலிருந்து எழுப்பி நடுவில் உள்ள ஆதாரங்களின் வழியே கொண்டு வந்து அருணாசலம் என்ற செஞ்சோதியாகக் காட்சி அளிக்கும் புருவ மத்தியிலுள்ள சுழுமுனை நாடியின் வழியைத் திறந்து வாயுவை வெளியிட்டு நிறைத்து, சந்திர மண்டலத்தை அந்த அக்னி தாக்கச் செய்தால், அப்போது அங்கிருந்து அமுதம் உண்டாகும், யோகத்தின் சாதனையால் கிடைத்த அந்த அமுதத்தை உண்டால் ஒன்பது துவாரங்களை உடைய இந்த உடலை நீக்கி துவாத சாந்தப் பெரு வெளியில் உலவலாம். இது யோக வழியில் கிடைக்கும் முக்திநிலை.

அப்படி உன்னை யோக வழியில் வழிபட்டு குண்டலினியை மூலதாரத்திலிருந்து எழச் செய்து சந்திர மண்டலத்தை அக்னி தாக்கச் செய்து அமுதம் அடியேன் உண்டு உடலை நீக்கி துவாத சாந்தப் பெரு வெளியில் உன் கருணை சாம்ராஜ்யத்தில் உலவ அந்த ஞானப் பெருமிதத்தில் விம்மி உன்னையே சிந்தித்திருக்க நீ அருள் புரிய வேண்டும்.

நீ என் மனத் தாமரையில் வீற்றிருந்து அருள் பாலித்தால்தான் நாயினும் கீழான அடியேனுக்கு அந்த ஞானப்பெருநிலை கிடைக்கும். ஆகவே தாயே விரைவில் வந்து எனை ஆட்கொண்டு என் மனத் தாமரையில் வீற்றிருப்பாயாக!

8. ''அழியச் சனன அலைமுழுதும்
அலையும் மனத்தை நிலைநிறுத்தி
ஆறுதார அடிநடுவுள் அருணு
சலத்தின் வேரினுள்ளே
சுழியைத் திறந்து வாயுவதாற்
சூழ்ரே சகபூ ரகத்தாலுந்
தோன்றுங் கும்ப காதியுடன்
சோதி படரும் ஞானவெளி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விழியுந் திறக்கும் மதிக்குழம்பு
மிகுந்து சுரக்கும் நவக்கிரக
வெளியா மேலே வெளிபடர்ந்து
விம்மித் தனையாய்ந் திருக்க அருள்
வழியைப் பொருத நாயடியேன்
மனத்தா மரையுள் நீவருவாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

ஒளியும் ஒலியும்

முக்தி நிலையை இந்த சரீரத்துடன் வாழும் காலத்திலேயே அடைந்து அன்னை அபயாம்பிகையின் திருக்கோலத்தை நேருக்கு நேர் தரிசிக்கும் பாக்கியத்தை அடைந்த ஜீவன் முக்தி நிலையில் ஆனந்தக் கூத்தாடுகிறார் பட்டர் இந்தப் பாட்டில்.

அமுதை உண்டால் தான் ஆனந்தம். அன்னையே உன்னைக் கண்ணால் கண்டாலே ஆனந்தம். உன்னைக் கண்ணால் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற இந்தக் கண்தான் எப்படி ஆனந்தப் படுகிறது தெரியுமா? கண் அடைந்த மகிழ்ச்சியால் நாக்கு குழறுகிறது. உடல் புல்லரித்து புளகாங்கிதம் அடைகிறது. உயிரும் பரமானந் தத்தில் திளைக்கிறது. தாயே! இந்த ஆனந்த நிலையை இப்போது எனக்கு அருளும் நீ எப்போதும் கருணை கொண்டு அருள வேண்டும்.

தாயே! அமுதத்தைப் பருகும் பாக்கியத்தை விண்ணுலகில் வாழும் தேவர்களுக்குத் தான் இது வரையில் நீ அருளியிருக்கிறாய்! மண்ணுலகில் பிறந்து அவதியுறும் எனக்கும் நீ அந்த அமுதத்தை வழங்கிய கருணையை நான் எப்படிப் போற்றுவேன்?

சிவபுரம் உனது நாயகனின் சாம்ராஜ்யம். அந்த சாம் ராஜ்யத்தை ஆளும் பேரரசனாகிய பெம்மான் உனை அடைய தவ மிருந்தான். அவன் தவத்தால் விளைந்த கனி நீ, அந்த நாயகன் தவம் இருந்து அடைந்த கனியாகிற நீ, எனக்குப் பரந்த கடல் முழுதும் பரவிக் கிடக்கும் தேன்! உன் கோலத்தை எப்படி எப்படி யெல்லாம் அருள் கொண்டு எனக்குக் காட்டும் அந்த மாய விநோதத்தை நான் எவ்வாறு போற்றுவேன்?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai.

ஒரு சமயம் கடல் முழுவதும் பரவியது [illegible] காட்சியளிக்கும் நீ அடுத்த கணத்திலேயே நாலா பக்கமும் பரவிய தாமரையில் ஓடி வந்து உட்கார்ந்து கொள்கிருய். ஒரு கணம் அந்த அழகுத் தாமரை என் கண்களுக்குத் தெரிகிறது. நொடிப் பொழுதில் அதே தாமரையில் ஒரு சுடர் ஒளி வீசுகிறது. சட்டென்று கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தால் தாமரையில் தெரியும் அந்தச் சுடரில் கருணை ஊற்ருன உன் கண்கள் தெரிகின்றன. இது என்ன மாயக் கருணை தாயே!

ஜீவித காலத்திலேயே தெய்வத்தை நேருக்கு நேர் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற ஜீவன் முக்தர்கள் ஆனந்தப் பெரு வெள்ளத்தில் திளைப்பார்கள். அந்தப் பரமானந்த நிலையில் அவர்கள் ஏதேதோ பேசுவார்கள்.

அந்தப் பேச்சுக்களை பார்க்கிற போது சாதாரண நிலையில் உள்ள சராசரி மனிதர்களுக்கு அவர்களுடைய பேச்சுக்கள் ஒரு பைத்தியக்காரனின் பேச்சு போலத் தோன்றும். அந்த மொழிகளைச் சொன்னவர்களின் மன நிலையில் நின்று பார்த்தால் தான் அந்த மொழிகளின் பெருமை தெரியும்.

அன்னை அபயாம்பிகை அருவமும் ஆனவள்; உருவமும் ஆனவள். தெய்வம் உருவமற்றது.

அடியார்கள் மேல் கருணை கொண்டு தன் உருவமாக சில கோலங்களைத் தெய்வம் காட்டுகிறது. இப்படிச் சொல்லுவதன் பொருள் என்ன என்று நாம் சிந்திக்க வேண்டும். அந்த தெய்வத்தை இறைவனுக வழிபடும் பொழுது ஓர் ஆண் உருவில் அவனைக் காண்கிரேம். அன்னையாக வழிபடும் போது ஒரு பெண்ணுக அவளைப் பார்க்கிரேம். இப்படி ஆணுக, பெண்ணுகத் தோற்றமளிக்கும் தெய்வம் உலகில் சரீர உருவில் உலவும் மற்ற ஆண், பெண்களைப் போன்றதல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அபயாம்பிகை ஒளிவடிவானவள், ஒலி வடிவமானவள் என்று உணர்த்த பட்டர் அருவமும், உருவவுமான தோற்றத்தை "பெண்ணுனவள்" என்றும், "ஆணுனவள்" என்றும் இரண்டு மற்ற "அலியானவள்" என்றும், அவள் "ஒலி வடிவமானவள்" என்றும் பேசி இப்படிப் பேசும் பேதையாகிற

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

நாயினும் கீழான தன் இதயத் தாமரையில் கருணை கொண்டு கொலு வீற்றிருக்கும் தவக் கொழுந்து அன்னை அபயாம்பிகை என்று போற்றுகிறார்.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

9. "கண்ணு ரமுதே உனை எனது
கண்தான் களிக்க மொழிகுழறக்
கதிக்க உயிரும் உடல்புளகங்
காணும் பருவம் பெறுவேனே
விண்ணு ரமுதே சிவபுரத்தில்
விளைந்த கனியே தேன்கடலே
வீசிப் படர்ந்த கமலத்தில்
வீற்றே யிருக்கும் விழிச்சுடரே
பெண்ணு னதுவே ஆண்வடிவே
பேணும் அலியே பிறங்கொலியே
பேதை நாயேன் இதயமதிற்
பிரியா திருக்குந் தவக்கொழுந்தே
மண்ணு டியவன் இடப்பாகம்
வளருங் கொடியே மடமயிலே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

அறக்கருணையும், மறக் கருணையும்

நோய் என்பது உடலுக்கு வருகின்ற கோளாறு. நோய்வாய்ப் பட்டவர்கள் மருத்துவரை அணுகி தன் உடல் நிலையைச் சொல்லி மருந்து உட்கொண்டால் நோய் தீரும். நோய் என்பதிலிருந்து மாறுபட்டது "பிணி". நோய் மருந்து சாப்பிட்டால் தீர்ந்து விடும். பிணி அதற்குரிய மருந்தினை உட்கொண்டால் தீரும். ஆனால் மறுபடியும் அந்தப் பிணி தொடரும். பசியைப் பிணி என்பார்கள். பசிப் பிணி தீர உணவு உட்கொண்டால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அது தீரும். அதே பசிப் பிணி, உண்ட உணவு ஜீரணமானவுடன் மீண்டும் தோன்றும்.

வாழ வழியில்லாத ஒரு பிச்சைக்காரன் பல இடங்களில் பிச்சை எடுத்து கிடைத்ததை உண்டு பசிப்பிணியிலிருந்து விடு பட்டான். உண்ட திருப்தியோடு நன்ருக உறங்கினன். உறக்கம் நீங்கி விழித்துக் கொண்டான். அவன் உள்ளத்தை கவலை பற்றிக் கொண்டது ''ஐயோ! நேற்று அந்தப் பசி என்னும் கொடுமையான 'பிணி' என்னை எப்படியெல்லாம் வாட்டியது? பிச்சை எடுத்து கிடைத்த உணவை உண்ட பிறகு அந்தப் 'பிணி' நீங்கியது. ஐயோ! அதே 'பிணி' இன்று வந்து வாட்டுமே! இறைவா! நான் என் செய்வேன்?'' என்று வருந்துகிருன்.

பசி என்ற பிணி மீண்டும் மீண்டும் வந்து போகும். பசி என்னும் நீங்காத பிணியைப் போல வேறு சில நீங்காத பிணிகளும் உண்டு. ''அறியாமை'' என்று பிணியில் வரும் மயக்கம் ஒரு வகைப் பிணி. பிறவி என்பதும் ஒரு வகைப் பிணி. பிறந்தும் இறந்தும், மீண்டும் பிறந்தும் அவதியுறுகிறது அல்லவா இந்த உயிர்?

அறியாமை என்னும் மயக்கப் பிணியை நமக்குக் கொடுப்பது ''ஆணவம்'' என்னும் மலம். அந்த அறியாமை மயக்கம் என்ற தீராப் பிணி தொலைய வேண்டுமானல், ஆணவ மலம் அழிய வேண்டும். அந்த ஆணவ மலத்தை அழிக்கும் அருமருந்து அன்னை அபயாம்பிகைத் தாயின் கருணை.

நோய்க்கு உரிய சில மருந்துகள் உடன் கிடைக்கும். சில மருந்துகளைத் தேடி அலைந்தால் தான் அவை நமக்குக் கிடைக்கும். அப்படித் தேடிப் பெறக் கூடிய அருமருந்துதான் அன்னையின் கருணை.

அபயாம்பிகை பட்டர், அன்னையின் பெருமையையும் அவளது பரம கருணையையும் புகழும்போது வாழ்வில் நிறைந்த வளமும் செல்வமும் உடைய தேவர்களால் உணர முடியாத அன்னையை, தன்னைப் போல மிகச் சாமானியன் உணரும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

பாக்கியம் கிடைத்தமைக்கு உருகுகிறார். அடியார்களுக்கு
Vaidika Pandit Sri V Harihanaran Collection, Sholinganallur, Chennai
உதவுவதில் ஓடி வந்து பணி செய்யும் கண்ணனின் சகோதரியல்லவா அவள்! "கஜேந்திரன்" ஆதிமூலமே என்று கூவியவுடன் ஓடி வந்தவன் அந்த நாராயணன். துரியோதனன் சபையில் துச்சாதனன் பாஞ்சாலியை துகிலுரிந்த போது திக்கற்ற அவள், "கோவிந்தா! ஹரிஹரி" என்று நாக்குக் குளற மெய்ப்புளகம் அடைய கூவிய போது, துச்சாதனன் கை சோர, மெய் சோர "வளர்ந்தன, வளர்ந்தன வண்ணப் பொற்சேலைகள் கண்ணன் கருணையால்" என்று பாரதி சொன்னான் அல்லவா? அந்தக் கருணையுள்ள திருக்கிருஷ்ணன் தங்கச்சி அல்லவா தாய்! உன் அண்ணனுக்கும் உனக்கும் அடியார்களுக்கு ஓடி வந்து உதவும் குணம் என்பது உடன் பிறந்த குணமல்லவா? என்று பேசுகிறார் பட்டர்.

தாயே! வேதம் தான் உன் பெருமையைத் தெள்ளத் தெளிய சொல்லியிருக்கிறதே! "உன்னை ஆராதிப்பவர்களுக்கும் பூசிப்பவர்களுக்கும், உன் திருநாமங்களை உள்ளத்தால் நினைத்து வாயால் சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கும் சகல சௌபாக்கியங்களையும் நீ அருளுவாய் என்ற உண்மையை இந்த வேதம் எவ்வளவு அழகாகச் சொல்லுகிறது". அடியார்களுக்கு எல்லா சுகங்களையும் அருளுவதுடன் உனது அடியார்கள் உன்னால் அருளப்பட்ட இன்பங்களை அனுபவிக்கும் போது அதைக் கண்டு ஆனந்தப்படுபவள் நீ! இது என்னே அரிய கருணை!

உலக வாழ்வில் மிகவும் கஷ்டப் பட்ட ஒருவன் நல்ல நிலையை அடைந்து வீடு, கார், செல்வம் எல்லாம் பெற்ற போது அவன் கஷ்டப்பட்ட காலங்களை அறிந்த சில மனித உள்ளங்கள் இவனுக்கு வந்த வாழ்வைப் பார்த்தாயா?' என்று பொறாமையால் புழுங்கும்.

அடியார்களுக்கு சௌபாக்கியங்களை வழங்கும் சௌபாக்கியதாயினியாகிற நீ, வழங்குவதுடன் நில்லாமல் உன் குழந்தைகளாகிற அடியார்கள் இன்ப சுகங்களை அனுபவிக்கிற போது அதைக் கண்டு எப்படி ஆனந்தப் படுகிறாய்! உன் கருணையிற் சிறந்த கருணையிது!

இத்தகைய கருணையும் ஒருவகை ஆன்மநேய ஒழுக்கமே. அத்தகைய குறியும் கோலமும் கொண்ட நீ, என்னை ஆட்கொண்ட

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
நிமலி (நிர்மலி என்பது நிமலி என்று திரிந்தது). நீ மலம் நீங்கியவள். எனவே நீ அமலே. வாராகினி என்பது அன்னையின் திருநாமங்களுள் ஒன்று. அன்னை பராசக்தி வராகானந்த நாதருக்கு வராக திருமுகத்துடன் காட்சியளித்ததை உணர்த்துவதாகும் இது.

தெய்வங்கள் அடியார்களுக்கு அருள் புரிவது அறக்கருணை. துஷ்டர்களைக் கண்டித்து அருள்புரிவது மறக்கருணை. துஷ்டர்களின் தீயகுணங்களைக் கண்டு கோபிக்கும் அன்னை அபயாம்பிகை அவர்களை அடியோடு அழிக்க எண்ணுவதில்லை. அதற்குப் பதில் துஷ்டர்களின் தீய குணங்களை அழித்து மறக் கருணையால் அவர் களையும் ஆட்கொள்ளுவாள்.

எனவே தான் நல்லவர் தீயவர் எல்லோருக்கும் கருணை செய்யும் அவளை அபயமளிக்கும் நாயகியாக நாம் கொண்டாடு கிறோம் என்கிறார், அபயாம்பிகை பட்டர்.

சூரபன்மாவை மறக் கருணையால் ஆட்கொண்ட முருகப் பெருமான் அவனைக் கோழியாகக் கொடியிலும் மயிலாக வாகனத்திலும் ஏற்றுக் கொள்வது கந்தன் கருணை.

10. ''தீரா' மயக்கப் பிணிநோயைத்
தீர்க்கும் மருந்தே அருமருந்தே
தேவா திகளும் அறியாத
கிருஷ்ணன் ஆதி சகோதரியே
ஆரா திப்பார் பூசிப்பார்
அமைந்துன் நாம மதை நினைப்பார்
அடுத்தோர் இன்ப சுகமனைத்தும்
அடையும் எனவே மறைவிளம்ப
நேரே யிருந்து களிப்பவளே
நித்யா னந்த சுகப்பொருளே
நெறியே குறியே எனைஆளும்
நிமலி அமலே சுகத்தாளே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாரா கிளியே துட்டரிடா
மனத்தை அழிக்குஞ் சினத்தாளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே''

ஞான சொரூபி

அல்லும் பகலும் அனவிரதமும் அன்னையையே நினைத்துக் கொண்டிருக்கும் அபயாம்பிகை பட்டரின் தியானப் பார்வை ஆழமானவை, தீர்க்கமானவை.

இந்த உடல் பொய்யானது; அதன் உள்ளே இருக்கும் ஆன்மா மெய்யானது; மனித ஜீவன்கள் அழியும் உடலை மாயையால் மெய்யானது என்றும் நிலையானது என்றும் கருதுவார்கள். இந்த உடலைப் பற்றியே நாம் கவலைப் படுவோம். நம்மை உய்வித்து பிறவிப் பிணியிலிருந்து மீட்கும் எண்ணம் கொண்ட கருணைக் கடலான அன்னை அபயாம்பிகை இந்த ஆன்மாவை தன் அருட்புனலால் துடைப்பாள். அவள் கருணை எப்போதும் ஆன்மாவையே படர்ந்திருக்கும். அன்னையை தாமரையில் வீற்றிருப்பாள் என்றும், அவள் கருணைகொண்டு தங்கள் இதயத் தாமரையிலும் வீற்றிருக்க வேண்டும் என்று விரும்பும் அடியார்கள் அன்னையிடம் அப்படியே விண்ணபித்துக் கொள்வார்கள்.

ஆன்மாவைப் படர்ந்திருக்கும் அருட்கடலான அன்னையைத் துதிக்கும் அபயாம்பிகை பட்டர் அவள் சாதாரண தாமரையில் வீற்றிருப்பவள் அல்ல என்றும், அவள் வீற்றிருக்கும் தாமரை ஞானத்தாமரை என்றும் கூறுகிறார். ஞானத்தாமரையில் விரிந்து பரந்து இருக்கும் பரம கருணாநிதியான தாய் நம்முடைய வினைகளை அகற்றும் எண்ணத்தோடு அப்படி வீற்றிருக்கிறாள்.

உலகிலுள்ள உற்றார் உறவினர் மீதும் பொருட்கள். செல்வங்கள் மீதும் பற்று வைக்காமல் அன்னையின் திருவடித்தாமரையைத் தவிர வேறுபற்று இல்லாமல் தவமியற்றுபவர்கள், முனிவர்கள், இப்படி அன்னையைத் தொழும் மன வளம் தங்களுக்கு அருளிய வளும் பரம கருணாமூர்த்தியான அம்பிகைதான் என்று மகிழ்வார்கள். தெய்வத்தைத் தொழுது நல்வினைகளை இயற்றி அதன் பயனாக விண்ணுலகம் அடைந்து வானுலக இன்பத்தை அனுபவிப்பவர் களும் அன்னையின் கருணையை உறுதியுடன் எண்ணி மகிழ்வார்களாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
அஞ்சல் நாயகியான அன்னை யோகநெறியில் தன்னை வழி படுபவர்களுக்கு புருவ மத்தியில் தோன்றி காட்சியளிப்பவள். அத்துடன் மனித உடலிலுள்ள 6 நிலைகளில் ஒன்முன ஆக்ஞையிலும், அதற்குமேலான துவதசாந்தப் பெருவெளியிலும் காட்சிதருகிறுள்.

தாமரையில் விற்றிருப்பவன் பிரம்மன். அந்த பிரம்மனின் துணைவி கலைமகள். அந்தக் கலைமகள் தினமும் அன்னை அபயாம் பிகையைத் துதிக்கிருளாம் அன்னையே ஒரு சமயம் மலர்த் தாமரையில் வீற்றிருப்பாள். மற்ருெரு சமயம் அடியார்கள், அல்லாதவர்கள் என்று வேறுபாடு இல்லாமல் கருணை செய்யும் அபயாம்பிகை உயிர் உள்ளவை அல்லாதவை என்று கூட பாராமல் தனது பரம கருணையால் அனைத்தையும் தழுவிக் கொள்ளும் ஞான சொரூபி என்கிருர் பட்டர்.

அன்னையை உலகில் அடங்கா அருள்மலை என்றும், பன்னிரங்களோடு கூடியனவும் சிவத்தனவுமாகிய நவமணிகள் வடிவானவள் என்றும் புகழ்ந்து மகிழ்கிருர் அபயாம்பிகை பட்டர்.

11. “மெய்யிற் படர்ந்த அருட்கடலே
விளையும் ஞான முளரியினில்
விரிவாய்ப் பொருந்தும் பரநிதியே
வினையை அகற்றும் பதம் உடையாய்
உய்யுந் தவத்தோர் மேலோர்கள்
உறுதி யுடனே மகிழ்பதியே
ஒன்ரும் யோக முடிவதனில்
ஒளியாய் வெளியாய் உதித்தவளே
செய்ய கமலத் தயன்மனைவி
தினமும் பணியும் திருவருளே
தேகா தேகக் கோடியெலாஞ்
சிறந்து நிறைந்த சின்மயமே
வையத் தடங்கா அருள்மலையே
வருண அருண ஒளிமணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!”

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிரணவஸ்வரூபி

அன்னை அபயாம்பிகையைத் தவிர வேறு தெய்வங்களை வழிபடாத ஸ்ரீ வித்யா உபாசகரான பட்டர் உலகில் எல்லாமாக இருப்பவளும் அவளே, உலகை இயக்குபவளும் அவளே என்கிறார்.

எழுத்தின் மூலம் ஒன்றே. அதுதான் ஓம் என்னும் பிரணவம். அதுவே அகாரம் உகாரமான இரண்டாகவும் உள்ளது.

அந்த மூல எழுத்தான ஓம் என்னும் பிரணவஸ்வரூபியாக இருப்பவள் அபயாம்பிகை. மூல மந்திரமாக இருக்கும் அவள் அதில் அகாரம், உகாரம் இரண்டுமாகவும் உள்ளாள். அவளே ஒன்று இரண்டாகி வளர்ந்து, ஐந்தாக பஞ்சாக்ஷரமாகி, மேலும் வளர்ந்து அஷ்டாக்ஷரமாகவும் ஒளிர் விடுகிறாள். இப்படி மந்திரஸ்வரூபமாக உள்ள தாய் வானமாய், வளியாய், கனலாய், வனமாய்-இந்த பூமியாய் பஞ்ச பூதங்களாகவும் திகழ்கிறாள்.

முனிவர்கள் வேதம் ஓதியே வழிபாடு செய்து, இறைவனை வேத ஒலியில் கண்டு மகிழ்வார்கள். ருக், யஜூர் சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களின் வேராகவும் அதன் கிளைகளாகவும் அதன் கொழுந்தாகவும் இருப்பவள் அன்னை பராசக்தி. அவளை "வேதஜனனி" என்றே லலிதா சஹஸ்ரநாமம் கூறும்.

அவள் வேதங்களாக மட்டுமா இருக்கிறாள்? அறுவகை சாத்திரமாகவும் அவள் திகழ்கிறாள். தர்க்கம், வியாகரணம், மீமாம்சை, சந்தோபிசிதி, நிருத்தம், சோதிடம் முதலிய அறுவகை சாத்திரங்களும் அவளே! அது மட்டுமா? மனித உள்ளங்களை நெறிப்படுத்தி, வாழ்க்கையை முறைப்படுத்தி, பரிபூரண ஆனந்தத்தை அளிப்பதற்காகவே தோன்றிய 18 புராணங்கள் ஆதமங்களாகவும் அவளே திகழ்கிறாள்.

எல்லாமாக உள்ள அன்னை பராசக்தி நன்கு சிந்தித்து சிறப்பாக உலகை படைக்கும் தொழிலை பிரம்மனுக்குக் கொடுத்துள்ளாள். அதே போல படைக்கப் பட்டவைகளைக் காக்கும் பொறுப்பை தனது சகோதரன் திருமாலிடமும் உரிய காலத்தில் சங்காரம் செய்யும் பொறுப்பை தனது துணைவன் சிவபெருமானிடமும் ஒப்படைத்துள்ளாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

இப்படி பணிகள் செய்ய ஆட்களை நியமிக்கும் எஜமானியாக, உலக சாம்ராஜ்யத்தின் மஹாராணியாகத் திகழும் அவள், இந்தப் பணிகளைச் செய்யும் பொறுப்பினை அவர்களுக்குக் கொடுத்தாலும், அந்த செயல்களைச் செய்யும் சக்தியாகவும் இருக்கிறாள்.

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

இவ்வளவு பெரிய வேலைகளையெல்லாம் செய்பவள் யார் தெரியுமா? இமவானுடைய புதல்வியாகத் தோன்றியவளும் மயிலாடுதுறையில் கோலோச்சும் சிவபெருமான் மயூர நாதனின் மனைவியும் அடியார்களுக்கு அபயமளிக்கும் அஞ்சல் நாயகியுமான அன்னை அபயாம்பிகையே!

12. ''வன்னம் ஒன்றாய் இரண்டாகி
வளர்ந்தோ ரைந்தாய் எட்டாகி
வானாய் வானின் வளிக்கனலாய்
வனமாய்ப் பாராய் வகைஐந்தாய்ப்
பன்னும் மறையோர் நான்காகிப்
பரந்த சாத்ர முடன்ஆறாய்ப்
பதினெண் புராண ஆகமங்கள்
பரிந்தோ ரிருபத் தெட்டாகி
உன்னி நெடுமால் அயனாலும்
உலகை வகுக்கக் காப்பாற்ற
உடனே சங்கா ரித்திடவும்
உமையா ளொடுதன் கேள்வனுமாய்
மன்னி நிதமும் ஆட்டிவைத்த
மதலாய் இமவா னுடைமகளாய்
மயிலா புரியில் வளர்ஈசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

☆

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

... Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

மனித வாழ்க்கை என்பது பிறப்புக்கும், இறப்புக்கும் இடையில் நடைபெறும் விசித்திரமான நாடகம். சிலருடைய வாழ்நாள் எழுபது வருடமாக இருக்கலாம்; இன்னும் சிலரது வாழ்க்கை நாற்பது வருடமாக இருக்கும். ஆனால், இம்மண்ணில் தோன்றியவர்கள் மனத்தில் மட்டும் ஒரு மயக்கும் குடி கொண்டிருக்கும். • அது என்ன மயக்கம்? இந்த உலகில் நாம் என்னவோ கற்ப கோடி காலம் வாழப்போகிறோம் என்ற உணர்வு தான் அது. சாவு என்ற ஒன்று வரும் என்ற நினைப்பு எவருக்கும் வருவதில்லை. அந்த உணர்வு நம் உள்ளத்தில் எப்போதும் இருந்தால் உலகில் நடக்கும் பல குற்றங்கள், அநியாயங்கள், ஆக்ரமிப்புகள் எல்லாமே குறையும். உலக வாழ்வு சாசுவத மானது என்ற மயக்க உணர்வினை நமக்கு அருளியது கூட அன்னையின் திருவிளையாடல் தான்.

அத்தகைய மயக்க உணாவு இருப்பதால் தான் இந்த மாயா வாழ்க்கையில் மயங்கி, நம்மைப் போலவே உலகில் ஜனித்துள்ள நிரந்தரமில்லாத மனிதர்களின் மேல் உற்றார், உறவினர், உடன்பிறப்புக்கள் என்ற பாசம் ஏற்படுகிறது.

அன்னை அபயாம்பிகையின் அருளால் மெய்யுணர்வு பெற்ற சான்றோனான அபயாம்பிகை பட்டர், அன்னையைப் பார்த்து இப்படிப் பேசுகிறார். தாயே! எனக்குத் தந்தை என்றும் தாய் என்றும் சுற்றத்தார் என்றும் கொடுத்திருக்கிறாய். இப்படி ஒரு வாழ்வினை எனக்கு அருளி பந்த பாசங்களால் என்னைக் கட்டிப் போட்டிருக்கிறாய். ஆனால் தாயே உன் அருளால் இந்தக் கட்டுக்களை அறுப்பேன். ஓடிவந்து உன் திருவடிகளைப் பிடிப்பேன். எனக்குத் தெரியும், இந்த என்னுடைய உயிர் உனது. இந்த உடலும் நீ அருளியதால் உனதே! எனவே நான் செய்யும் காரியங்கள் அனைத்துக்கும் பொறுப்பு நீ தான்.

தாயே நான் உனது அடிமை என்று உலகில் எல்லோருக்கும் தெரியும். நான் அவ்வளவு பிரபலமானவன் என்ற மமதையில் கூறுகிறேன் என்று நினைப்பாயோ? அப்படி நினைக்கமாட்டாய். நான் இப்படிச் சொல்லுவதின் பொருள் உனக்குப் புரியாதா?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எனக்கு என்று ஒரு வாழ்க்கையோ, உன்னைத் தவிர எனக்கு ஒரு லட்சியமோ, உனது திருவடியை அடைய வேண்டும் என்பது தவிர எனக்கு என்று எய்த ஒரு குறிக்கோளோ ஏதும் இல்லாதவன் என்பது உனக்கு நன்றாகப் புரியும். எனவே தான் சொன்னேன். அடியேன் உன் அடிமை என்பது உலகப் பிரசித்தமானது என்று. ஆகவே நான் எது செய்தாலும் அது உன் செயல் தானே!

ஆகவே என்னுடைய செயல்கள் என்று வினைகளால் வரும் விளைவுகளுக்கும் நீ தானே பொறுப்பு! வினைகளுக்குப் பொறுப்பு நீ ஏற்றுக்கொண்டுவிட்டு "விளைவுகளுக்கு நான் பொறுப்பல்ல" என்று சொன்னால் யாரேனும் சும்மா விடுவார்களா? என்று ஞானப்பயித்தியமாக அன்னையின் சன்னிதியிலே நின்று அழும் அபயாம்பிகைபட்டார் கண்களின் நீரைத் துடைத்துக்கொண்டு, தாயே! நீ அப்படியெல்லாம் என்னையும், என் செயல்களையும், அதன் விளைவுகளையும் புறக்கணிக்க மாட்டாய்! ஒளியினை பெருக்கும் மணிவிளக்குப் போன்ற அழகிய வதனம் உடைய வளே! பரந்த ஆகாசமாய்த் திகழ்பவளே! அன்னையே என்று நான் உன்னையே நோக்கி ஓடிவரும் போது, மகனே என்று என்னை நோக்கிவந்து என்னை ஆட்கொள்ள வேண்டாமா? தாமரை போன்ற திருமுகத்தை உடையவளே! உன் திருவடிகளைப் பற்ற பற்ற ஒவ்வொரு முறையும் புதிது புதிதான இன்பங்களை அருளுபவளல்லவா நீ?

13. "தந்தை தாயார் சுற்றத்தார்
சகல வாழ்வும் உனதருளே
தமியேன் செய்யும் வினைஉனது
சடலம் உனது உயிர்உனது
சிந்தைக் கிசைந்த அடிமைஎன்று
செகத்தில் எவர்க்குந் தெரியாதா
சிந்தா மணியே எனக்கு ஒரு
செயலே உனது செயல்அலவோ
சொந்த அடிமை கிடந்தலையச்
சும்மா இருந்தால் உனைவிடுமோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஜோதி வதன மணிவிளக்கே
துவாத சாந்தப் பெருவெளியே
மைந்தன் எனவந் தாண்டருள்வாய்
வனச வதனி நவசரணி
மயிலாபுரியில் வளரீசன்
வாழ்வே அபயாம்பிகைத்தாயே!''

அமுத ஞானம்

''தாயே! உன்னுடைய குழந்தை ஊமையாய், விழிக் குருடாய், கால் முடமாய் பிறந்து விட்டது என்பதற்காகப் புறக்கணித்து விடுவாயோ? உன் குழந்தை விஷமங்கள் செய்து உனக்கு எரிச்சல் ஊட்டினாலும் அதற்காக எங்கேயாவது போய்த் தொலை என்று விரட்டி விடுவாயோ?''

''குழந்தை தெருவில் ஓடும், புழுதியில் புரளும். காலையில் தாயார் அழகாகக் குழந்தையைக் குளிப்பாட்டி 'பளிச்' சென்று சட்டையைப் போட்டு அனுப்பினாலும், தன்னையும் தன் துணிகளையும் அழுக்காக்கிக் கொண்டு வந்து நிற்கும். தாய் மறுபடியும் அதன் அழுக்கைத் துடைத்து புதிய துணியை உடுத்தி விடுவாள். இது, தாயன்பு செய்யும் அற்புதமான பணி''

''அதைப் போல் நான் வினைகளின் அழுக்குகளுக்கு ஆளாகும் போது, உன் அருட்புனலால் அழுக்குகளை நீக்கி என்னை ஆட் கொள்ள வேண்டாமா? என் வினைகள் அனைத்தையும் உன் விழிப் பார்வையால் பஞ்சு எரியுற்றது போல் நீக்கி ஞானப் பதியாகிற உன் திருவடி கமலத்தில் என்னை சேர்க்க வேண்டாமா''

''தாயே! நீ மலமற்றவள்; அதனால் அமலை: கருணைக்கடலும் நீயே! உலகங்கள் அனைத்துக்கும் ஆதாரமானவளும் நீயே! புவனங்கள் முழுமைக்கும் முடிவிளக்கும் நீயே! அப்படிப் பட்ட பேர் சக்தியும், பார் சக்தியும் பராசக்தியுமான நீ என்னைப் போன்ற நாயினும் கீழான ஜன்மங்களை உய்விப்பதற்காகப் பெண் வடிவம் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாய். அப்படி அழகுள்ள பெண் அபயாம்பிகையாக அவதரித்துள்ள நீ உன்னைத் தேடி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
ஓடி வரும் அடியார்களுக்கு அமுதம் போன்ற ஞானமான மெய்ஞ்ஞானத்தை வழங்குகிறாய்!

"அன்னையே! நீ மாயையின் வடிவானவள்; உலகம் அனைத்தையும் மயங்கச் செய்யும் தெய்வீக அழகு படைத்தவள்: எல்லாவற்றிற்கும் முடிவானவள்; பருவதராஜன் பிரார்த்தனைக்கு செவிசாய்த்து அவன் மகளாகக் கருணையுடன் தோன்றியவள்; அந்த அழகுத் தெய்வமான நீ, மயிலாபுரியில் உன்னை அடையத் தவமிருக்கும் ஈசனுக்கு வாழ்வாய் அமைந்த பேரரசியான அபயாம்பிகை.

14. "பேயேன் ஊமை விழிக்குருடு
பேணுஞ் செவிடு கால்முடமாய்ப்
பிள்ளை எனவே ஈன்றவர்க்குப்
பிரிய விடவும் மனமாமோ
நாயேன் செய்யும் வினைமுழுதும்
நலமாய்ப் பஞ்சுப் பொறிஎனவே
நகர்த்திச் சிவத்துள் எனதுளத்தை
ஞானப்பதியுள் சேர்த்தருள்வாய்
ஆயே அமலை அருட்கடலே
அகிலா தார முடிவிளக்கே
அணங்கே இணங்கும் அடியவர்கட்கு
அமுதஞானம் அருள் அரசே
மாயே செகமோ கனமான
வடிவே முடிவே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

ஏட்டில் எழுதவில்லை

அன்னையே! நான் எடுத்த ஜென்மங்கள் கணக்கில் அடங்காது எவ்வளவு பிறவி எடுத்தேன் என்று ஏட்டில் எழுதி மாளாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எந்த நேரத்திலும் அழிவு வரக் கூடிய, சாய்ந்து கீழே விழலாம் என்ற நிலையில் உள்ள மரம் போன்ற வாழ்வு என் வாழ்வு. இந்த வாழ்வு எப்போது எமனூர்பதியில் போய் முடிந்து உடையும் என்று தெரியாது. இதையெல்லாம் உணராது, இவற்றை எல்லாம் புரிந்து கொள்ளாமல் பெண் மேல் ஆசையென்றும், பொருள் களின் மேல் ஆசையென்றும், பித்துப் பிடித்து அலைவேனோ? சிறந்த கலைஞானம் உள்ள தாயே! அடியார்களின் உள்ளத் தாமரையில் வீற்றிருப்பவளே! கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய சோலை போன்றவளே! அடியார்களுக்குக் கருணை பொழிவதிலே மேகம் போன்றவளே! யோகியர் மனத்தில் கோயில் கொண்டவளே!

மண்ணிலும், விண்ணிலும், முதலிலும், நடுவிலும் திகழ்பவளே! சிவபெருமானிடம் வாதாடி இன்பம் காணும் பேரொளி விளக்கே! மயிலாபுரியில் வாழும் வளரீசன் வாழ்வே! அன்னை அபயாம் பிகையே!

15. ''எண்ண அடங்கா தெனதுசென்மம்
ஏட்டில் எழுதி முடியாது
இடிப்பார் நீண்ட மரம்போலும்
எமனூர் பதியில் அடைந்துடைந்து
பெண்ணின் மயக்கம் வினைமயக்கம்
பிறவி மயக்கம் தொலையாது
பித்தர் சாலப் புலையருடன்
பேய்க்கொண் டடிமை அலைவேனோ
வண்ணக் கலையே கதிமுதலே
வனசப் பதியே அதிமதுர
வனமே கனமே யோகியர்கள்
மனமேய் குடியே வாரிதியே
மண்ணிற் ககன முடிநடுவுள்
வாதா டியபே ரொளிவிளக்கே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாயே! ஒரு பிறவியில் பறவையாகப் பிறந்திருப்பேன்! மற்றும் ஒரு பிறவியில் நான்கு கால்களை உடைய விலங்காக ஜனித்திருப்பேன்! இன்னுமொரு வாழ்க்கையில் ஊர்ந்து செல்லும் ஜந்துவாக இருந்திருப்பேன்! வேறு ஒரு பிறவியில் நீரில் வாழும் மீன் முதலியனவாக இருந்திருப்பேன்! இந்த எல்லாப் பிறவியும் நிலையற்றவை தானே!

மனிதராய், தேவராய் தோன்றினாலும் எடுத்த பிறவிகளில் தாயார்கள் எத்தனையோ! ஒரு பிறவியில் நமக்கு அமைந்த தாய் அடுத்த பிறவியில் நமக்குத் தாயாக இருப்பதில்லை. பிறவிதோறும் மனைவியும் வெவ்வேறானவர்கள். புதல்வர்களும் அப்படியே. ஆகவே தாயே! தாய் என்றும் மனைவியென்றும், புதல்வர்களென்றும், உற்றாரென்றும், உறவினரென்றும் அமைபவர்கள் எல்லாம் தற்காலிகமான உறவுக்குச் சொந்தக் காரர்கள். நிலையான உறவு என்பது உன்னுடையது ஒன்றே! நீயே மஹா மாதா! உன் ஒருத்தியையே தாய் என்று அல்லும் பகலும் அனவிரதமும் எண்ணும் நெறியை எனக்கு நீ அருள வேண்டும். இந்த மாயப் பிறவியை நான் தொலைத்து உன் அடிமையாய்த் திகழ உனது தாமரை மலர் போன்ற பாதங்களைப் பற்றும் வகையில் அருள் புரிவாய் அன்னையே!

16. ''பறந்த பறவை நாற்காலாய்ப்
படரும் விலங்குப் ஊர்வனவும்
பாணி தனில்வாழ் சீவர்களும்
பாரில் நிலையாத் தாபரமும்
பிறந்த மனிதர் தேவரொடு
பிசகா தெடுத்த செனனமதில்
பெற்ற தாயார் எத்தனையோ
பிறவி மனையாள் புதல்வர்களும்
நிறைந்த கோடா கோடிஇதில்
நிலையா னதுவும் ஒன்றறியேன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit SPV Hariharan Collection, Sholinganallur, Chennai

நீயே தாயென் றநுதினமும்
நெறியே அருளிப் பிறவியினி
மறந்து விடவும் உனதுபய
வனச மலர்த்தாள் ஈந்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

மாயை விலகட்டும்

இந்த உடலை வைத்து மோக மயக்கங்களுக்கு அதை ஆட்படுத்தி அதன் விளைவால் உயிரும் திகைப்பில் அகப்பட்டு போலி இன்ப மயக்கத்தில் ஈடுபட்டு அலைகிறது. பாலைவனத்தைப் போல பயனற்ற வாழ்க்கையை பேதை மனமும் விரும்புகிறது. கருங் கூந்தலுடைய பெண்களிடம் காதல் கொண்டு தன்னை மறந்து நான் ஏகும் வழியும் புரியாமல் கலங்கி அலைவனோ?

உலகில் நடக்கும் மாயக் காட்சிகளை நான் அறியாமல் என்னை பக்குவப் படுத்தி, உன் உபய பாதங்களையேப் பற்றும் உணர்வினை எனக்கு நல்கி அதைத் தவிர வேறொன்றும் வேண்டா உணர்வினை வழங்கி என் அறியாமை அனைத்தையும் போக்கி என்னை வலிந்து ஏற்றுக் கொள்வாய் தாயே! சந்திரனைப் போன்ற முகத்தவளே! இமய பருவத ராஜன் பெற்ற செல்வமே! மயிலாபுரி அரசனின் வாழ்க்கையே! அன்னை அபயாம்பிகையே!

17. ''சடத்தை எடுத்து மயல்நிகழ்த்தித்
திகைப்பில் உயிரும் அகப்படவும்
தேசா சார அதிமோகத்
திருக்கில் மனமும் உருக்கமுடன்
கடத்தை எனதென் றபிமானக்
கருமா மயிலா ருடன்ஆசைக்
காத லதனில் உயிர்மறந்து
கலங்கித் தியங்கி அலைவேனோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நடத்தைத் அறியாப் பாமரர்க
ளுக்கி உன்றன் இருபதத்தை
நம்ப மனத்தில் உறுதியொன்றாய்
நாட்டி எனையோ ராளாக்கி
மடத்தை அரிய வலிந்தழைப்பாய்
மதிவாள் நுதலே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

அருட்பதி

சோலைகள் சூழ்ந்த பொன்னியின் கரையில் திகழும் மயிலாடுதுறையில், கங்கை முதலிய புண்ணிய நதிகள் துலா மாதத்தில் சங்கமம் ஆகின்றன. இந்தப் புனிதப் பதியில் சிறந்த கவிதைகளை வழங்கும் வல்லமை பெற்ற கவிஞர்கள் வேதப் பொருளையும் ஆகம வழிகளையும் தங்கள் பாடல்கள் மூலம் எடுத்து இயம்பி வருகிறார்கள். இத்தகைய சான்றோர்கள் இங்கு வாழ்வதால் இந்தப் பகுதி வாழை, கமுகு, தென்னை மரங்கள் சூழ வளமையுடன் பொலிகிறது.

இங்குள்ள வயல்களில் நெற்பயிர்கள் எல்லாம் கதிர் முற்றி, சூல் கொண்ட அழகிய இளம்பெண் நிற்பது போல் நிற்கின்றன. வயல்களின் கரைகளில் பலவிதமான மரங்கள் பழுத்த கனிகளைத் தாங்கி நிற்கின்றன; பழுத்த கனிகள் தொங்கும் மரங்களைச் சுற்றிச்சுற்றி பறவைக் கூட்டம் வலம் வருகிறது. இத்தகைய வளம் பொருந்திய திருமகள் உறையும் மயிலாடுதுறை, கயிலைக்கு நிகரானது என்று சொல்லவும் வேண்டுமோ? இத்தனை பெருமையும் இந்தப் பகுதிக்கு அமைந்ததின் காரணம், மயிலாபுரியில் வாழும் ஈசனின் வாழ்வாம் உனது அருள் அமைவதால் தானே!

18. ''காவே இலங்கும் பொன்னிநதிக்
கரையே இலங்கும் மயிலைநகர்
கங்கை முதலாம் புனிதநதி
கருதிப் பணியும் மூதூரே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
மாவே இலங்கும் கவினாளர்
பகரும் மறைவே தாகமங்கள்
பயிலும் வீதிக் கமுகிளநீர்
பாயும் வாழை குருந்தேறும்
ஆவே இலங்கு வயல் சூழும்
அதிலே நாரு விருக்ஷமுடன்
அமுத ரசமாய்க் கனிபழுக்கும்
அருகிற் பறவை யினஞ்சூழும்
மாவே இலங்கும் அநுதினமும்
மருவுங் கயிலை நிகரான
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

அழகு மயிலே! என்னைப் புறக்கணிக்காதே!

விலங்குகள் காட்டில் வாழ்கின்றன. புலி, சிங்கம், கரடி, யானை, நரி என்று அவற்றைப் பார்க்கும் போதே தெரிந்து கொள்ளலாம். உன்னுடைய அருளால் அவற்றிற்கு வெவ்வேறான தோற்றங்களை அருளியிருக்கிறாய்?

நாட்டில் வாழும் மனிதர்களிலும் விலங்கின் இயல்பு உடைய வர்கள் இருக்கிறார்கள். தாயே! உன்னுடைய மாயையால் மனிதர்களின் முகங்களைப் பார்த்து, இவர் நரியின் இயல் புடையவர், இவர் புலியின் குணமுடையவர் என்று கண்டு பிடிக்க முடிவதில்லை. இதுவும் உன்னுடைய அருளுடன் கூடிய புதுமை. இதற்கு முந்திய ஜன்மங்களின் வினைகளின் சுமையை என்னுடைய தலை மீது ஏற்றி விலங்கின் இயல்புடைய மனிதக் கூட்டங்களின் மத்தியில் நிற்கவும், நடக்கவும் வழியின்றி உன் மாயையால் என்னை அலைய விடுகிறாயே! என்ன இருந்தாலும், நான் உன் அடிமை தானே! உன்னுடைய கருணைப் புனலால் என் வினைகளின் அழுக்கை நீ துடைக்கக் கூடாதா? அழகு மயிலே!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri VJ Hariharan Collection, Sholinganallur, Chennai

நீ என் அடிமை'' என்று சொல்லி உன் திருவடியால் என் தலையில் முத்திரையாகப் பதித்து என்னை ஆட்கொண்டது ''பொய்யோ?'' என்று உருகுகிறார்.

19. ''என்ன மயக்கம் இதுபுதுமை
இதையா ருடனே யான்உரைப்பேன்
எடுக்க முடியா வினைச்சுமையை
ஏழைத் தலைமீ தெடுத்தேற்றி
மன்னிப் பிறக்க இடமும்இன்றி
வாகாய் நடக்க வழியுமின்றி
மயக்கக் கொடுவேல் முனைக்கானில்
வனவே டர்கள் செந்நாயுடனே
என்னை மறிக்கக் கொடுமையுடன்
எழுந்தே உழுவை பாய்ந்திடவும்
இதிலே மயங்கி அலைந்திடவிட்(டு)
எங்கே ஒளித்தாய் ஈஸ்வரியே
வன்ன மயிலே எனக்குரைத்த
வசன மதுபொய் யானதென்னே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

காலன் வரும் காலம் அறிந்தவள்

வெல்லப் பாகு இனிப்பைத் தருவது, உன்னைத் துதிக்கும் அடியார்கள் இனிய மொழிகளால் உன்னை அர்ச்சிக்கிறார்கள். அந்த மொழிகள் ''வினையேன் சொல் அவமாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே'' என்று அபிராமி பட்டர் சொன்னது போல் சாதாரண சொற்களாக இருந்தாலும் உன்னைப் பற்றிய நாமாவளியாக இருப்பதால் வெல்லப் பாகைப் போன்று இனிக்கிறது. பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்று சொல்வார்கள். அந்த பாம்பையே நீ அணிகலனாக அணிந்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருக்கிருய்! ஏன் தெரியுமா? உன்னை வணங்குபவர்களுக்குப் பயமே தோன்ருது; பயம் அனைத்தும் போக்கும் அபயாம்பிகை நீ என்று உணர்த்துகிருய்! யாரையும் நடுங்கச் செய்யும் அந்த பாம்பு கூட நான்கு தோளுடை நாயகியான உன்னை அலங்கரிக்கும் போது அற்புதமான அணிகலனுக காட்சி அளிக்கிறது. இளம் பிறையையும், சூரியனையும் கூட அணிகலன்களாகக் கொண்டவள் நீ, இத்தகைய ஒளிகளை அணிகலன்களாகக் கொண்டவள், வணங்கும் அடியார்களின் அஞ்ஞான இருளைப் போக்கி பரம ஞான ஒளியினை அருளுகிருய்.

காலன் வரும் காலம் எனக்குத் தெரியாது. அதற்காக நான் ஏன் கவலைப் பட வேண்டும்? அவன் வரும் நேரம் உனக்குத் தெரியும்; அப்போது நீ என்ன செய்வாய் என்று எனக்கும் தெரியும். என் ஆவியை, மலரை தண்டிலிருந்து பறிப்பது போல் இதமாகப் பறித்து உன் உபய பாதங்களில் சேர்த்துக் கொள்வாய். பாவம் காலன்! ஏமார்ந்து திரும்பிப் போவான்.

தாயே! நீ பார்த்துக் கொள்வாய் என்று அலட்சியமாக இருக்க மாட்டேன். நீ தான் என்ன செய்வாய்? என்னைப் போல் உன் பாதம் சேரத் துடிக்கும் அடியார்கள் எத்தனையோ பேர்! அதனுல் என்னையும் நீ நினைவு வைத்துக் கொள்ளும் பொருட்டு இனிய தமிழ் பாமாலைகளால் பாடிக் கொண்டே இருப்பேன். பார்த்தாயா தாயே! உன் கருணை எனக்கு உண்டு என்று சற்று ஆணவம் வந்து விட்டது.

பாடிக் கொண்டேயிருப்பேன் என்ரு சொன்னேன் தாயே! இல்லை! திருத்திக் கொள்கிறேன். "உன் கருணையை இனிய தமிழால் அமைத்து இசையாய் பொழிய வரம் நீ தருவாய்." இன்னொன்றும் உன்னை வேண்டுவேன்; துஷ்டர்களின், துன் மார்க்கர்களின் கூட்டத்தில் இனி என்னை மறந்தும் சேர்த்து விடாதே! நின் கருணைக்கு ஏங்கும் நன்மார்க்கம் நான் அடைய, சான்ருேர்களுடன் வாழும் சன்மார்க்கம் எனக்குத் தேவை! இந்த என்னுடைய வேண்டுகோள்களை இமவான் பெற்ற செல்வமும் கிருஷ்ணனின் சகோதரியும் மயிலாபுரியில் வாழும் ஈசன் மயூர நாதனின் வாழ்வரசியுமான நீ பூர்த்தி செய்து அருள் புரிவாய்!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

20. "பாகு சேருந் மொழியணங்கே
Vaidika Pandit S.V Hariharan Collection, Sholinganallur, Chennai

பணத்தை அணியுஞ் சதுர்த்தோளி
பாதி மதியுங் கதிரணியும்
பரம ஞான வெளிச்சுடரே
ஆகும் பருவம் அறிந்தென்றன்
ஆவி நாளும் உபயபதம்
அடுத்துக் கவிதைச் சரந்தொடுத்தே
அமைந்து பொழிய வரம்தருவாய்
ஏகு மயக்கத் துட்டருடன்
இனிதா எனைச்சேர்த் தகற்றுதே
இமவான் அளித்த திருமகளே
எங்கும் நிறைந்த பெருவெளியே
வாகு பொருந்துங் கிருஷ்ணனது
வரிசைத் துணைவி சுகவதனி
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

அந்த நாள்

விதியின் வழியில் வினையின் விளைவால் வந்த வாழ்வு இது. வினைகள் தீர்ந்தால் வாழ்வும் முடியும். வினைகள் அதிகமானால் வாழ்வும் நீள்கிறது. வினைகள் குறைவு தான் என்றால் வாழ்வும் சீக்கிரம் முடிந்து விடுகிறது.

இதிலிருந்து என்ன புரிய வேண்டும்? நீண்ட நாட்கள் மண் உலகில் வாழ்பவர்கள் வினைகளின் பெரிய பிராரப்த மூட்டையைப் பிறக்கும் போது கொண்டு வந்தவர்கள். அன்னையின் மாயை தான் என்ன? இது புரியாமல் மனித ஜீவன்கள் நீண்ட நாட்கள் மண் உலகில் வாழ ஆசைப் படுகின்றன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

ஆக, வினைகள் அதிகமானாலும், குறைவானாலும், வாழ்வு
Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai
[illegible] என்னவோ நிச்சயமானது. இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல், வேண்டியவர்கள் என்றும், வேண்டாதவர்கள் என்றும், நண்பர்கள் என்றும், பகைவர்கள் என்றும், உற்ருர் என்றும் அற்ருர் என்றும் இந்தப் பாழும் மனம் மயங்குகிறது. அந்த மனத்தில் எஜமானனுக ஆன்மா அதைப் பார்த்து சிரிக்கிறது. எனவே துக்கம் என்பதும் சந்தோஷம் என்பதும், பற்று என்பதும் நகைப்புக்குரியவை.

இந்த மாய வாழ்க்கையை, மனித ஜீவன்கள் உணர வேண்டுமானல் அவர்கள் உன் பாதங்களைப் பற்ற வேண்டும். பற்றுதற்குரிய பாதங்கள் உனது தவிர வேறு இல்லை என்று உணர்த்தவே, அகத்தியனும், அரியும், அயனும், காமனைக் காய்ந்த அரசனும் உனது உபயபாதங்களைப் பற்ற துடிக்கிருர்கள். சந்திரனை அணிகலனுக அணிந்த மேகம் போன்ற கூந்தலை உடைய மயிலே, குயிலே, மயிலாபுரித்தாயே, உன் திருவடிகளில் நான் சேரும் நன்னுள் எந்நாளோ?

21. ''விதியின் முறைமை எத்தனைநாள்
வினையிற் படுவ தெத்தனைநாள்
விசுவா சிக்கக் கொடுமைபல
விளையும் பகையும் எத்தனைநாள்
அதிக வினையும் எத்தனைநாள்
அற்ப வாழ்வும் எத்தனைநாள்
அதிலே குரோதித் திருப்பதெல்லாம்
அழியும் வகையும் எந்நாளோ
பொதிகை மலையன் அரிஅயனும்
புகழ்சேர் காமன் திசைப்பாலன்
போற்றும் உன்றன் இருசரணம்
பொருந்தி மகிழ்வ தெந்நாளோ
மதியைத் தரித்த முகில்வேணி
மயிலே குயிலே வான்மணியே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மயிலா புரியில் வளர்சன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

தனம் தருவாய்! கல்வி தருவாய்!

அன்னையே! சிந்தாமணி மந்திரத்தினுல் உன்னை பூசை செய்தால் உலகத்தில் யாருக்கேனும் குறை வருமோ? உன்னை வழிபடுபவர்களுக்கு நீ செல்வம் தருவாய், கல்வி தருவாய், எல்லாம் தருவாய் என்பதெல்லாம் உன் அருளால் விளைந்த தல்லால், பிறர் கொடுத்து அல்லது அவரவர் முயற்சியால் விளைந்தது என்பதாகுமா? எல்லோருக்கும், எல்லாவற்றிற்கும் மூத்தவளான, உலகமனைத்தும் பூத்தவளான உனது அருளுலகில் மூழ்கும் பயன் பெற்றதால் அடியார்களின் மிகுதியான வினை இருள் பறந்து ஓடியது என்பது போல, அந்த அடியார்களுக்கு ''இந்தா என நீ கொடுத்த'' கருணை என்பது அல்லாது மனிதர்கள் தந்தார்கள்; உற்றவர்கள் கொடுத்தார்கள்; செல்வமும் வளமும், பெருவாழ்வும் தானுகச் சேர்ந்தன என்பது உண்டோ?

தாயில்லாப் பிள்ளையான நான் பசியால் 'அம்மா' என்று குழந்தைப் பருவத்தில் அழுத போது 'மகனே' என்று ஓடிவந்து நீ அமுது அளித்ததை நீ மறந்தாலும் நான் மறக்க மாட்டேன்.

22. ''சிந்தா மணியின் பூசைசெய்தால்
செகத்தில் எவர்க்கும் குறைவருமோ
செல்வ முடனே கல்விஅருள்
திரளாய் விளையும் என்பவெலாம்
முன்ரு ஞன போதிலேயே
முதல்வி உன்றன் அருளுலகில்
மூழ்கிக் கனமாய் வினையிருளும்
முறியப் படர்ந்து மறைந்ததுபோல்
இந்தா எனவே நீகொடுத்த
இயல்பே யல்லால் மானிடரோ(டு)
ஏற்கை சேர்த்து அவர் உரைத்த(து)
ஏதா கினும்உண் டோஉரையாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மைந்தா எனவே அமுதளித்த
வகையை நீயும் மறந்தாயோ
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

புகழ் நாரணியே!

மயிலாபுரியில் வாழ்பவனுக்கு வளமனைத்தும் தரும் தாயே! புகழ் அனைத்தும் கொண்ட நாரணியே! பூவுலக இயக்கத்துக்கு ஓர் காரணியே! உன்னை உணர்ந்தவர்களுக்கு உன்னைத் தவிர பொருளும் இல்லை, அருளும் இல்லை.

பிள்ளை பொல்லாதவனே ஆனாலும் பெற்ற தாய்க்கு பிள்ளை மேல் வெறுப்பு உண்டாகுமோ? பெற்ற பிள்ளைக்கு பால் கொடுத்து வளர்க்காத தாய் உலகில் உண்டோ?

மஹா மாதாவாகிய உனது கருணைக்கு ஏங்கும் பொல்லாத பிள்ளை இந்தப் பிள்ளை. வெகு காலங்களுக்கு முன்பே இவன் எனது பழைய அடிமை என்று உனது திருவடித்தாமரையால் முத்திரை குத்தப் பட்டவன். அப்படி உன்னால் ஆட்கொள்ளப் பட்டு கருணையால் சிதாகாயத்தைக் காட்டி மெய்யுணர்வு அருளப் பெற்றவன் இவன். அப்படி நீ அருளைப் பொழிந்ததால் ஆனந்தக் களிப்பு கொண்டு விம்மி விம்மி விழி நீர் சொரிய அடியேன் அழுது தொழுத போது உயர்ந்த மெய்ஞ்ஞான சாரமெல்லாம் உனக்கு தந்தோம், தந்தோம் என்றாய். இதை எல்லாம் நீயே மறந்தால் இனி அடியேனுக்கு இனியவர் யார்? பகைவர் யார்? என் சொல்வேன்?

23. ''வெகுநாட் பழைய அடிமையென
மிகவுங் கனிந்தே அருள்அளித்து
வெளியைக் காட்டிக் களிப்புடனே
விம்மி விழிநீர் சொரிந்தருளத்
தகுமெய்ஞ் ஞானச் சாரமெலாந்
தந்தோம் தந்தோம் என்றுரைத்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாய்தான் மறந்தால் உலகில்இனித்
தானுர் பகைஆர் என்செய்கேன்
புகழ்நா ரணியே உன்னைவிடப்
பொருளும் அருளும் வேறுண்டோ
பொல்லா தவனே யானுலும்
பிள்ளை இவனென் றருள்புரிவாய்
வகுத்த சேயைப் பால்கொடுத்து
வளர்க்கா திருக்கும் தாய்உண்டோ
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

இலட்சிய வாழ்க்கை

தாயே! காதின் வழியாலும், தோல் வழியாலும், கண் வழியாலும், நாவின் வழியாலும், மூக்கின் வழியாலும் ஆக பஞ்ச இந்திரியங்களின் வழியாலும் சேருகின்ற வினைகள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களைப் பற்றி உயிரைக் கலங்கடித்துச் செய்யும் வினைகளும் வெகுகோடி. இந்த வாழ்வை ஆற்றில் கரைத்த புளிபோல் குறிக்கோள் இலாது வாழ்ந்து தொலைந்து விட்டேன். இனியேனும் எஞ்சிய நாட்களிலாவது உனது திருவடியைப் பற்ற வேண்டும் எனும் உணர்வு கொண்டு இலட்சிய வாழ்வு வாழ கருணையால் அருள மாட்டாயா? இந்த வேண்டுகோள், தன்னை முன்னிறுத்தி உலகிலுள்ள குறிக்கோளில்லா வாழ்வு வாழும் மனித ஜன்மங்களுக்கு உணர்த்தக் கூறிய வார்த்தையாகும்.

'பாலனாய் கழிந்த நாளும் பனிமலர் கோதையர் மேலனாய் கழிந்த நாளும் மெலிவோடு மூப்பு வந்து கையில் கோலனாய் கழிந்த நாளும் குறிக்கோள் இல்லாது கெட்டேன்', என்று சொன்ன அப்பர் வாக்கு இங்கு நினைவு கூறத்தக்கது.

24. ''சோத்ர வழியால் வருவினையும்
தொக்கு வழியால் வருவினையும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தொட்டுஞ் சட்ச வழியாலும்
சொல்நா வுடனே ஆக்ராணம்
பார்த்த வழியிற் கரணமதைப்
பற்றி உயிரைக் கலங்கடித்துப்
பண்ணும் வினையும் வெகுகோடி
பாழ்போ னதுவும் வெகுகோடி
ஆற்றில் கரைத்த புளிஎனவே
ஆயிற் ஹெருவர்க் குதவியின்றி
அடியேன் முன்னுள் ஒருவருக்கும்
ஆகா தவனே அதைஇனித்தான்
மாற்ற வகையும் அறியாயோ
வகுத்த எனையும் மறந்தாயே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

அமலசுகம்

அம்பிகையினால் அருளப்பட்ட வாழ்நாள் எவ்வளவு விலை மதிப்பற்றது என்பதை மனிதர்கள் உணர்வதில்லை. இழந்த பொருளை மீண்டும் பெறலாம். கடந்த நாளை மீண்டும் பெற முடியாது. எனவே தான் வள்ளுவர் இது ''நாளல்ல'', ''வாள்'' என்றார். மரத்தை அறுக்கும் தச்சு தொழிலாளி வாளினால் மரத்தை அறுக்கும் போது மரம் எப்படி அறுபடுகிறதோ, அது போல் நாள் என்னும் வாளால் ''ஆயுள்'' கொஞ்சம் கொஞ்சமாக குறைகிறது.

''நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்.''

வினையின் விளைவால் வந்த வாழ்நாள் வீண்நாளாக ஆகலாமா? ஏதேதோ செயல்களிலெல்லாம் ஈடுபட்டு நாளின் அருமை தெரியாமல் செலவிடுகிறோம். இப்படி புத்தியில்லாமல் நாட்களை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
வீணடித்துக் கொண்டிருக்கும் போது, ஒரு கணநேரம் அம்பிகையின் மின்னல் போன்ற எழில் உருவத்தை எண்ண நாழி இல்லை என்று சொல்வது என்ன பேதமை?

பிரம்மன் நம் முந்தைய பிறவிகளின் வினைக்கேற்ப் நம்மை பொம்மையாகப் பிடித்துப் போடுகிறான். வினைக்கேற்ப வந்து சுக துக்கங்களை அனுபவிக்கும் போது, மேலும் துன்மார்க்கத்தில் ஈடுபட்டு அழியாமல், இந்த அற்ப சுகங்கள் போதும் என்று நன் மார்க்கத்தில் நின்று நாயகி உன்னைத் தொழுது வினைகளை-வேர் அறுக்க வேண்டும். வினைகள் ஒழிந்தால் பின் விளைவுகள் ஏது? அப்போது அமலையாகிய நீ, என்னை அமல சுக பராகாசத்தில் பொருத்தி விடுவாய்! வான்மணியான, வாலாம்பிகையான நீ, மயிலாபுரியில் வாழும் ஈசனுக்கே வாழ்வளிப்பவளான நீ, என் மீதும் சற்று கருணைபுரிவாய்!

25. ‘‘நாளோ வினையோ வீணுளோ
நாளு தொழிலுக் கானதுவே
நலஞ்சேர் நிட்டைக் குதவிவரும்
நாழி யொன்று யினும்இலையோ
சூளைக் குயவன் விதிவசத்தால்
துக்க சுகமும் தொடர்ந்துவரத்
துன்மார்க் கத்தால் வந்ததென்றுஞ்
சொல்வர் பாரில் சூழ்மனிதர்
வேளைக் கிசைந்த மொழிபேசி
வினையிற் புகுந்த சுகம்போதும்
வினையை ஒழித்தே அமலசுக
வெளியைப் பொருத்தி வினைப்பிறவி
மாளும் படிநீ அருள்புரிவாய்
வாலாம் பிகையே வான்மணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!’’

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"என்னுடைய நிலையும் நினைப்பும் கரைய வேண்டும், ஏக வெளியில் உன்னோடு கலக்க வேண்டும், அப்படி உன் கருணையால் நான் கற்பூரமாகக் கரையும் போது இரவும் பகலும் அற்ற இடத்தை நீ எனக்கு அருளுவாய்! அந்த அனுபூதி நிலையில் உன் பேரொளி ஒன்று தான் என் கண்களுக்குத் தெரியும்.

"யோக வழியில் குண்டலினி சக்தியை எழச் செய்து புருவ மத்தியில் சேர்த்து என்னை நிலையும் நினைப்பும் அற்ற அனுபூதி வசமாக்கி சாட்சாத்கார பூரணமாய் சர்வானந்த நிலையை அருள்வாய்!

பொன்மயமான இமய உச்சியில் உதித்தவளே! உமையன்னையே! தேவர்களின் தலைவியின் மந்திரக் கலையை ஆளுபவளே! ஒளி நின்ற ஒன்பது கோணம் மேவி உறைபவளே! மயிலாபுரியின் வளரீசன் வாழ்வே!" என்று துதிக்கிறார் பட்டர்.

26. "எந்தன் நினைப்பும் இனிக்கடந்தே
ஏக வெளியின் நிலைதொடர்ந்தே
இரவும் பகலும் அற்றஇடம்
இனிதா கியபே ரொளிவிளக்கே
சந்திக் கரையின் முடிவேற்றித்
தனையுந் தலைவன் அடிசேர்த்துச்
சாட்சாத் கார பூரணமாய்ச்
சர்வா னந்த மாயிருக்க
உந்தன் இருதாள் மலர்க்கருணை
ஒளிசேர் கனகக் கிரிமுடிமேல்
உதித்தாய் எனது வினையறவும்
உமையே இமையோர்க் கரசான
மந்த்ரக் கலைச்சி நவகோணம்
வாழும் யோக நாயகியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காமாக்ஷியே!

"அடியார்களுக்கு உன் வெவ்வேறான அழகுத் திருக்கோலங்களைக் கருணை கொண்டு எப்படி எப்படியெல்லாம் காட்டுகிறாய்! காஞ்சியில் காமகோட்டத்தில் காமாக்ஷியாக கொலு வீற்றிருக்கிறாய்! தில்லையில் கூத்தாடும் கோல நடராசன் துணை சிவகாமியாக காட்சி தருவாய்! காத்யாயன மகரிஷியின் நீண்ட தவத்திற்கு அருள்புரிந்து கார்த்தியாயினி ஆகத் தோன்றி சிவத்தை நோக்கித் தவத்தை செய்து அக்ஷய பாத்திரம் பெற்று காசியில் வறுமையில் வாடிய மக்களின் பசிப்பிணி போக்கும் அன்னபூரணியாகத் தோற்றமளித்தாய்! விசுவத்திற்கு எல்லாம் அதிபதியான விசுவ நாதனைக் கரம் பற்றி விசாலாக்ஷியானாய்! கௌமார நிலையில் கௌமாரியாகவும், காமேஸ்வரனைக் கைப்பிடிக்கும் காமேஸ்வரியாகவும் திகழ்கிறாய்! சரஸ்வதியும் இந்திராணியால் புகழப் படும் நாரணியும் தினம் உனைப் பணிகிறார்கள்.

மதி மண்டலத்து வாழ்கின்ற அழகிய நெற்றியை உடையவளே! துவாதசாந்தப் பெருவெளியை இருப்பிடமாகக் கொண்டு, பரமானந்தத்தை அருளுபவளே! ஞானத்தை அருளும் மணி விளக்கே! அழகிய கண்களை உடைய அதிரூபவதியான கதம்பவனக் குயிலே, மயிலாபுரித்தாயே, உன்னை வணங்குகிறேன்."

27. "காமக் கிரீபீ டத்தழகி
கனக சபையில் நடனமிடும்
காத்யா யனியே கவுமாரி
காமேஸ் வரியே ஈஸ்வரியே
பூமி தேவி நான்முகவன்
புனித மனைவி இந்த்ராணி
புகழ்நா ரணியும் தினம் பணியும்
பூர்ண கலையே கதிமுதலே
சோமன் உதய மணிநுதலே
சுருதி ஞான முடிமுதலே
துவாத சாந்த நிலையாளே
சுகமே ஞான மணிவிளக்கே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாம நயனி அதிரூபி
வனசா கினியே மாமணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

மதுர வசனி

ஞாயிறுமாய், தாமரையில் வாழும் சதுர்முகனுய், திருப்பாற் கடலில் சயனித்திருக்கும் திருமாலாய், காலம் அறிந்து ஜீவன் களின் கதை முடிக்கும் காலனுமாய், எல்லோருக்கும் தலைவனுமாய் உள்ள சதாசிவனுமாய், தாமரை இதழ் விரித்தல் போல் அழகு முறுவல் காட்டும் பேரொளியே!

பரந்த பேருலகில், உன்னுடைய உயர்ந்த இரு பாதாரவிந்தங் களையும், ஆடும் அந்த பொற்பாதங்களில் அழகு ஊட்டும் சிலம்பும் கிண்கிணியும் காட்டி, உலகில் மயக்கமற்ற ஜீவாத்மாக் களுக்கு, மேலான முக்தி அமுதத்தை அருளுகிருய்!

உன்னுடைய வண்ண மலர் மணி அதரம் இதழ் திறந்தால் இனிய தமிழ்த்தேன் பெருகும். நவரசங்களும் உன்னிடம் சரணடையும். இவ்வளவு ஏன்? நவரச நாயகனுன ஈசனே, உன்னை வணங்கி, தன் வாழ்வினை வளமாக்கிக் கொண்டவன்தானே?

28. ''மூலத் துதிக்கும் ஞாயிறுமாய்
முளரி யிதழ்வாய்ச் சதுர்முகனுய்
மூல வுந்தித் திருமாலாய்
முளுங் கால காலனுமாய்
மேலுற் றருளுஞ் சதாசிவனும்
விரியும் இதழொன் றருள்பரையும்
வித்தா ரமுமாய் உலகனைத்தும்
விரிவாய் நின்ற விரிசுடரே
ஞாலத் தமைந்த இருபதமும்
நடனச் சிலம்பும் கிண்கிணியும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நணுகிப் பெருகும் இந்துநதி
ஞான நதியாம் பரமநதி
மாலற் றவர்க்கும் உதவிநிற்கும்
மதுர வசனி நவசரணி
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

கலங்காதே மனதே!

என்ன வேண்டிக் கிடக்கிறது இந்த மனித வாழ்வு! பொய்யை மெய் எனறு எண்ணும் மயக்கம், நிலேயற்ற சிற்றின்பங்களே ஓடி அலேயும் சின்மதி, பசி, பிணி என்ற தொல்லேகள் இவைகள் மலிந்த அவல வாழ்வு தானே இந்த வாழ்வு!

ஏழை எளியோரைத் தாழ்த்தி, நான் செல்வமுள்ளவன், நான் பலமுள்ளவன், நான் அதிகாரமுள்ளவன் என்று ஆணவத் தால் நான், நான் என்று கூறித்திரியும் மானிடர்களே நாவும், வாயும் அடக்கச் செய்து அவர்களே எமலோக பட்டணத்திற்கு அனுப்பிவித்து, கருணேயுடன், அவர்களே சிந்திக்க வைத்தாய்!

அவனவன் செய்யும் விணைகளே அவனவன் அனுபவித்தே தீர வேண்டும். விணையின் விளேவால் வரும் துயரங்களேக் கண்டு மனக் கவலேயுறுவதால் என்ன பயன்? இந்த ஞானம் சில நேரங் களில் உன்கருணேயால் எனக்குத் தோன்றிஞலும், பல நேரங் களில் இந்தப் பாழும் மனம் அந்த ஞான உணர்வு இல்லாமல் புழுங்கித் தவிக்கிறது. நான் என்ன செய்வேன் தாயே!

பராகாச வெளியிலே வீற்றிருக்கும் திரிபுர சுந்தரியே! மோன நிலே கடந்த இடத்தில் முளேத்த மலர் கொடியே! மயிலாபுரி தெய்வமே! என் மனத்து அழுக்கையெல்லாம் உன் அருட்புனலால் துடைத்து கலக்கங்களேப் போக்கி, சாந்தியை நீ அருள வேண்டும்!

29. ''ஏன்ருன் மயக்கத் திருவிணேயும்
மிடியும் வகையும் போதாதோ
ஏழை தனேயே பகைப்பவர்கள்
இருமா நிலத்திற் சலுகையுண்டாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நான்முன் பெரியன் என்றுரைத்த
நாவும் வாயும் அடைத்தெமனுர்
நகரிற் பயண மாகிவர
நடத்தாய் கருணைச் சுடர்விளக்கே
தான்முன் செய்த வினைமுழுதும்
தனக்கே யன்றி மனக்கவலை
தன்னுற் போமோ என்மனத்துத்
தளர்ந்து புழுங்கும் என்செய்கேன்
வான்முன் பரவுந் திரிபுரையே
மௌனு தீத மலர்க்கொடியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

கனவெல்லாம் நினைவாகும் ஒரு தினமே!

உலகியல் சிற்றின்ப மயக்கங்களில் மீண்டும் மீண்டும் உழலாமல், மயக்கங்களாலும் ஆசைகளாலும் கவலைகளையும் பிணிகளையும் சேர்த்துக் கொள்ளாமல் உன் அன்புக்கு ஆளாகத் துடிக்கிறேன். அல்லும் பகலும் உன் நினைவாய் இருப்பதால் அந்த நினைவு எல்லாம் கனவாக அமைகிறது. அது என்ன நினைவு? என்னை உன் அடிமை என்று ஏற்றுக் கொண்டு உன் திருவடித் தாமரையை என் தலையில் முத்திரையாக நீ பதிக்க வேண்டும் என்று நினைந்து, நினைந்து, உணர்ந்து உணர்ந்து உருகும் நினைவே அது. அந்த நினைவு உன் கருணையால் எனக்குக் கனவாகிறது. அந்தக் கனவு உலகில் உன் கருணையை எண்ணி ஊற்றெழும் கண்ணீராதனுல் உடம்பு நனைகிறது. அந்தக் கனவு நினைவாக வேண்டும் தாயே!

சின்னச் சின்ன சுகங்களுக்கெல்லாம் துள்ளித் துள்ளி மனம் சபலப் பட்டு அலையாமல் பரம சுகமாய் உன் உபய பாதங்களை உன் அடிமையான என் மனத் தாமரையில் வைத்து ஆண்டு கொள்வாய்! வெண் தாமரையை இருப்பிடமாகக் கொண்டு வாழும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
நீ அடியார்களின் வெள்ளை உள்ள தண் தாமரையில் வீற்றிருப்பதையும் ஆனந்தமாக ஏற்றுக் கொண்டவள் அல்லவா?

ஓங்கார பீடமான மூலாதாரத்தில் முளைத்து, இதய சகசிரா கமலத்தில் வீற்றிருப்பவள் அல்லவா நீ? பொன் மயமான முகத் தாமரையைக் காட்டி அடியார்களை உன் அருள் ராஜ்யத்திற்குள் அனுமதிக்கும் அருள்மயமானவளே! வள்ளல் பெருந்தகை சிவபெருமானின் வாமபாகத்தை வவ்விய பெருமாட்டியே! மயிலாபுரி சாம்ராஜ்ய அதிபதியின் வாழ்வாய் அமைந்தவளே! உன் கருணைக் கண்களின் அருட்பார்வையால் என் கனவெல்லாம் நினைவாகும் ஒரு தினமே!

30. "கள்ள மயக்கந் தொடராமல்
கவலைப் பிணிகள் அடராமல்
கனவை நனவாய்த் தொடர்ந்தடர்ந்து
கரைய விழியின் புனலாருய்த்
துள்ளி மனந்தான் மிகச்சலனந்
தொடுத்துத் தொடுத்தே அலையாமல்
சுகமாய் உன்றன் இருபதத்தைத்
தொண்டன் மனத்துட் கொண்டருள்வாய்
உள்ள படியே மனத்தடத்தில்
ஒன்ருய் வாழுங் கனியமுதே
ஓங்கா ரத்துக் குள்ளிருந்தே
உயர்ந்த கமலா சனத்தரசே
வள்ளல் இடத்தி அருள்மயத்தி
வனச முகத்தி கனகசத்தி
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அபயம் அளிப்பாள் அஞ்சல் நாயகி

இதற்கு முந்திய ஜன்மங்களில் செய்த வினைப் பயன்களை இப்போது அனுபவித்துத் தானே ஆக வேண்டும்? போன பிறவியில் பெரியோர் யாரைப் பழித்தேனோ? அந்தணர் செய்த வேள்வியையும் நோன்பினையும் அழித்தேனோ?

பெற்ற தாய்க்கு சோறு போடாமல் நான் மட்டும் இன்சுவை உண்வைத் தின்றேனோ? அருமையான தவங்களைச் செய்பவர்களுக்கு இடைஞ்சல்கள் செய்து அற்பர்கள் கூட்டத்தில் சேர்ந்தேனோ? எப்படியோ, அந்த பாப மூட்டை எனக்குச் சேர்ந்து விட்டது. அந்தப் பிராரப்த கர்ம வினை மூட்டையை கரைக்க வழி தெரியாமல் கலங்கித் தவிக்கிறேன் தாயே!

உன்னுடைய அருட்பார்வை என்மேல் விழுந்தால் தான் நான் அந்த வினை முடிச்சைக் கரைக்க முடியும். தாமரை முகத்தினளே! வில்லைப் போன்ற புருவமுடையவளே! உன் கருணைக் கடாக்ஷத்தால் தான் என் தொல்லைகளெல்லாம் தீரவேண்டும். அபயமளிக்கும் அஞ்சல் நாயகியே! மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத் தாயே என்னைக் காத்தருள்வாயே!

31\. "பெரியோர் எவரைப் பழித்தேனோ
பிரம தவத்தை அழித்தேனோ
பெற்ற தாயார் பசித்திருக்கப்
பேணி வயிற்றை வளர்த்தேனோ
அரிய தவத்தோர்க் கிடைஞ்சல்செய்தே
அற்ப ரிடத்தில் சேர்ந்தேனோ
அறியா மையினால் என்னகுற்றம்
ஆர்க்குச் செய்தே னோஅறியேன்
கரிய வினைதான் எனதறிவைக்
கலங்க வடித்து முடிச்சதையுங்
கரைக்க வுன்றன் கருணையினால்
கடாக்ஷம் பொருந்த அருள்புரிவாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வரிவில் புருவ மடமானே
வதனும் புயவா லாம்பிகையே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

கருணைநிதியே

மலையைத் தூக்கி தலைமேல் வைத்தால் ஊன்றி நிற்கும் கால் தான் தாங்குமோ? நான் அறிந்தோ அறியாமலோ தவறுகள் செய்திருக்கலாம். மகன் தவறுகள் செய்தால் தாய்க்குக் கோபம் வரும் தான்; தன் கோபத்தை மகன் மேல் காட்டினுல் அவன் தாங்க மாட்டான் என்று தாய் சினத்தை அடக்கிக் கொள்வாள் அல்லவா? என் அருமைத் தாயான நீ, என் பிழைகளுக்காக என்னை கோபிக்கலாமா? உன் கோபத்தை தாங்கும் சக்தி எனக்கு ஏது?

அழகிய கிளி போன்றவளே! கருணைநிதியே!! சிவபெருமானையே ஆட்டிப் படைக்கும் சிவையே!! பராகாச வெளியில் வீற்றிருப் பவளே! என் மனத்துள் எப்படியோ சேர்ந்து விடுகிற காமம், வெகுளி, மயக்கம் என்ற மலங்களை நீக்கி உன் அருட்புனலால் துடைத்து உன் உபய பாதங்களில் என்னை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

32. ''கனத்த மலையை எடுத்தணுவாய்க்
காலால்ஊன்றி மீதுவைத்தால்
கால்தான் தாங்க வசமாமோ
கருணை நிதியே இனிஉனது
சினத்தை மகன்மேற் பொருத்திநின்ருல்
சிறியேன் பொறுத்து நிலைப்பேனே
சிவையே உனது தயவுவரச்
செய்வாய் இனிஅஞ் சுகஇனமே
தொனித்த மறையின் முடிவிளக்கே
சோதி வதனச் சுடரொளியே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சுத்த வியோம மண்டலத்தில்
சுகமாய் வளரும் துரந்தரியே
மனத்துள் அழுக்கை அகற்றிஉன்றன்
மலர்ப்பா தமதில் சேர்த்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

சிவகாமியே!

கனக சபையில் எழுந்தருளியிருக்கும் சிவப்பரம் பொருள் கோல நடராசனுக இருக்கும் போது ஒன்ருய், கூத்தன் துணை சிவகாமி என இரண்டாய், ஒன்றும் அன்றி இரண்டும் அல்லாது பகலாகவும் இருப்பவளே! அவன் ஆடுவான், நீ பாடுவாய்! நீ ஆடுவாய்! அவன் பாடுவான்! இருவரும் சோந்து ஆடுவீர் பாடுவீர்!

அந்தக் காட்சியினைக் காணும் அடியார்களின் விழியும் நெஞ்சும் களி நின்ற வெள்ளம் கரை கண்டதில்லை'.

அமுதம் போன்றவளே! பரம்பொருளே! அணுவிலும் அணுவைச் சத கோடிட்ட கோணிலும், அண்டத்திலும் பிண்டத்திலும் அமர்ந்த சிவமாய், ஞான வெளிப் பேரரசியாய், வேத ஜனனியாய், காற்ருய், சுழுமுனை நாடியின் நடனமிடும் கண்மணியாய் திகழ்பவளே! எளிய என்னை ஆட்கொண்டு அருள் புரிவாய் கருணைச் சுடரே!! 'மயிலா புரியில் வாழும் ஈசனின் வாழ்வரசியே!

33 ''கிளியே அருண வொளிச்சுடரே
கிருபா னனமா முழுமதியே
கெடியாம் உன்றன் இருபதங்கள்
கிடைக்கும் வகையும் பெறுவேனே
ஒளியா யிருக்குங் கனகசபை
ஒன்றே இரண்டே விபரீதமே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உரைக்குங் கருணா நிதியயிலே
உதித்த பரம னுடன்ஆடும்
அளியா ரமுதே பரம்பரையே
அணுவில் அணுவாய் அண்டபிண்டம்
அமர்ந்த சிவமே ஞானவெளிக்(கு)
அரசே வேதத் துட்பொருளே
வளியே சுழியில் நடமிடுகண்
மணியே எளியேற் கினியருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

அர்த்தநாரீஸ்வரியே!

ஆசைக் கடலில் அகப்பட்டு, வினையலையில் மனமாகிற சூழலில் சிக்கி, கைகளை அசைத்து அசைத்து அந்தத் துயரக் கடலில் நான் நீந்தித் தவிக்கும் போது, என் கண்களுக்குக் கரையே தட்டுப்படாது என்ன ஆகுமோ என நடுங்கி துயருற்று, கோபமாகிற சுறுமீன் என்னைப் பற்ற வரும்போது தப்ப வழி தெரியாமல், எந்த ஆதரவுமில்லாமல் 'கோ'வெனக் கதறி அழுவேன். அப்போது கருணையோடு ஓடிவந்து உன் அருள் தோணியில் ஏற்றி பவக் கடலிலிருந்து என்னை கரையேற்ற வேண்டும். இது என்ன உனக்கு அரிதான காரியமோ? நீ எவ்வளவு பெரியவள்? எத்தகைய சக்தி படைத்தவள்? சிவப்பரம் பொருளின் வாம பாகத்தை வவ்வியவள் அல்லவா நீ?

34. ''கவலைக் கடலில் வினையலையில்
கனத்த மனமா கியமடுவில்
கைநீச் சாக நீந்தஎன்றால்
கரைதான் அடுத்துக் கிட்டவிலை
சவல மலையில் இடர்படவும்
தகையும் வெகுளி மகரமது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாவி வரவும் கைப்பிடிக்கத்
தாஞ தரவும் இல்லாமல்
குவளை விழியில் புனல்பெருகக்
கோகோ எனயான் அழுதுநின்ருல்
குறித்துன் னருள்தோ ணியில்ஏற்றிக்
கொண்டே கரையில் சேர்த்தருள்வாய்
மவுனச் சிவனுர் இடப்பாகம்
வளரும் கருணு நிதிமயிலே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத் தாயே!''

விட்டது பற்று! உற்றது வீடு!!

நல்லவர்கள், சான்ருேர்கள் ஆகியோர் நடந்து கொள்ளும் வழி வகைகளை அறியாத மூடன் நான். நான் நான் என்றும் எனது எனது என்றும் அகங்கார மமகாரத்தால் அலைந்து திரிகிறேன். ஞானம் இல்லாததால் என் உடைமை, என் வீடு, என் மக்கள், என் மனைவி என்று இதற்கு முந்திய பிறவியில் தொடர்பு இல்லாத ஜீவன்கள் மீதும், நிலையற்ற பொருட்களின் மீதும் ஆசை வைத்து அழிகிறேன். இந்த சம்சாரக் கடலில் சிக்கி உழலுவதால் வறுமையும் துயரமும் தானே மிஞ்சுகிறது தாயே! நீ தான் நித்யானந்த சொரூபி! என்றும் நிலைத்திருக்கும் பரம்பொருள்! உன் திருவடியின் மீது பற்றும் பாசமும் வைத்து ஜன்மம் கடைத்தேற முயற்சிக் காமல் தற்காலிக உறவுக்குச் சொந்தக்காரர்களான உற்ருர் உறவினர் தம்பால் பற்று வைத்து புல்லர்களின் துணை மெய்யென ்பிப் பொழுதை வீணுகக் கழிப்பேனே, இந்தப் பிறவியில் ்ந்த உயிர் இந்த உடலில் இருக்கப் போவது குறுகிய காலமே! வெளியே சென்று மீண்டும் உள்ளே வந்து வந்து போகும் ஆவி, எப்போது போனது திரும்பி வராமல் நிற்குமோ தெரியாது. இந்த உயிர் உடலில் தங்கி இருக்கும் வரையில் தான் 'நான்' என்று பேசுகிறேன்; எனது மனைவி, மக்கள், சுற்றம் என்று உறவினை வெளிப்படுத்திப் பேசுகிறேன். பஞ்ச பூதங்களினுலான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
இந்த சரீரத்திலிருந்து உயிர் போன பிறகு எல்லாம் எனக்கே சொந்தம் என்று பறை சாற்றிய எவையும் உடன் வரப்போவதில்லை.

ஆகவே, இந்த அற்ப ஜீவன்கள் மீதும் பொருள்கள் மீதும் வீணுகப் பற்றை வைப்பேனே; அப்படி இவைகளில் மயங்காமல் நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். என்னுடைய உள்ளத்தில் நீ பரிபூரணமாகக் குடிகொண்டு விட்டால், எனக்கு இத்தகைய மயக்கங்களும், தொல்லைகளும், துயரங்களும் இனி வராது. என்மீது கருணை கொண்டு அருள்புரிவாய் தாயே!

35. ''நல்லார் நடக்கும் வகைஅறியேன்
நான்நான் எனவே உலகமதில்
நாடு வீடு மாடுமக்கள்
நம்பு மனையாள் வாழ்வதனில்
பொல்லா வறுமை பொறுந்திவரப்
புல்லர் தம்பால் வருந்திநின்று
பொழுதை வீணுக் கழித்தொழித்துப்
பொய்யாம் உடலம் வீழ்ந்துவிடில்
எல்லாம் எனதென் றிருந்தவெல்லாம்
எள்ள ளவும்பின் தொடர்வதில்லை
இவற்றில் நிறுத்தி மயக்குவதை
யானே அறியேன் விதிவசத்தால்
வல்லா ணவத்தால் அழியாதென்
மனத்தில் குடிகொண் டாண்டருள்வாய்
மயிலா புரியில் வளர்சீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

மஹா திரிபுர சுந்தரியே!

குழந்தையை நன்ருகக் குளிப்பாட்டி, சட்டையைப் போட்டு, தலையை நன்ருக வாரி விட்டு விளையாட அனுப்புகிருள் தாய். அந்தக் குழந்தை, தாய் அக்கரையோடு செய்த அலங்காரங்களைப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பற்றியெல்லாம் கவலைப் படுவதில்லை. வீதியில் புழுதியில் புரண்டு உடலையும் உடையையும் அழுக்காக்கிக் கொண்டு வந்து நிற்கிறது. அதற்காக தாய் குழந்தை மீது கோபப்படுவாளா?

உடலிலும் உடையிலும் உள்ள அழுக்கினைப் பார்த்து தனக்குள் சிரித்துக் கொண்டே எப்படி ஆக்கிக் கொண்டு வந்து நிற்கிறது பார் என்று பொய்க் கோபம் காட்டி தன் அன்பாலும் பாசத் தாலும் குழந்தையைத் தூய்மை செய்வாள்.

அது போல், அடியார்கள் செய்யும் வினைகளைப் பொறுத்துக் கொண்டு, குழந்தை மேல் அன்பு பூண்டுள்ள தாயைப்போல், அடியார்கள் மேல் கருணை பொழியும் ''மஹாமாதா'' அல்லவா நீ! எவ்வளவு அடியார்களை அவர்கள் தவறுகளைப் பொறுத்துக் கொண்டு உன் கருணையை அவர்கள்பால் பொழிந்திருக்கிறாய் என்பதை யான் அறியாதவனா? உன் கருணை சரித்திரம் அப்படி இருக்கும் போது நான் மட்டும் உனக்கு வேண்டப் படாதவனாக ஆகி விட்டேனே?

முற்பிறவியில் இந்த மண்ணில் பிறந்த பொழுது செய்த வினைகளாலும் அடியார்களுக்கு என்னை அறியாமல் செய்த பாபங்களாலும் எனக்கு வரும் துயரங்களை நான் அறிவேன். உன் வினைப்பயன்களை நீ தான் அனுபவிக்க வேண்டும். விதைப்பவனே அறுக்க வேண்டும் என்பது விதி என்று நீ சொல்லலாம். அதெல் லாம் மெய் என்று எனக்கும் புரிகிறது. ஆனால், இந்த பாப முடிச்சுகளின் விளைவால் வரும் துயரங்களை என்னால் தாங்க முடியவில்லையே தாயே!

''இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந் தார்மாட்டு''

என்று வள்ளுவப் பெருந்தகை கூறினாரே! அந்த வார்த்தை பொய்யோ அப்படி இல்லை என்றால், வினைப்பயனால் இந்த வாழ்வில் உழன்று துன்பங்களை அனுபவித்துத் தவிக்கும் சோகம் உனது தொண்டனாகிற எனக்கு ஏற்படலாமா? இந்தப் பவப் பிணியிலிருந்து என்னைக் காப்பாற்றும் அருமருந்து நீதான் என்பதை நான் அறிவேன்.

''உலகங்கள் அனைத்தும் ஆளும் பேரரசியே! வாலாம்பிகையே !!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
மஹா திரிபுரசுந்தரியே !!! மயிலாபுரித்தாயே !!!! என் மேல் கருணை காட்ட மாட்டாயா?''

36. ''அடியார் செய்யும் வினைதனக்கோர்
அருள்செய் துவந்து காக்கிலையோ
யான்மாத் திரந்தான் உன்றனுக்கே
ஆகா தவனாய்ப் போனேனோ
படிமேல் முன்செய் தவக்குறையோ
பக்தர் தமக்குத் தீம்புசெய்த
பாபந் தானோ அறியாமற்
பலவாய் என்றன் உயிர்மறுகி
முடியாக் கலக்கம் கொள்ளவைத்து
மூழ்க அடித்தால் என்செய்கேன்
மோச மான இருவினையில்
முளைத்தே எழுந்து சென்னமதை
மடியக் கருணை இனிஅருள்வாய்
புவனை வாலை திரிபுரையே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

மயிலாடுதுறை மயிலே!

தாயே! உன்னுடைய கருணை என் மீது பரிபூரணமாக இருந்தால் எனக்கு ஏது துன்பம்? என்னை ஆட வைப்பவள் நீ! ஓட வைப்பவள் நீ! நீ இயக்கினால் நான் இயங்குகிறேன்! எனவே, வினைகளைச் செய்ய வைத்தவளும் நீ! அதன் பலன்களை அனுபவிக்கச் செய்பவளும் நீயே! நீயே படைப்பவள்! நீயே காப்பவள்! நீயே அழிப்பவள்! திருமாலின் ஆயுதங்களான சங்கும் ஆழியும் உனது ஆயுதங்களே! நீயே கோவிந்த ரூபிணி! உயிர்க் கூட்டங்களுக்கு உள் இருந்து ஒளிரும் தவப்பொருள் நீ!

அடியேன் செய்த வினைகளையெல்லாம் உன் கருணையால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
அகற்றி என்னை உன்னோடு உன்னுடைய திருவடிகளில் ஆகாய வெளியில் சேர்த்துக் கொள்வாய்! கப்பல்கள் நிறைந்த பொன்னி நதி, அழகு கொப்பளிக்க பாயும் கரையான மயிலாடுதுறையில் வீற்று இருக்கும் தாயே! எனக்கு அருள் செய்வாயே!

37. ''எங்கும் சரியாய் நீஇருந்தே
ஏற்றல் குறைச்சல் பேதகற்றி
என்னு ருயிரை இப்பிறப்பில்
எடுத்தாட் டியதும் அறியேனே
சங்கம் ஆழி தரித்தவளே
சகல உயிர்க்கும் உயிர்க்குயிராய்த்
தானுய் இருந்த தவப்பொருளே
தமியேன் செய்த வினைமுழுதும்
மங்கும் படியே நீபார்த்து
மடங்காக் ககனப் பெருவெளியில்
மாரு தருணக் கமலமதில்
வாழக் கருணை நீஅருள்வாய்
வங்கங் கொழிக்கும் பொன்னிநதி
வளர்ந்த புனலா றிசைந்துவரு
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

அருள்வாய் நன்மார்க்கம்

தாயே! உன் திருநாமங்களைச் சொல்லி எவ்வளவு ஓலமிட்டாலும் மலமற்ற உமையாளாகிய நீ என் உள்ளத்தில் அமரவில்லையே! ஏன்? இந்த மனம் அழுக்குள்ள இடம் என்பதாலா? ஆமாம் தாயே இந்தப் பாழும் மனத்தில் பல காலமாக பலவித அழுக்குகள் சேர்ந்து விட்டன. விளக்கு இல்லை என்றால் இருள் ஓடி வந்து சூழும் என்பது உண்மை தானே! ஒரு நாழிகை கூட இந்தப் பாவி உன் உபய பாதங்களை நினைக்காமலும் உன் அடியார்கள் சொல்லும் பெருமைக்குரிய திருவாசகங்களை கேட்காமலும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
வாழ்நாளை வீண் நாளாகக் கழித்து விட்டேன். சம்சார சுகமென்னும் தோன்றித் தோன்றி மறையும் கனவு சுகத்தில் மயங்கிக் கிடந்து விட்டேன். என்றாலும், நீ தான் என்மேல் கருணை வைத்து உன்னை நினைந்து நினைந்து அழுது தொழுகின்ற நன்மார்க்கத்தை எனக்குக் காட்டி என்னை உன் அடிமையாக்கிக் கொள்ளவேண்டும். அன்னை பராசக்தியே! இமய பர்வதராஜன் திருமகளே! அருள் புரிய மாட்டாயா?

38. "ஓல மிடவும் அமலையுந்தான்
உறுதி மனத்திற் பொருந்தவில்லை
ஒருநா ழிகையா யினும்மிடியன்
உபய பதத்தை நினைத்ததில்லை
காலம் அறிந்து நினதடியார்
கருது மொழியும் கேட்டதில்லை
கனவா கியசம் சாரமெனுங்
கடலி னிடைவீழ்ந் தலைமோத
நீல இருளில் விழிக்குருடாய்
நின்றே மயங்கிக் கிடப்பேனை
நீதான் கிருபை பொருந்தியுன்றன்
நெறிதான் அளித்து நிலைவைப்பாய்
வாலை வடிவே ககனமுடி
வான திருவே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

அருள் மணி

உலகிலுள்ள சர்வ ஜீவராசிகளையும் படைத்து அவைகளை வாழவைத்து ஆளுபவள் நீ! அடியார்கள் உள்ளத்தாமரையில் உதயசூரியனாக உதிப்பவள் நீ! எல்லா உலகங்களிலும் அழகில் உன்னை விடப் பேரழகி உண்டா? அடியார்களின் உள்ளங்களுக்கு அமுதமாக இனிப்பவள் நீ! உன்னை மகளாகப் பெறவேண்டுமென்று

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
அந்த பர்வத ராஜன் எத்தனை காலம் தவம் செய்தான்? அவ்வளவு பெரிய மகராசியான நீ இந்த ஏழையான நான் குழந்தைப் பருவத்தில் பசியால் அழுது துடித்தபோது கருணையோடு எப்படி ஓடி வந்து உன் அருள் முலைப் பாலை நல்கினாய்? இத்துடன் உன்னுடைய கருணை வெள்ளத்தை நிறுத்தி விடாதே தாயே!

இந்த ஜென்மம் கரையேற உன்னைத் தெய்வமாகக் கொண்டு அழுவதல்லாமல் பிற சமயம் விரும்பாத நெறியை எனக்கு நல்கிய நீ இந்த மண்ணில் மீண்டும், மீண்டும், இறந்தும் பிறந்தும் அவதியுறும் பவப் பிணியிலிருந்து என்னை விடுவித்து மரண மில்லாப் பெருவாழ்வை எனக்கு அருள வேண்டும். ஆமாம் தாயே! உன்னை மறவாமையை அருளிய நீ, இம்மண்ணில் பிறவாமையையும் அருள வேண்டும். கருணைக் கடலும் அடியார் களுக்கு அபயமளிக்கும் நாயகியுமான உனக்கு இது அரிதோ?

39. ''ஆண்ட வளும்நீ யாமாகில்
அழகு துரைச்சி நீயாகில்
அருணன் நிறத்தி நீயாகில்
அமுதச் சிவத்தி நீயாகில்
பூண்ட இமயா சலத்தின்உயர்
பொன்னே நீதா னுமாகில்
புகழ்ந்தே எனக்குன் அருள்முலைப்பால்
புசிக்கக் கொடுத்த தாயாகில்
நீண்ட புகழ்உன் சமயமெனும்
நெறிதந் ததுவும் நிசமாகில்
நிலத்தில் எனையே பகைத்தகற்ற
நேரிட் டிருப்பார் பேருடலம்
மாண்டு விடவே அருள்புரிவாய்
வாரா கினியே அருள்மணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாயேஸ்வரி

தாயே! இந்த மண்ணில் குழந்தையாய் விழுந்து, அழுது, கிடந்து, நடந்து, ஓடி, பல கல்வியை நாடி, வாலிபம் எய்தி, பலபொருளேத் தேடி, நாரியரைக் கூடி, காமச் சுகம் கண்டு, பல் வகை பிணிகளேக் கொண்டு, அலேயில் அகப்பட்ட துரும்பாய் மனம் அலேந்து, அனலில் அகப்பட்ட மெழுகாய் உருகி, அழுகிய பழம்போல் உடல் தளர, பஞ்சடைந்த கண்கள் நீர் சொரிய, மனநிலே அழிந்து படும் அவஸ்தைகளே எல்லாம் போக்கி, என்னேக் கரை சேர்க்க வேண்டுமாளுல், உன் உபய பாதங்களில் என் ஆவியை நீ ஐக்கியப் படுத்திக் கொள்ள வேண்டாமா?

கரும்புச் சிலேயைக் கைப்பிடித்த கரத்தழகியே! நீ ஏன் கரும்பு வில்லும் மலரம்புகளுமாய் ''கன்னற்சிலேயும் ஐங்கணேயும் கரத்தில் சிறந்த பரைத்திருவாய்'' அமர்ந்திருக்கிருய் என்று எனக்குத் தெரியாதா? அடியார்களேப் பஞ்ச இந்திரியங்கள் படுத்தும் பாட்டி லிருந்து விடுவிக்கத் தானே. உதிக்கின்ற செங்கதிராய் செக்கச் சிவந்த மேனியளே!

எப்படித் தவம் செய்ய வேண்டுமென்று உலகுக்குக் காட்ட தக்ஷன் மகள் தாக்ஷாயணியாகப் பிறந்தும், காத்யாயன மகரிஷிக்கு மகளாக காத்யாயனியாக அவதரித்தும், இமய பருவத்ராஜனின் தவத்திற்கு உருகி, கருணே கொண்டு, பார்வதியாகத் தோன்றியும் சிவப் பரம்பொருளே அடைய நீ செய்து காட்டிய தவங்கள் எத்தனே எத்தனேயோ! தவத்தை செய்து சிவத்தை அடைய வழியினேக் காட்டிய 'தவத்தி' நீ அல்லவோ?

மனித ஜீவன்களே பவப் பிணியிலிருந்து விடுவித்து, அவர் களின் எண்ணமும் ஏக்கமும் ஈடேற வெற்றி தந்த மனேகரி நீ! சிந்தாமணியாய், ரத்னுபரணியாய் மலேயில் உதித்தவளும் நவபீட வாசத்தில் உறைபவளுமான மாயேஸ்வரி நீ!

40. ''அலேயில் துரும்பாய் மனம்அலேய
அனலில் மெழுகாய் மனம்உருக
அளிந்த பழம்போல் உடல்தளர
அருவி விழிகள் புனல்சொரிய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கலையில் அறிவும் பிசகிநின்ற
கலக்க மதனை அகற்றிஒரு
கனஞ்சேர் உன்றன் இணையடியைக்
காண வசங்கொண் டிருக்கவைப்பாய்
சிலையைப் பிடித்த கரத்தழகி
சிவத்தி தவத்தி பவம்அகற்றி
செயமே தரித்த மனோகரத்தி
சிந்தா மணிரத் னுபரணி
மலையில் உதித்த நவபீட
வாசம் உறைமா யேஸ்வரியே
மயிலா புரியில் வளர்சன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

ஆவி தளர்ந்தது ஓடிவந்தேன்

ஆடி, ஓடி, பொருள் தேடி வளமாய் வகையாய் வாழும் காலத்தில் நம்மோடு கூடி வாழ்ந்து மகிழும் உற்றார், உறவினர், நண்பர் நாட்டிலுள்ளோர் அத்தனை பேரும், நாம் நாடி தளர்ந்து நரை மிகுந்து, பொருள் அழிந்து, மண்ணுக்குப் பாரமாய் விண்ணுக்கு ஏக துடிக்கும் நேரத்தில் நம்மீது பகைத்து, எடுத்த தற்கு எல்லாம் எரிந்து விழும் விந்தையை எண்ணி சிரிப்புதான் வருகிறது! அப்போது உற்றார் மட்டுமா பகைக்கிறார்கள் உடலே பகைக்கிறது. நம் உள்ளமே பகைக்கிறது! உடன் பிறந்தோர், மனையாட்டி, நிலமும் நீரும் எல்லாமே பகைக்கின்றன.

ஆக, எல்லாமே என்னைப் பகைக்கும் போது, ஓடிவந்து உன் திருவடியைப் பற்றிக் கொள்வேன்! என்னைப் பகைப்பவர்கள், எல்லாமாய், உள்ளதுமாய், அல்லதுமாய், மூல முதல்வியான உன்னைப் பகைக்க முடியுமோ? அதேபோல், உன் உபய பாதங் களைப் பற்றிய பின், என்னையும் பகைக்க முடியுமோ? வளமையும், பேரழகும் கொண்ட மயிலாபுரித் தாயே! கருணை கொண்டு எனைக் காப்பாற்றுவாய்!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

41. "உடலும் பகைக்க அகம்பகைக்க
ஒக்கப் பிறந்தார் மனையாட்டி
உடனே பகைக்க ஊர்பகைக்க
ஒழிந்த பெரியோர்க ளும்பகைக்க
கடலும் பகைக்க நிலம்பகைக்க
கனல்கால் ககன முடன்பகைக்கக்
கருதி இருக்கும் வேளைஇதைக்
கண்டே யோஎன் மாதாவே
சடலந் தனையே பகைப்பதல்லால்
சர்வ மூல முதல்விஉனைத்
தானே பகைக்க இக்கயவர்
தம்மா லாமோ தார்குழலே
அடலம் பரையே உனைஅடுத்தேன்
வந்தென் றனைநீ காத்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

பற்றினேன் பத்ம பாதம்

பெற்றவர், உற்றவர் என இந்த வாழ்வில் எனக்கு அமைந்தவர்கள் இந்தப் பிறவியில் ஏற்பட்ட உறவுக்கு தற்காலிக சொந்தக்காரர்களே! பொருளைப் பெற, கல்வியை நாடி ஊரெல்லாம் ஓடித் திரிந்து பெற்ற பொருளும் அந்தப் பொருளைக் கொண்டு அடையும் மண்ணுலக சுகங்களும், பெண்ணுலக இன்பங்களும், அவற்றை எல்லாம் அனுபவிக்கும் இந்தப் பாழும் உடலும் நிலையற்றவை; அழியக் கூடியவையே! உன் திருவடிகளைப் பற்றியதால் எனக்கு ஏற்பட்ட மெய்யுணர்வு இது! உன் அருளால் "தன் உணர்வு" பெற்ற நான் இந்த உடலையும் அது அனுபவிக்கத் துடிக்கும் இன்பங்களையும் சிறிதும் வேண்டேன். உன் கருணையால் பெற்ற ஞான உணர்வு என்றும் என் உள்ளத்தில் நிலைத்திருக்க உற்ற உறுதி தளராதிருக்க பற்றினேன் உன் பத்ம பாதம் பற்றிய ஞானிகளின் திருவடியை. இனி எவரையும் நம்பேன்! வரை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
மகள், அடியார்களுக்கு அடைக்கலம் அருளும் அஞ்சல் நாயகி, அபயாம்பிகைத் தாயான உன்னை வணங்குவேன்! வாழ்த்துவேன்!

42. ''உற்றார் பெற்றார் தமைவேண்டேன்
ஊழி வினையால் வரும்பொருளும்
உடலும் வேண்டேன் செழித்திருக்கும்
ஊரும் உலகு மதைவேண்டேன்
சற்று யினும்இவ் வுலகிலுள்ளே
தனுவா திகளும் வரல்வேண்டேன்
தன்னை அறிய அறிவருளுந்
தாயே உன்றன் இருபதங்கள்
பெற்றார் அடிஎன் சிரமதனில்
பிரியா திருக்கும் வகைவேண்டிப்
பிடித்தேன் எனது மனவுறுதி
பிசகா திருக்க வரம்அருள்வாய்
மற்று ரையும்நான் நம்பவில்லை
வரையின் மகளே உனைஅடுத்தேன்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

மலரட்டும் திருவடித் தாமரை

இதற்கு முந்திய பிறவிகளின் வினைப் பயன்களின் விளைவால் ஏற்பட்ட வாழ்க்கை இது, என்னும் நினைவு வேண்டும். அந்த நினைவு இருக்குமானால், வாழ்க்கையை அறவழியில் குறிக்கோளுடன் வாழ வேண்டும் என்னும் ஞான உணர்வு தோன்றும். அத்தகைய ஞானம் ஏற்பட்டவர்களுக்கு, பட்டினத்தடிகள் சொன்னது போல்,

> ''மாதா உடல் சலித்தாள், வல்வினையேன் கால் சலித்தேன்
> வேதாவும் கைசலித்து விட்டானே.''

என்ற உண்மை புரியும்; எனவே பிறந்த பிறவிகள் போதும், இனி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
பிறவாமை வேண்டும் என்று ஏங்கத் தோன்றும். அந்த ஏக்க உணர்வு ஏற்பட்டால், அம்பிகையின் பாதத்தை மனத்தில் வாங்கி அவளைப் போற்றி துதிக்க உளம் துடிக்கும். அந்த நிலை எய்திய அபயாம்பிகை பட்டர், அந்த உணர்வோடு இந்தப் பாடலில் பேசுகிறார்.

தாயே! வினைவழியே உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவு அற்று மறுகும் அப்போது உரிய தருணத்தில் உன் திருவடித் தாமரையை எனக்குக் காட்டி என்னை ஆட்கொள்வாய்! வாழும் காலத்தில் எனக்கு வளத்தைச் சேர்த்தவள் நீ! ஆனந்தமாய் வாழ்வின் சுகங்களை நான் அனுபவித்த போது என் ஆனந்தத்தைப் பார்த்து ஆனந்தப்பட்டவள் நீ! நேரேயிருந்து களிப்பவள் நீ! நித்யானந்த சுகப் பொருள் நீ!

அப்பனை என்றும் பிரியா தற்பரை நீ! மனித ஜீவன்களின் புருவ நடுவில் வீற்றிருந்து மனத்தை ஞான நிலைக்கு எழுப்பும் 'மனோன்மணி' நீ!

எனக்கு அமுதானவள் நீ! உள்ளத்துக்கு உயிரானவள் நீ! ஆனந்த வெள்ளத்தை அருளும் அபயாம்பிகையே! என் உள்ளத்தில் நின் திருவடித் தாமரை என்றும் மலர்ந்திருக்க வேண்டும்!

43. ''ஒன்றோ டொன்று நெருங்கிஇந்த
உடலை விலக்கி உயிர்நெகிழ
உற்றகால மதனில் எனக்(கு)
உனது பதங்கள் எதிராக
நின்றே எனக்குன் அருள்அளிப்பாய்
நிதியே கருணைக் கடல்மயிலே
நேரில் அமைந்த தற்பரையே
நித்யா னந்த மானவளே
அன்றே அனைத்தும் ஒன்றாக
அரனா ரிடத்தில் இருப்பவளே
அடர்வில் புருவ மணிநுதலே
அமுதே என்றன் அகத்துயிரே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மன்றே பொருந்தும் இருபாதம்
மறவா திருக்க வரம்அருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

தர்மசம்வர்த்தனி

அகரமுதல எழுத்தெல்லாம் வடிவாகக்'கொண்டவளே! அகரம் முதல் க்ஷகரம் வரை 51 எழுத்துக்களும் உனது வடிவமல்லவோ? அகிலாண்டங்களையும் பூத்தவளே! பராகாச பேரழகியே! மல மில்லா சுகங்களை அருளும் அமல சுகப்பொருளே! அருள் மய மானவளும் அருண நிறத்தவளுமான அம்பரத்தியே! வியோம வியாபினி முதல் சிவாய நம என்பது ஈருன எண்பத்தொருபத மந்திரங்களையும் கடந்த துவாத சாந்தப் பெருவெளியில் சிம்மாசனம் கொண்டவளே!

இமயாசலத்தில் எழுந்தருளி, ஐயன் கொடுத்த இருநாழி நெல் கொண்டு முப்பத்திரண்டு அறங்களைச் செய்து, அறம் வளர்த்த நாயகியே! தர்மசம்வர்த்தனியே!

எல்லாப் பெருமைகளுக்கும் உரியவளான உன்னைப் புகழ்ந்து பாட எனக்கும் அருள் புரிவாய் தாயே!

மண்ணில் பூத்து மலரும் தாயே! அன்னக் கொடியே! என் கண்ணில் தோன்றி உன்னைப் பற்றி என் புண்ணின் சொற்களால் பாட அருள் புரிவாய் மயிலா புரியில் வளரீசன் வாழ்வே!

44. ''ஐம்பத் தோராம் அக்ஷரத்தி
அகிலாண் டத்தி அந்தரத்தி
அமல சுகத்தி அருள்மயத்தி
அருண நிறத்தி அம்பரத்தி
எண்பத் தோராம் பதங்கடந்த
ஏக வெளிச்சி காரணத்தி
இமயா சலத்தில் வந்தருளி
இருநா ழிகைநெற் கொண்டுலகில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உம்ப ரடியார்க் கறம்வளர்த்த
உமையே அருள்வா ரிதிமாதே
உனது பதத்தை அடியேனும்
உரைத்து மகிழ வரம்அருள்வாய்
மண்பூத் தலருங் கமலமதில்
வளருங் கனமே கொடிஅனமே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

ஆனந்தம்! பரமானந்தம்!

ஆடி வெள்ளிக் கிழமை, தை வெள்ளிக் கிழமைகள் ஆகியவை அம்பிகையை வழிபட உகந்த நாட்கள். அந்த நாட்களில், அம்பிகைக்கு அன்றுடம் அபிஷேகமும் வழிபாடுகளும் நடத்தி வரும் பூசாரி, மண்ணுல் கரகந்தனே பிடித்து, வேப்பிலையாலும், பூக்களாலும் அந்தக் கரகத்தை அலங்கரித்து, தலை மீது வைத்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடுவான். ஆம், அது ஆனந்தக் கூத்து தானே! அம்பிகையைக் கரக உருவில் தலையில் சூடிக் கொள்ளும் போது ஏற்படும் உணர்வு பரமானந்தம். அந்த ஆனந்தக் களிப்பு ஏற்படும் போது உள்ளம் கூத்தாடுகிறது; எனவே, உடலும் கூத்தாடுகிறது.

தாயே! உன்னைக் கரக வடிவில் சிரமேற்று ஆனந்தக் கூத்தாடும் பூசாரி போல், மானசீகமாக உனது திருவடிகளை என் தலைக்கு அணியாகச் சூடிக் கொள்ளும் போது, வான வெளியில் வீற்றிருக்கும், உன்னைக் கண்ணுல் காணும் அவாவில் அண்ணுந்து அசையாதிருக்கும் போது, உனது அருளான அமுததாரை என்மேல் பொழிவதை உணர்கிறேன். அந்த அனுபூதிப் பேரானந்தத்தை அனுபவித்திருக்கும் ஆனந்தநிலையில் அப்படியே அசையாதிருக்கக் கருணைபுரிய வேண்டும் நீயே! சிவப் பரம்பொருளின் உள்ளமானவளே! உயிருக்கு உயிரான உமையே! அகரமுதல எழுத்துக்கெல்லாம் உறைவிடமானவளே! ஞானப்பூங்காவே! மயிலாபுரித்தாயே! என்னைத் தடுத்தாட்கொள்வாய் நீயே!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

45. "மண்ணால் கரகந் தனைப்பிடித்து
வாரி யெடுத்துத் தலைமீது
வைத்தே ஆடும் பூசாரி
மனம்போல் எனது மனம்உவந்து
அண்ணாந் திருந்து குறிபார்த்தே
அசையா திருக்கில் அசைந்துருகி
அமுத தாரை ஒழுகிவர
அதனுட் பொழுதை செலுத்தஅருள்
ஒண்ணாங் ககன முடிப்பொருளே
உள்ளச் சிவமே நவரசமே
ஒன்று யூக மனத்துயிராய்
உயிருக் குயிராய் இருந்தவளே
வண்ணா லயமே ஞானவெளி
வனமே எனைவந் தாண்டருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

பரிபூரணியே

வாழ்வை இரண்டு வழிகளில் கழிக்கலாம். "நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை" என்று பாரமனைத்தும் உன் திருவடிகளில் சுமத்தி, உன்னையே நினைந்து, நினைந்து, உணர்ந்து உணர்ந்து, ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து வாழும் தவ வாழ்க்கை ஒரு வகை.

மற்றும் வேறொரு விதமான வாழ்க்கையும் உண்டு. நிலையில்லா உலகில், தற்காலிக உறவுக்குச் சொந்தமான உற்றார், உறவினர் மீது பற்றும், உலகத்தில் அழியக் கூடிய பொருள்கள் மீது பாசம் வைத்தும், சிற்றின்பங்களுக்கு ஆசைப்பட்டும் வாழும் அந்த வாழ்க்கை "அவ வாழ்க்கை". அம்பிகையின் அருளுக்கு ஏங்கி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
வாழும் வாழ்வின் காலம் தவ வாழ்க்கைக்குரிய காலம்; அல்லாத வாழ்க்கை வாழும் காலம் "அவ காலம்". ஆம்! அது வீணான காலம் தானே!

அவ காலத்தில் மனம் ஆன்மாவுக்கு அடங்குவதில்லை. நிலையற்ற பொருட்களைப் பற்றிக்கொண்டு உடமைகளையும் சிற்றின்பங்களையும் பெற்று ஆணவ மலத்தையும் சேர்த்துக் கொள்ளுகிறது. ஆணவக் களிப்பு ஏற ஏற ஞானம் மங்குகிறது தாயே; உன்னை நினைக்கவே மறக்கிறது! மீண்டும் மீண்டும் பிறந்தும் இறந்தும் அவதியுறும் பவ பிணிக்கு ஆளாகி சம்சார சேற்றில் சிக்கி செய்யும் துன்மார்க்கச் செயல்கள் தான் என்னே!

இப்படிப்பட்ட வினைகளை நமக்கு ஏற்படுத்தும் நமக்குரிய பகை யார்? அந்த வினைகளிலிருந்து நம்மை மீட்கும் உறவு தான் யார்? இந்த மயக்கம் தெளியவில்லை தாயே! ஒன்றுமே புரிய வில்லை அன்னையே!

உனது கருணையால் ஒன்று மட்டும் சற்று தெரிகிறது. சிவப் பரம் பொருளாகிய கடலுக்கே நீ தானே கலங்கரை விளக்கம்?

எனவே, ஏங்க வேண்டியது உனது திருவருளுக்கே! அழ வேண்டியது உன் கருணைக்கே! பிணிகள் அனைத்தும் போக்கவல்ல மூலிகையனைத்தும் கொண்ட பூங்காவே! பரிபூரணமான தாயே! என்னிடம் சற்று கருணை புரிவாயாக!

46. "அவகா லத்தில் மனமும்எனக்(கு)
அடங்கா தெழுந்தே எழுந்துவிம்மி
அகத்தைப் படைத்தே உனதுதிரு
வருளந் தாதி தனைமறந்து
பவமா மயலா ருடன்சேர்ந்து
பண்ணும் வினைநான் என்சொல்கேன்
பார்க்கப் போனல் அதற்கொருவர்
பகையார் உறவார் உலகமதில்
சிவமா யிருந்த சமுத்திரத்தைத்
திரிபாய் நினைக்கு மிதன்வலுமை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri.V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேய்த்தே உனது திருவருளைத்
திறமாய்ப் பெறவே வரமளிப்பாய்
மவுன தீத அலர்கொடியே
வனமு லிகையே பூரணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

வினைப்பனி விலகட்டும்!

வினையின் பயன் அனுபவித்தே தீர்க்க வேண்டும், என்கிறார்கள். வினையின் விளைவுகளை என்னால் தவிர்க்க முடியாதோ? கதிரவனின் ஒளி பட்டவுடன் பனிமூட்டம் விலகுவது போல் உன்னையே நினைத்திருக்கும் நினைவுகள் உன்னையும் உன் பதியையும் என் வசமாக்காதோ? அப்பனும் அம்மையும் என் பக்கம் இருந்தால் கொடிய வினைகளும் என்னை விட்டு ஓடாதோ? உனது அடியார்கள் இதற்கெல்லாம் அஞ்சுவார்களோ?

அழகிய சுந்தரியே! அபயாம்பிகையே! உனது கருணாலயத்தையே வலம் வர எனக்கு அருள் புரிவாயாக!

47. ''வினையின் பயனே பயன்அதனை
வெறுத்துத் தறிக்கப் போகாதோ
வெய்யோன் உதயத் தெதிர்பனியும்
விம்மிச் சுரந்து வளர்ந்திடுமோ
நினையும் நினைப்பும் அதற்காதி
நீயும் உனது பதியோனும்
நிசமாய் எனது வசமானால்
நில்லா தெந்த வெவ்வினையும்
தனையே அறிந்தால் இன்பதுன்பத்
தடைதான் வந்தால் அதுநிகரோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihararaj Collection, Sholinganallur, Chennai

[illegible]
தாயே ம்குந்த சவுந்தரிஉன்
மனேயே அறியக் கருணேபுரி
மணிநா தாந்தத் தனிச்சுடரே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

புகழ்விமலி

நித்யானந்த சொரூபியே! நிர்மலமானவளே! பார்வதியே! புகழால் பேரழகு கொண்டவளே!

உன் அழகுத் திருவுருவத்தை உயிராணவம் இருந்து உற்று நோக்கி உள்ளத் திரையில் உரு எழுத வேண்டும்! உன் திரு நாமங்களே பாடும் பணியே பணியாகக் கொள்ள வேண்டும்; விரும்பித் தொழுது விழிநீர் மல்க வேண்டும்! மெய்ப் புளகம் அடைய வேண்டும்! அப்போது அடையும் ஆனந்த நிலேயில் உள்ளம் திளேக்க வேண்டும். இந்த இரு செவிகளும் உனது பெருமை யையும் கருணேயையும் சொல்லும் கதைகளேயே கேட்க வேண்டும்! ஒருமையுடன் நினது திருமலரடி நினேக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்! எந்நாளும் அந்த அடியார் திருவடிகளே சுற்றி சுற்றி வர வேண்டும். அப்பெரும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைக்க அல்லும் பகலும் அனவிரதமும் உனது நினேவில் நான் வாழ வேண்டும். இத்தனேயும் அடியேனுக்கு நீதான் அருள வேண்டும்!

48. ''கனிந்து கனிந்துன் றனேப்பாடிக்
கசிந்தே இருகண் புனல்பெருகக்
காது உபயம் உனதருளாம்
கதையைக் கேட்க உனதடியார்
இனந்தான் உறவாய் மனம்புதைய
எந்த நாளும் அவர்இருந்த
இடத்தை இருதாள் சுற்றிவர
இரவும் பகலும் நினதருளே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

நினைந்த படியே சிந்தைசெய்யும்
நெறியை உதவி எனைக்காப்பாய்
நித்யா னந்தப் பழம்பொருளே
நிமலி அமலை புகழ்விமலி
வனைந்த சடலத் தொழில்உனது
அடிக்கே இதமாய் அருள்புரிவாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

தூற்றுவார் தூற்றட்டும்!

அன்னை அபயாம்பிகையின் உபய பாதங்களைத் தவிர வேறு பற்றுக்கோடு இல்லாத அபயாம்பிகை பட்டர், தனக்கென்று ஒரு தனி ஆசையோ, வேட்கையோ, வாழ்க்கையோ இல்லாது எப் போதும் அம்பிகையின் சன்னதியிலேயே நின்று கொண்டும், அவள் அழகுத் திருக் கோலத்தைப் பார்த்து ஆனந்தப் பட்டுக் கொண்டும் இருப்பார். அன்னையின் சன்னதியிலேயே நின்று கொண்டு தனக்குத் தானே பேசிக் கொள்ளுவர்; சிரித்துக் கொள்ளுவர்.

மயிலாடுதுறையிலுள்ள சிலர், இவரை ஒரு பைத்தியம் என்ருர்கள்; அந்தணர் குலத்தில் பிறந்தவர், அவர்க்குரிய நித்ய கர்மானுஷ்டங்களைச் செய்வதில்லை என்று தூஷணை பேசினர்கள் சிலர். இன்னும் சிலர் இவர் மது, மாமிசங்களை உண்கிருர் என்று கூட கேலி செய்தார்கள்.

இந்த பழிச் சொல்களெல்லாம் அவர் காதில் விழுந்த போது அன்னையிடம் ''தாயே! இந்தக் கயவர்கள் என்னைப் பற்றி எப்படி யெல்லாம் பேசுகிருர்கள் பார்த்தாயா?'' என்று அழுகிருர், இந்தப் பாடலில்.

தாயே! எனது குலம், எனது குடி, எனது ஜாதி, எனது பெருமை, எனது கூட்டம் என்று பெருமை பேசித் திரியும் கயவர்களின் என்னைப் பற்றிய தூஷணைப் பேச்சுகளைப் பற்றி நான் கொஞ்சமும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harinarayanan Collection, Chennai

கவலைப் படவில்லை! போற்றுவார் போற்றட்டும்! என்னைப் புழுதி வாரி தூற்றுவார் தூற்றட்டும்! ஏற்றேன் என் உள்ளத்தில் உன் அழகுத் திரு உருவை! உனது திருவடிகளைச் சிலந்தி பின்னுவது போல் அடியேனுடைய கரங்களால் பற்றிக் கொண்டேன்! இவர்களின் கேலிச் சிரிப்புகளும் கேவலமான தூஷணைகளும் என்னை என்ன செய்யும்?

தாமரை முகத்தவளான உன் அடிமையான என்னை யார் பேசினால் என்ன, ஏசினால் என்ன?

தன் உபய பாதங்களைப் பற்றிய அடியார்களின் நலன்களைக் காக்கும் திருக் கிருஷ்ணன் தங்கச்சி அல்லவா நீ? அடியார்களைக் காக்கும் காவல் தெய்வமான நீ இருக்க எனக்கு பயமேன்? அடியார்களின் பயத்தினைப் போக்கும் அபயாம்பிகை அல்லவா! நீ?

49. "குலந்தான் நலந்தான் குடியிலுள்ள
குணந்தான் கனந்தான் எமதெனவே
கொள்ளும் கயவர்க் கதுவசனங்
குலவும் உன்றன் இருபதத்தைச்
சிலந்தி யிழைபோல் அறிவுருகச்
செகத்தில் கண்டு பிடித்தவர்க்குச்
செகதூ ஷணிப்பும் நகைப்பும்என்ன
செய்யும் அவரை மலர்க்கொடியே
அலர்ந்த முளரி முகத்தாள்உன்
அடிமை யான நாயேனை
யார்தான் நகைத்தும் பழித்தும்என்ன
ஆதி கிருஷ்ணன் றன்துணைவி
மலர்ந்த மனமார் அடியவர்பால்
வளரும் ஒளிசேர் நிலமாதே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri ... Hariharan Collection, Sholinganallur, Chennai

நீர் மேல் தோன்றும் குமிழி போன்ற நிலையில்லாத உடலை சாசுவதமானதாக எண்ணி, அந்த உடலின் மேலுள்ள ஆசையால் அதைப் போற்றி, அதன் கள்ளப் புலன்கள் விரும்பும் வேட்கைகளைத் தீர்க்க, ஓடி ஓடி பொருள் சேர்க்கும் புல்லர்கள் இவ்வுலக சிற்றின்பங்களில் மயங்கி, அவைகளையே சுவர்க்கமாக எண்ணி வாழ்கிறார்கள். நிலையில்லாத வாழ்க்கை பற்றியும், அதில் அடையும் அல்ப சுகங்களைப் பற்றியும், நிலையான அம்பிகையின் கருணை பற்றியும் உணர்ந்த பெரியோர்களை இழிவாய்ப் பேசி அவர்கள் செய்யும் பாபச் செயல்கள் கோடி கோடி, அத்தகைய தீயவர்களின் பக்கம் மறந்தும் நான் செல்லாமல் உன் திருவடியைப் பற்றிய எனது கரங்கள் நழுவாமல் காப்பாய். உன்னை எண்ணி அழவும் தொழவும் உன் கருணை இருந்தால் தானே முடியும். மேகக் கூட்டத்திடையே தோன்றும் முழுமதியாய், பொன்னாபரணங்கள் பூண்ட பூரணியாய், உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கப் பிறையாய், ஆகாயத்தின் உச்சியில் வீற்றிருக்கும் தாமரை பீடத்து நிலையாளாய், கச்சுகளை மீறித் திகழும் அடியார்களுக்கு வழங்கும் கருணைப்பால் தேக்கங்களாக அமைந்த தனபாரங்களை கொண்டவளாய், அழகு கொழிக்க அமர்ந்திருக்கும் மயூரநாதனின் மனையாட்டியே! அஞ்சல் நாயகியே அருள்புரிவாயே!

50. ‘‘நீர்மேல் குமிழி யாம்உடலை
நிலையாம் எனவே கயவரெல்லாம்
நின்று புவியில் தனம்தேடி
நீள மயக்கால் மிகவாடிப்
பார்மேல் பெரியோர் தமைப்பழித்துப்
பண்ணும் வினைகள் வெகுகோடி
பாவி யர்கள்பாற் சேராதுன்
பதமே கதியாய்ப் பதித்துவைப்பாய்!
கார்மேல் பொருது மதிக்கதிரே
கனகா பரணி மணிப்பிறையே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ககன முடியில் வளர்ந்தெழுந்த
கஞ்சா சனத்து நிலையாளே
வார்மேற் பொருது மலர்க்குயத்தி
வானில் வளரும் முகில்வேணி
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

அமுதமழை! கருணைக்கொடை!

தாயே! உன் அருள் எனக்குக் கிடைக்க வேண்டுமானால், உன் நினைவே நினைவாக நான் வாழவேண்டும். உன் நாமங்களையே நான் சொல்ல வேண்டும். உன் அடியார்கள் நடுவில் இருந்து உன்னையே பாடிக்களிக்க வேண்டும். இந்தப் பணிகளைத் தவிர வேறு நான் என்ன செய்கிறேன் என்றாலும், இன்னும் ஏன் உன் மனம் இரங்கவில்லை? என்னைக் காக்க வேண்டும் என்று உன் கருணை உள்ளத்தில் இன்னும் தோன்றவில்லையோ? உன் மலரடிச் செம்பல்லவம் அல்லது வேறு பற்று இல்லாத இந்த ஏழை மீது கருணை கொண்டு, உனது அடிமையாக்கிக் கொள்ள மாட்டாயா? நான் என்ன கதறியும் பேசாமல் சும்மா இருப்பது நீதியோ?

அமுதம் உண்டவர்களுக்குப் பசிப்பிணி இராது என்பார்கள். என்னைப் பொறுத்த வரையில் உன் கருணை மழையே என்மீது பொழிய நான் விரும்பும் அமுத மழை! அதுவே நான் ஏங்கும் அதிர்ஷ்டக் குடை! என் தாயின் கருணை மழை என்மேல் பொழிந்தால், அவள் கருணைக் குடையை என்னை நோக்கி அருளினால், அந்த ஆனந்த வெள்ளத்தில் அவள் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டே பேரானந்தத்தில் திளைத்திருப்பேன்!

51. ''ஏழை எனையே காக்கவகை
எடுத்த உன்றன் இதயமெல்லாம்
இரங்கி இரங்கிச் சலித்துமதி
எனையே குறிக்கப் பொருந்திலையோ
சூழ உன்றன் இருபதத்தைச்
சுகமாய் மனதில் பொருத்திஇன்னஞ்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சொந்த அடிமை யாக்கிலேயோ
சும்மா இருப்பதென் வகையோ
ஆழி யமுதை அடுத்தவருக்(கு)
அகத்திற் பசியும் உண்டாமோ
அமுத வருஷம் பொழிந்திடில்என்
அதிட்ட மதிலோர் குடையாக
வாழப்பிடித்தால் உன்னை என்னல்
வசனித் திடவாக் கினைத்தருவாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

அலைகள் ஓய்வதில்லை!

வேதத்தின் விழுப்பொருள் போன்றவளே! சிவப்பரம்பொருளின் வாம பாகத்தில் மணியாய் ஒளிர்ந்தாலும், சிவத் தொண்டினையே உனது அணியாகவும் கொண்டவள். ஓயாத அலைகள் போல், மீண்டும் மீண்டும் வந்து வந்து வருத்தும் பிறவிப் பிணி நீங்க, உன் உபய பாதங்களைப் பற்றத் துடிக்கிறேன் தாயே! அஞ்ஞான இருளில் கிடந்து தவிக்கிறேன். அந்த இருளிலிருந்து என்னை மீட்க ஒளிமயமான உன் திருவடித் தாமரைகளை முழுதும் தெரிய எனக்குக் காட்டியருளுவாய் நீயே!

குழந்தை செய்யும் தவறுகளைக் கண்டு அன்னை கோபங்கொண்டாலும், கையில் எடுத்த குழந்தையை எறிவாளோ? அவள் கை வளைந்திருப்பது கருணை கொண்டு கையில் எடுத்த குழந்தையை வாரி அணைத்துக் கொள்ளத்தானே! நான் இழைக்கும் தவறுகளுக்காக, நீ என் மேல் கோபங்கொண்டால், அதைத்தாங்கும் சக்தி ஏது எனக்குத் தாயே! நீ கோபத்தாய் அல்ல! கருணைத்தாய் என்பது எனக்குப் புரியாதா? ஆகவே, கருணை பொழியும் அன்னையே! உனது கோபத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, என் பரிதாப நிலையை உணர்ந்து என்னை ஆட்கொண்டு அருள் புரிவாய்!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

52. "கொடுங்கை தன்னைல் எடுத்தசிறு
குழந்தை தனைத்தாய் எறிவாளோ
கோபங் கொண்டால் யான்நிகரோ
குலவுங் கருணை நிலையாளே
அடங்கி உனது கோபமெலாம்
அகற்றி எனது பரிதாபம்
அறிந்துன் னருளைப் பாலித்தே
ஆள்வாய் வேத விழுப்பொருளே
தொடங்கும் பரமன் இடப்பாகத்து
ஒளிரு மணியே அணிப்பணியே
தொலையாச் செனன அலைஅகலத்
தோற்றும் உனது துணைப்பாதம்
அடங்கத் தெரிய மனம்அடங்க
வாரிக் கருணை பொழிந்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

சிவபுரத்தில் சேர்ப்பாய்!

கானல் நீரை மெய்யான புனலாகக் கருதி ஓடும் மான் போல், நிலையற்ற வாழ்வில் ஈடுபட்டு, மாயையான, பொய்யான கனவாகிய சம்சாரத்தில் உழன்று, நான், எனது உறவு, உடைமைகள் என்று இறுமாப்புடன் கீழான உணர்வுகளுக்குச் சொந்தக்காரர்களுடன் கூடி மகிழ்ந்து திரியும் கூட்டத்தில் ஐயோ நானும் ஒருவனோ?

அகங்கார, மமகார உணர்வுகளும் செயல்களும் என்னை விட்டு நீங்க, தாயே நீ என்னை சிவபுரத்துக் குடிமகனுக்க வேண்டும். நாதன் கழல்களை மனம் நினைக்க, நா 'நமச்சிவாய' 'நமச்சிவாய' என்று சொல்ல, நமச்சிவாயபுரத்தில் அடியேன் வாழ்வு பெற அருள் புரிய வேண்டும். தாமரை போன்ற முகத்தை உடையவளே! ஆகாயத்தில் திகழும் தவக் கொடியே! அகலமான நெற்றியை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

உடையவளே! மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத் தாயே!

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

53. "கான லதனைப் புனலாகக்
கருதி நினைக்கும் மானதுபோல்
கவலை யுடனே குடும்பம்எனும்
கனவா கிய பொய்ம் மாயைதனில்
ஈன ருடனே இருந்துசொல்லி
எல்லாம் எமதென் றெயிலாக
இறுமாப் படைந்து மனம்வீணு
யிரிந்து கலங்கி திரியுமையோ
நான்நான் எனவே மகிழ்ந்திருந்த
நடத்தை யகலச் சிவபுரத்தில்
நாதன் கழல்கள் உணர்வினுள்ளே
நடுவாழ்ந் திருக்க அருள்புரிவாய்
வானு னந்த தவக்கொடியே
வனச முகத்தி வாள்நுதலே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

ஞானப்பால்

நிலம், நீர், வானம், நெருப்பு, காற்று முதலிய பஞ்ச பூதங்களின் உள்நின்று ஒளிரும் பேரொளியே! உலகுக்கெல்லாம் உயிராய் நிறைந்த தவப்பொருளே! காலம் காலமாக உன் உபய பாதங்களை உள்ளத்தில் இருத்தி, உன் தோத்திரங்களை நாவினால் பாடி, விரும்பித்தொழுது விழிநீர் மல்கி, மெய்ப்புளகம் அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி, கனவாய் உலகம் மறக்க, நினைவாய் உன் உருவம் இருக்க, கதறும் கன்றை நோக்கி ஓடிவரும் தாய்ப்பசுவைப் போல, என் மலங்களும் மாயங்களும் அகல, என்பால் வந்து அன்பால் சம்பந்தக் குழந்தைக்கு இன்பால் கொடுத்தது போல, ஞானப்பால் தந்து அருள்வாய் அபயாம்பிகைத் தாயே!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

54. "நிலம்கால் ககனம் கடல்அனலும்
Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நீள இருந்த நெறிச்சுடரே
நிரவி உலகெங் கினும்உயிராய்
நிறைந்தே யிருந்த தவப்பொருளே
பலகா லமும்உன் இருபதங்கள்
பாடிப் பாடி கசிந்துருகி
பரவும் வழிகள் புனல்ஆருய்ப்
பெருகி எனது மனம் உருகக்
கலையும் நிலையும் தெரிந்திருக்கக்
கனவாய் உலகம் மறந்திருக்கக்
கபிலைப் பசுவுங் கதறிமிகக்
கன்றைத் தேடி வருவதுபோல்
மலமா யாதி அகலஎன்பால்
வந்துன் னருட்பால் தந்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

மௌனானந்த சுடர்விளக்கே

அழகு என்பது இனிமையானது. அழகுள்ள பொருளைக் காணும் போது மனதுக்கு இனிமையான உணர்வைத் தருகிறது. மனித அழகுக்குக் கவர்ச்சி உள்ளது. மிகுந்த அழகுள்ள ஒரு பெண்ணைப் பார்த்து அவளுக்கென்ன "பேரழகி" என்று சொல்லு வார்கள். மனித அழகு அழியக்கூடியது. தெய்வீக அழகு அழியாத அருள் அழகு. அன்னை அபயாம்பிகையின் அருட்பேரழகைப் பற்றிப் பேசுகிறார் பட்டர். தாயே உனது அருட்பேரழகை மெய்யறிவினால் உணர்ந்து, உயிராவணம் இருந்து, உற்று நோக்கி, எனது உள்ளக் கிழியில் அந்த அருட் பேரழகுத் திருக்கோலத்தை எழுதிக்கொள்ள வேண்டும். அப்போது எனக்கு ஏற்படுகிற ஆனந்தம் பரமானந்தம். அந்த அருள்மயமான பரமானந்தம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எனக்குக் கிட்டும்போது, மேருப்பிரஸ்தாரமான ஸ்ரீசக்கரத்தின் உச்சியில் நீ வீற்றிருக்க, ஈசனின் சிந்தையிலும் நீ நிறைந்திருக்க, எனக்கு நல்லனவெல்லாம் தருவாய்! அப்படி அம்பிகையின் அழகு தரிசனம் எனக்குக் கிடைத்த பிறகு, என்னை நோக்கி கல்வி வரும், செல்வங்கள் ஓடி வரும், புகழ் என்னைத் தேடி வரும்.

இந்தக் கல்வி, செல்வம், புகழ் எல்லாம் நிரந்திரமில்லா மண்ணுலக இன்பங்களைத் தரும் செகசாலங்கள். இவைகளைக் கண்டு நான் மயங்கமாட்டேன். எனக்கு வேண்டியதெல்லாம் என் கண்ணை மூடியவுடன் தோன்றி நிறையும் நின் சிற்சொரூபம் மனமெல்லாம் நிறைய வேண்டும். பார்க்கும் திசைதொறும் உன் அருட்பேரழகு தோன்ற வேண்டும். என் உருவவெளித் தோற்றத்தில் எப்போதும் நீ இருக்கவேண்டும். என் தலை எங்கெங்கே சாய்கிறதோ, அங்கே வந்து உன் அருட் திருவடிகள் அதை அலங் கரிக்க வேண்டும். ஆமாம் தாயே! இந்த முடை நாய்த்தலைக்கு உன் திருவடியே திருமுடி! முடியாய் உன் திருவடி என் தலையைத் தொடும்போது எனக்கு ஏற்படும் ஆனந்தம் மன அமைதியைத் தரும்! மனத்துக்குச் சாந்தியை அளிக்கும் மௌனானந்தமே அது! அந்த அருட்பரமானந்தத்தை நான் அனுபவிக்கும் போது, என் உள்ளத்தே சுடர் விளக்காய் நீ, ஒளிர்வாய் தாயே! கேட்ட தெல்லாம் கொடுக்கும் திருக் கிருஷ்ணன் தங்கச்சி அல்லவா நீ? தாமரையில் வீற்றிருக்கும் நீ உள்ளமே தாமரையானவள் அல்லவா? எனக்கு மணியானவள் நீ! யோக வழியில் உன்னை வழிபடும் போது யோக ஒளி மணியாய்த் திகழும் மயிலாபுரியின் வளரீசன் வாழ்வே! மைந்தனுன நான் உன்னை நோக்கிக் கதறுகிறேன். உன்னையே நோக்கி அன்னையே என்று நான் ஓடி வரும்போது என்னை நீ காக்க வேண்டும் தாயே!

55. "எந்த நாளும் உனதருட்பே
ரழகை அறிவில் ஒருபிடியா
யிருத்தி மகிழ்ந்து கனககிரி
ஏறி முதல்வன் ஈசனது
சிந்தை மிகுந்து புகழ்ந்துவரச்
செல்வ முடனே கல்விவரச்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

செக சாலங்கள் தமைக்கடந்து
Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
சிற்சொரூப மனம் புணர்ந்து
வந்துன் னுத முடியருளும்
மொழு னந்தச் சுடர்விளக்கே
மாலா கியகிருஷ் ணன்துணைவி
வனச மலரின் நிலையாளே
மைந்த னிடம்வந் தெனைக்காப்பாய்
மணியே யோக ஒளிமணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

கதம்பவனக்குயில்

அபயாம்பிகை பட்டர் அம்பிகையைக் கொஞ்சும் கிளியே என்றும், அருள் பழுத்த கொம்பே என்றும் துதிக்கிறார் இந்தப் பாடலில், விச்வாவசு என்ற கந்தர்வனின் மகள் வித்யாவதி அன்னை பராசக்தியை நோக்கித் தவம் இருந்தாள். அன்னை பிரத்யட்சமாகி ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டாள். அதற்கு வித்யாவதி ''நீ எனக்கு மகளாகப் பிறக்க வேண்டும். சிவபெருமான் மருமகனாக வரவேண்டும் என்று வேண்டினாள். அருள் பழுத்த அன்னை பராசக்தி கருணைப் புன்முறுவலோடு ''நீ மலையத்துவச பாண்டியன் மனைவியாக காஞ்சனமாலை என்ற பெயரில் பாண்டிய நாட்டில் தோன்றும் போது உனக்கு நான் மகளாவேன்'' என்று அருள் பாலித்தாள். மலையத்துவச பாண்டியன் செய்த புத்ரகாமேஷ்டி யாகத்தில் வேள்விக் குண்டத்தில் முலை மூன்றுடைய மூன்று வயது பெண்ணாகத் தோன்றினாள். ஆண்மகவு பெற விரும்பி செய்த வேள்வியில் மலையத்துவசன் பெற்றதோ பெண், அதுவும் மூன்று முலைக்குறி உடைய பெண். இதற்காக அவன் வருந்தியபோது வானத்தில் ஒரு அசரீரி தோன்றியது. ''மன்னவ நின் திருமகட்கு மைந்தர் போல் சடங்கனைத்தும் வழாது, வேதம் சொன்ன முறை செய்து, பெயர் தடாதகை என்று இட்டு முடி சூட்டுவாய்!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இப்பொன்னனையாள் தனக்கு இறைவன் வரும்போது ஓர் மூலை மறையும்! புந்தி மாழ்கேல்! என்ன அரனருளால் ஒரு திருவாக்கு விசும்பிடை நின்று எழுந்தது அன்றே! (திருவிளையாடற் புராணம்)

அப்படி கதம்ப வனநகராகிய மதுரையில் மீனாட்சியாக வளர்ந்தவள் நீ! இமய பருவதராஜன் தவம் இருந்தபோது அவனுக்கு இரங்கி பார்வதியாய் தோன்றியவள் நீ! வானத்து நிலவாய், வையத்துப் பேரொளியாய், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் முதலிய பஞ்சகிருத்யங்களுக்கும் அதிகாரி நீ! அதிமோகனமானவள் நீ! மகா மாயையும் நீ! அமுதத்தை வசனமாக அள்ளிக் கொண்டவள் நீ! வேதங்களுக்கும் அடங்காத விபுதை நீ! திருமகளும் கலைமகளும், பிரமனும் திருமாலும், தேவர்களும் முனிவர்களும், வேதம் பயிலும் அந்தணர்களும் உன் திருவடியைப் பற்ற துடிக்கிறார்கள். அத்தகைய அழகு மயிலும் மயிலாபுரி ஈசனின் வாழ்வாய் அமைந்தவளுமான நீ எனக்குக் காட்சி தந்தது என் மேல்கொண்ட கருணையால் தானே!

56. "கொஞ்சுங் கிளியே அருள்பழுத்த
கொம்பே கதம்ப வனத்தில்வளர்
குயிலே இமயா-சலத்தில்வருங்
கொடிவான் மதியே பேரொளியே
அஞ்சு தொழிலுக் கதிகாரி
அதிமோ கனமே மாமாயை
அமுத வசனி நான்மறைக்கும்
அடங்கா தகண்ட பெருவெளியே
விஞ்சு புகழ்சேர் திருமகளும்
வேதன் மனையா. ளொடுநிதமும்
மிகுந்து பணியும் அரிஅயனும்
விபுதர் முனிவர் மறையோர்கள்
வஞ்சி யேஉன் பதங்காண
வகையும் அறியார் வளமயிலே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கன்ம விவகாரமாகிய முந்தய ஜன்மங்களின் வினைப் பயனுல் ஏற்பட்ட வாழ்க்கை இது. நிலையில்லாத இந்த மனித வாழ்க்கையில் ''நீ தாழ்ந்தவன், நான் உயர்ந்தவன்'' என்றும் ''நீ இல்லாதவன் நான் உள்ளவன்'' என்றும் உயர்வு தாழ்வு பேசி, பெருமைகளுக்கும் சிறுமைகளுக்கும் ஆட்பட்டு பிறந்தும் இறந்தும் நரக வேதனைப் படும் அவல வாழ்வு இனிபோதும் தாயே! ''மாதா உடல் சலித்தாள், வல்வினையேன் கால் சலித்தேன், வேதாவும் கை சலித்து விட்டானே'' என்று பட்டினத்தடிகள் சொன்னதுபோல் பிறவாமை வேண்டுகிருர் அபயாம்பிகை பட்டர் இந்தப் பாடலில், அதற்காக பிறவாமை அருள உன்னை மறவாமை எனக்கு நீ அருள வேண்டும், என்று பேசுகிருர். தாயே! பிறவிப்பிணியிலிருந்து என்னை விடுவிக்க, உன்னை மறவாமல் உன் திருவடிக்கமலங்களை விடாமல் பற்றிக் கொள்ள நீ அருள்புரிய வேண்டும் தாயே! அந்தத் திருவடிகள் எப்படிப்பட்டவை என்று நான் அறிவேன். அது வேதாந்த அருட் கமலம். வெட்ட வெளியில் வீற்றிருக்கும் ஏகாம்பரேசனுடன் இணைந்து நீ வீற்றிருக்கும் அழகுக் கோலத்தை எனக்குக் காட்ட வேண்டும். முந்தய பாடலில் கதம்பவனவாசியான அன்னை மீனுட்சியின் அழகு தரிசனத்தைக் காட்டினுர். இந்தப் பாடலில் காஞ்சி காமாட்சியின் கனிவான தரிசனம் காட்டுகிருர். ஜன்ம ஜன்மாந்திரங்களுக்கும் தொடர்ந்து தாயாக வரும் மகாமாதாவே! உன் திருவடிகளைப் பற்றுபவர்களுக்கு மெய்ஞ்ஞான அமுதத்தை வழங்கும் வேதக்கொழுந்தானவளே! மயிலாபுரித் தாயே! உன் பாதார விந்தங்களில் அடியேனைச் சேர்த்துக் கொள்வாயாக! பவப்பிணியிலிருந்து அடியேனைக் காப்பாயாக!

57. ''ஏதோ கன்ம விவகாரம்
இதனுல் உயர்த்தி தாழ்த்திஎன
இறந்தும் பிறந்தும் நரகமதில்
இருந்து மனது சஞ்சலிக்கப்
பேதா பேதம் மிகப்பேசிப்
பெருமை சிறுமை இதனுலே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

பெற்ற சுகந்தான் இனிப்போதும்

Vaidika Pandit Sri V Haragopan Collection, Sholinganallur, Chennai

பிரியா துன்றன் இருசரண
வேதா ந்தவருட் கமலமதை
விருதாப் பிடித்து கருதிநிற்க
வெட்ட வெளியோன் ஏகனுடன்
விளங்கக் கருணை நிலைஅருள்வாய்
மாதா வேமெய்ஞ் ஞானமுதே
மறையின் முடியில் வளர்பவளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

சோற்றுத்துருத்தி

எத்தகைய கேவலமான உடல் இது? சோற்றை அடைக்கும் பையும், அதனுள் எத்தனையோ கிருமிகளும் கொண்ட இந்தப் பாழும் உடலை மகிழ்வோடு நான் என்று கூறிக்கொள்ளும் பேதமை. பிரமன் என்ற குயவனால் பிடித்துப் போடப்பட்ட எப்போதும் உடையலாம் எனற நிலையிலுள்ள மண்பாண்டம் இது. இந்தப் பழைய மண்பாண்டத்தை எமன் என்று உடைப்பானோ தெரியாது. இந்தப் பாண்டத்தை எப்போது அந்த எருமை வாகனன் உடைப்பான் என்று பனங்காட்டிலுள்ள பிணம் கூட்டும் நரி நாய்களும், விருந்தாய்க் கொள்ளத் துடிக்கும் பருந்துகளும் அருந்தி மகிழக் காத்துக் கிடக்கின்றன. இந்த ஊற்றைப் பிணத்தை எனது எனது என்று போற்றி சுகம் காணும் பேதமை போதும் தாயே! இந்த நரகத்திலிருந்து என்னை நீதான் காப்பாற்ற வேண்டும். வெள்ளைத்தாமரையில் வீற்றிருக்கும் உனது திருவடிகள் என் வெள்ளை உள்ளத் தாமரையில் வீற்றிருக்க கருணைபுரிவாய் தாயே! மாற்றொன்றில்லா இமயப் பொறுப்பின் முடிவில் வீற்றிருப்பவளே! மயிலாபுரி அரசியே! அபயாம்பிகைத் தாயே! அருள்புரிவாயே!

58. ''சோற்றுத் துருத்தி வெகுபுழுக்கள்
சுகமா யென்றன் அகம்எனவே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
சொல்லி வளரும் கருங்காடு
சூளைக் குயவன் உத்தியினுல்
பார்த்துப் பிடித்த பழம்பாண்டம்
பகைத்தே ஏமன் ருனுடைக்கும்
பனங்காட் டிலுறை நரிநாய்கள்
பருந்தும் விருந்தாய் அருந்திமகிழ்
ஊற்றை பிணத்தை எனதெனவே
உகந்து நின்ற சுகம்போதும்
உனது பதங்கள் என்மனத்துள்
உறவே கருணை மிகஅளிப்பாய்
மாற்ருேன் நில்லா அருட்கனக
வரையின் முடிமேல் வளர்பவளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

நீ வரவேண்டும்! நான் அழவேண்டும்

இந்தப் பிறவி முடியுமுன்னே, பவப்பிணிப் போக்கும் நீ அடியேன் சிந்தையில் வந்து அருள வேண்டும். அல்லும் பகலும் அனவிரதமும் உனது மலரடிச் செம்பல்லவத்தைத் தொழுது, உன் திருநாமங்களைச் சொல்லி உன் கருணைக்காக அழவேண்டும். பிறவிக்குக் காரணமான இருவினைகளைப் போக்கி என்னைப் பரம் பொருளில் சேர்க்க வேண்டும். சரியை, கிரியை, யோகம் முதலிய அனுஷ்டானங்களைக் கடந்து அமலசுகத்தை நீ அருள வேண்டும். இவ்வுலகச் சுகங்கள் அழுக்குகள் நிறைந்த மலங்களைக் கொண்ட சுகம். உன் கருணைக்குப் பாத்திரமான பிறகு கிடைக்கும் சுகம் மலங்களற்ற அமலசுகம்.

என் வினைப்பயனைக் காரணங் காட்டி இவ்வுலகு நோக்கி என்னைத் தொடுத்தவள் நீ! தொடுத்த நீயே என்னை எடுத்து துவாத சாந்தப் பெரு வெளியில் உன் திருவடியில் சேர்த்து பரம சுகத்தை, சாந்தியை அருள்வாய் தாயே! துவாத சாந்த நிலையாளே, பெருமை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

களுக்குச் சொந்தக்காரியே (மருத்தகனத்தி). நிர்மலமானவளே! கருணைக்கடலே! அபயாம்பிகைத் தாயே! அருள்புரிவாயே!

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

59. ''எடுத்த செனனம் இறக்குமுன்னே
என்சிந் தையுள்நீ வரவேண்டும்
இரவும் பகலும் உனதடியை
ஏத்தும் வரம்நீ தரல்வேண்டும்
அடுத்துக் கலக்கும் இருவினைகள்
அறவே சிவத்தில் உறவேண்டும்
அனுட்டா ஞதி தன்னையிழந்(து)
அமல சுகத்தைப் பெறவேண்டும்
தொடுத்த படியே எனைச்சார்ந்து
தூக்கி எடுத்து நடுவணையில்
சுகமா யிருப்ப வரம்அருள்வாய்
துவாத சாந்த நிலையாளே
மடுத்த கனத்தி நின்மயத்தி
மடலே கருணைக் கடலாளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

ஓங்கார சொரூபி

மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாஹதம், ஆக்ஞை என்ற உடலிலுள்ள ஆறு நிலைகளிலும் அம்பிகை வீற்றிருக்கிருள். உந்திக் கமலமாகிற மூலத்தாமரையில் வீற்றிருப் பவளே என்கிருர் அபயாம்பிகை பட்டர். அவள் ஓங்கார சொரூபி மூலாதாரத்திலுள்ள நாலிதழ்த்தாமரைக் கர்ணிகையில் உள்ள நாற்கோண சக்கரத்தில் குண்டலினி சக்தியாக அம்பிகை இருக் கிருள். எனவே அவளை ''சதுர் கோணத்தில் ஒளிரும் இதய நிலையாளே'' என்று துதிக்கிருர். உமையே! கமலாசனத்தில் வீற்றிருக்கும் மணியானவளே! உன்னையே சிந்திப்பவர்களுக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
இருதயமாகிற அநாகத சக்கரத்தில் உள்ள அறுகோணத்தில் ஈசுவரனுக்கு மனைவியாக ஹாகினி என்னும் சக்தியாக இருப்பவளே! ஆடிவரும் உன் பாதத்தைத் தேடி வரும் எனக்குச் சூடி அருள்வாய்! எல்லா யாகங்களுக்கும் தலைவனான திருக்கிருஷ்ணசாமி சகோதரி பார்வதியே! தேவர்கள் தொழுதவுடன் அவர்கள் உள்ளம் மகிழ காட்சி அருள எழுபவளே! மயிலாபுரியின் வளரீசன் வாழ்வாம் மலர்க்கொடியே!

60. "உந்திக்கமலத் துறைபவளே
ஓங்கா ரத்தி சதுர்க்கோணத்(து)
ஒளிரும் இதய நிலையாளே
உமையே கமலா சனமணியே
சிந்தித் திடவே அறுகோணஞ்
செறிந்த மனையின் நிலையாளே
செயமோ கினியே டாகினியே
சிந்தா மணியே யோகினியே
சந்தித் திடவே உன்னிருதாள்
தனையே அருள்வாய் தற்பரையே
சகல மகவான் திருக்கிருஷ்ண
சாமி துணைவி பார்வதியே
வந்தித் திடவே தேவரெல்லாம்
மகிழத் தோற்றும் மலர்க்கொடியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

எதையும் தாங்கும் இதயம்

அன்னை அபயாம்பிகையைத் தவிர வேறு பற்று இல்லாத அபயாம்பிகை பட்டரை மயிலாடுதுறையில் யாரும் மதிப்பதில்லை. அவரிடம் முகம் கொடுத்து யாரும் பேசுவதில்லை. அவரைப் பார்த்துக் கேலி பேசுவோர், கிண்டல் செய்வோர்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
பலர் உண்டு. சில சமயங்களில் அவர் அபிராமியின் சன்னதியில் நின்று கொண்டு தன்னே மறந்து ஞானப் பயித்திய மாக அம்பிகையோடு பேசியும் சிரித்தும் அழுதும் மகிழ்வார். கோவிலுக்கு வருகிற சிலர் சன்னிதியை மறைத்துக் கொண்டு நிற்கும் இவர் மேல் கோபத்தோடு எரிந்து விழுவார்கள். இவரை ஏசுவார்கள். அதை நினேத்து இந்தப் பாடலில் அழுகிருர் பட்டர். தாயே என்னிடம் ஒருவர் முகம் பார்த்து பேசவில்லேயே என்று நான் வருத்தப்படவில்லே. மெய்யாக நான் உன்னேத் தவிர வேறு யாருடனும் பேச விரும்பவில்லே. நீ என்னேடு பேசுவதும் நான் உன்னேடு பேசுவதும் கண்டு சில பொருமை கொண்ட சென்மங் கள் உன் சன்னிதியில் நான் நின்று கொண்டிருக்கும் போது என் மேல் எரிந்து விழுகிருர்கள். அரக்கர்கள் போல் என்னேப் பார்த்து கூச்சலிடுகிருர்கள். அவர்கள் கோபத்தோடு என் மேல் எரிந்து விழுந்து என்னே ஏசும் போது என் மூளேயே மழுங்கிப் போகிறது. (முனேயும் மழுங்கி) அவர்களின் கோப மொழிகளாலும், ஏச்சாலும் பேச்சாலும், என்ன இருந்தாலும் என் உள்ளம் வேதனேயில் உருகிப் போகிறது. இந்த என் அவல நிலேயை உன்னேத் தவிர நான் வேறு யாரிடம் சொல்ல முடியும்? எனக்கு வேறு யார் இருக்கிருர்கள்? எல்லாம் என் வினேப் பயன்தானே! இந்த உலகத்தில் நல்லவர்களுக்கு தீங்கிழைக்கும் அற்பர்களுக்குத்தானே வாழ்வும் வளமும், சுகமும், போகமும் அமைகின்றன. அற்பர்கள் யாரைப் பார்த்துச் சிரிக்கிருர்களோ "அவனே ஞானி" என்று நீ சொல்லுவது எனக்குப புரிகிறத். ஆனுலும் அந்த இழிதகையாளர்கள் என்னேப் பார்த்து (பருவம் பொருந்தாமல்) பரிகாசம் செய்வதையும் இழி மொழிகள் பேசுவதையும் என்னுல் பொறுத்துக் கொள்ள முடியாமல் தவிக்கிறேன் தாயே! அருள்கூர்ந்து நீ எனது மனத்தில் எப்போதும் கொலுவீற்றிருந்தால், எதைப் பற்றியும் நான் கவலேப் படாத நிலேயை, எதையும் தாங்கும் இதயத்தை நீ அருளுவாய்! உனது குழந்தையான எனக்குக் கொஞ்சம் கருணே செய்யக் கூடாதா? அழகின் திருவுருவே! அஞ்சல் நாயகியே!

61. "முகம்பார்த் தொருவர் பேசாமல்
முனிவோர் முன்னே அரக்கர்போல்
முடியப் பழித்த பழிப்பாலே
முனேயும் மழுங்கி என்றனுயிர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அகந்தான் உருகும் இனிஅதைத்தான்
ஆரோ டுரைப்பன் அருட்கடலே
அதிக வினையேன் அற்பருக்கே
அனைத்தும் வசிய மாகுமையோ
சகந்தான் நகைத்தால் ஞானிஎன்பர்
தமினியேன் பருவம் பொருந்தாமல்
தாயே உனையான் வேண்டும்வரம்
தயைசெய் திருத்தி எனதுளத்தில்
மகனும் எனவே அருள்புரிவாய்
வடிவே ஞான மறைமுடிவே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

நல்ல சமயம் இது! நழுவ விடுவேனே!

அபயாம்பிகை பட்டர் அம்பிகையை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, தொழுது தொழுது, அழுது அழுது, தனக்கு அன்னையின் கருணைக் கடாட்சம் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டவுடன், இந்த அரிய வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்றும், எப்படியும் அவள் கருணைக்குப் பாத்திரமாகிவிட வேண்டும் என்றும் இந்தப் பாடலில் துடிக்கிறார். தாயே! உனக்கு என்னைப் போல எத்தனையோ குழந்தைகள், உன் அருட்பாலுக்கு அழுது கொண்டிருக்கின்றன. எப்படியோ என் மேல் கருணை கொண்டு என்னை ஆட்கொள்ள மனம் கனிந்து விட்டாய். உன் திருவடியில் என்னை அர்ப்பணித்துக் கொள்ள இதுவே தருணம். இந்த நல்ல சமயத்தை (அபயாம்பிகை சமயம் என்றும் சொல்லலாம்) நான் நழுவ விடுவேனோ? எல்லா உயிர்களையும் ஆள்பவளே (அரசே) என் உள்ளத்துள் உயிராய் இருப்பவளே! அமுதம் போன்றவளே! கருணை பொழியும் முகத்தாளே! பராகாசத்தை இருப்பிடமாகக் கொண்டவளே! மலமில்லா சுகத்தை அருளுபவளே! எல்லாவற்றிற்கும் முடிவானவளே! உபநிடத்து உச்சியில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
வீற்றிருப்பவளே! உணர்வைத் தரும் சக்தியாய், உணர்வேயாய்த் திகழ்பவளே! எடுத்து இயம்ப முடியாத அதிசயப் பொருளே! உமையே! தேவர்களுக்கெல்லாம் அரசனான சிவப்பரம்பொருளின் தேவியே! தண்டையும் சிலம்பும் கொஞ்சும் தாள்களை உடையவளே! பாம்புகளை அணிகலன்களாகத் தோளில் அணிந்தவளே! சிவபுரத்து சீமாட்டியே! உயிர்களுக்கெல்லாம் எல்லா ஆனந்தங்களையும் அருளும் ஆனந்த பரம்பரையைச் சேர்ந்தவளே! இமய பர்வதராஜன் தவத்துக்குப் பழுத்த தவமே! எனக்கும் அருள் புரிவாயே!

62. "அரசே என்றன் அகத்துயிரே
அமுதே கருணை மதிநுதலே
அகண்டா காரப் பெருவெளியே
அமல சுகமே அந்தரமே
உரைசேர் மறையின் முடிமுதலே
உணர்வே உணர்வின் ஒளிச்சுடரே
ஓத வறியா அதிசயமே
உமையே இமையோர்க் கரசான
தரைசேர் தண்டை சிலம்பணியுந்
தாளி பணிகள் அணிதோளி
தருணம் இதுவே சிவபுரத்தி
சர்வா னந்த பரம்பரத்தி
வரிசை இமயா சலத்திலுறை
மயிலே எனக்குன் அருள்புரிவாய்!
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

சரண மயிலே!

அன்னையின் பல்வேறு தோற்ற நிலையையும், அவள் ஐயன் கொடுத்த இருநாழி நெல்கொண்டு, அண்டம் எல்லாம் உய்ய அறம் செய்து தர்ம சம்வர்த்தினியாய் திகழ்ந்தது பற்றியும் இந்தப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
பாடலில் துதிக்கிறார், அபயாம்பிகை பட்டர். ஒன்றானவளே! ஒன்றான பராகாயத்தின் முடிவாகவும் முதலாகவும் உள்ளவளே! எல்லையற்றவளே! (அகண்டிதமே) உலக ஒழுக்கத்தைக் கடந்து நின்ற ஞான நிலையிலிருக்கின்ற உமையே!

"உலகினை இறந்து நின்றது அரனுரு என்பதோரார்". என்பது சிவஞான சித்தியார். மலமில்லாத சுகப்பொருளே! சிவப் பரம்பொருள் கொடுத்த இரண்டுபடி நெல் கொண்டு 32 தர்மங் களைச் செய்து இரவும் பகலும் அனைத்துயிர்க்கும் உயிர் வளர்க்குமா போலே உலகில் அறங்களை வளர்த்த நாயகியே! மூலாதார முதல் புருவ நடு வரையில் எல்லா நிலையிலும் வீற்றிருப்பவளே! பிறப்பு இறப்பு அற்ற பரிபூரணமே! பொது வெளியில் நடனம் புரியும் சரண மயிலே! ஆம்! தன்னைச் சரணம் அடைபவர்களுக்கு அபய மளிக்கும் மயில் அஞ்சல்நாயகி அல்லவா? குயிலே! சிவ பதியே! மயிலா புரியில் வாழும் ஈசனின் பெருவாழ்வே! அபயாம்பிகைத் தாயே!

63. "ஒன்றே ககன முடிமுதலே
ஒளியே வெளியே அகண்டிதமே
உலகா சாரங் கடந்துநின்ற
உமையே அமல சுகப்பொருளே
என்றே உலகம் அனைத்துயிர்க்கும்
இரவும் பகலும் எங்கெங்கும்
இருநா ழிகைநெற் கொண்டுலகை
இசைய வளர்த்த மலர்க்கொடியே
தன்றே மூலா தாரமுதல்
தாவும் புருவ நடுவரையில்
தழைத்த பரமே நிராமயமே
சாகா வேகாப் பூரணமே
மன்றே நடனம் இடும்சரண
மயிலே குயிலே சிவபதியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அன்னையே உன் பெருமையைப் பேசும் வாமாக மங்களாகிய தந்திர சாத்திரங்களை இழையாகக் கொண்டு, அதனைக் கயிருக முறுக்கி, சபலங்களுக்கு இரையாகி, அலைபாயும் இந்தப் பாழும் மனத்தை நன்ருகக்கட்டி உன் உபய பாதங்களோடு பிணைக்க வேண்டும். பேசுதல், கேட்டல், உணவு உட்கொள்ளுதல், ஜீரணம் செய்தல் முதலிய பல தொழில்கள் இந்த உடம்புக்குள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தத் தொழில்களை 96 கருவிகள் செய்கின்றன. இதைத் தொண்ணூத்தாறு தத்துவங்கள் என்று பேசுவார்கள். ''பஞ்சா பரணி நவபூர்ணி'' என்ற 6வது பாடலில் ''என் சாண் உடம்பில் தொண்ணூற்ருறிசைந்த தத்வாதிக முகமே'' என்று அம்பிகையைப் பேசுவார் அபயாம்பிகை பட்டர். தொண்ணூற்ருறு கருவிமயல் தொடுத்த சடத்தை இகழ்ந்து உனது துவாத சாந்த வெளிதனிலே பாய்ந்து உனது திருவடிகளைப் பற்றிக்கொண்டு பரமானந்த சச்சிதானந்த நிலையில் தோய்ந்துவிட வேண்டும். அது ஆனந்த மயமான கனவுநிலை. சிவபுரத்தில் அப்பனுகிய சிவப்பரம்பொருள் உன்னைச்சார்ந்து அத்தகைய நிலையிலேயே ஆழ்ந்து விடுவான். ஐயனை நீயும் அன்போடும் கருணையோடும் ஏற்றுக்கொள்வாய். அத்தகைய புகழரசியான உன்னை, தேவர்கள் உன்னுடைய கருணைத் தேனுக்கு ஏங்கித் தொழுகிருர்கள். உன் கருணைக்கு ஏங்கி சிவ பெருமானும் தேவர்களும் முனிவர்களும் உன்னைத் துதிக்கிருர்கள். பரம கருணைப் பேரரசியான நீ, என்னை உய்விக்க வேண்டும். என்பதற்காக இந்த ஏழை எளியவனையும் ஒரு பொருட்டாக மதித்து ஆட்கொள்ள இந்த மயிலாடுதுறைக்கு வந்திருக்கிருய். நீ எப் போதும் தனியாக வரமாட்டாய். துணையோடுதானே வருவாய்! எனவே மயிலாபுரியில் வளரீசன் வாழ்வாய் மயூரநாதனின் மனையாட்டியாய் அபயாம்பிகைத் தாயாய் வந்து என்னை ஆட் கொண்டாய்!

64. ''ஆய்ந்த உன்றன் அருள்நூலை
அடுத்தே இழையைத் தொடுத்தெடுத்து
அதனைக் கயிரு கவேமுறுக்கி
அலையும் மனத்தை இறுக்கியுன்றன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri.V Hariharan Collection, Sholinganallur, Chennai

தோய்ந்த சிவக்கால் தனைப்பூட்டித்
தொண்ணூற் ருரு கருவிமயல்
தொடுத்த சடத்தை இகழ்ந்துனது
துவாதசாந்த வெளிதனிலே
பாய்ந்த படியே குடியாகப்
பலசொப் பனமும் கண்டுவிடப்
பதத்தைக் கடந்தே இதத்துடனே
பரம ஞர்ந்த சிவபுரத்தில்
வாய்ந்த வாஞ்சை யுடன்புகழும்
வானே வானேர் தொழுந்தேனே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

ஆடி வரும் தேர்

கோயிலில் பிரம்மோற்சவம் நடக்கும் போது முதலில் கொடியேற்றுவார்கள். தொடர்ந்து நாளொரு திருவிழாவாகவும் பொழுதொரு அலங்காரமாகவும், தெய்வீக மூர்த்தங்களுக்குச் செய்து, உத்சவ விக்கிரகங்களை வீதியில் வெவ்வேறு வாகனங் களில் உலாவரச் செய்து தேர் திருவிழா நடத்தி, பரிபூரணமாக விழா முடிந்தபின் கடைசியில் ஏற்றிய கொடியை இறக்குவார்கள்.

அபயாம்பிகை பட்டர் இந்தப் பாடலில், இந்த உடலையே ஒரு கோயிலாக்கி, அதில் கொடியேற்றம் முதல், கொடி இறக்கும் வரை திருவிழாக் காட்சியாக அமைத்துப் பாடியிருக்கிறார்:

''உள்ளம் பெரும் கோயில்
ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுர்க்கு வாய்க்
கோபுரவாசல் தெள்ளத்
தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்;
கள்ள புலன் ஐந்தும்
காளா மணிவிளக்கே.''

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இப்படி இந்த உடம்பை ஆலயமாக அமைத்துக் காட்டினார் திருமூலர்.

அபயாம்பிகை பட்டரும் அந்த உடம்பாகிற ஆலயத்தில் நடைபெறும் திருவிழாவைச் சொல்லுகிறார். அறிவு, உடலில் ஏற்றப் படும் கொடி. சித்தம் கேடகம். அதாவது ஊர்தி அல்லது வாகனம். மனம் பலி. சுழுமுனை நடு வீதி. சகஸ்ராரம் தேர்; வியோம நிலை உச்சி, அதாவது தேர்நிலை.

65. "அருளுக் கறிவா யிருந்ததெய்வம்
அமர்ந்த திருநாட் கொடியேறி
அலங்கா ரமுமாச் சித்தமெனும்
அமைகே டகத்தில் எழுந்தருளி
மருளும் மனதைப் பலிகொடுத்து
வரிசை யுடனே நடுவீதி
வரையிற் பலவாம் அதிசயங்கள்
வகைதான் உரைக்க முடியாது
சுருளப் பிரியா ரதம்ஏறிச்
சோதி வதன ஒளிதாண்டிச்
சுத்த வியோம நிலையதனில்
சுகமாய் நிறுத்திக் கொடியிறக்கி
மருளற் றிருக்க அருள்புரிவாய்
வாலாம் பிகையே காரணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

பேசாது ஒடுங்கும் பெரு நிலை

இந்தப் பாடலும் யோக வழியில் வழிபடும் முறையைச் சொல்லும் பாடலாகும். புருவ மத்தியாகிற சுழுமுனையின் உச்சியில் மனதை ஒருநிலைப்படுத்தி, மயிரை பதினாறு கூராக்கி, அதன் கூறும் நுழையாத மிகமிக நுண்ணிய இடமாகிய சுழுமுனையின் மத்தியில் அடங்கி, உற்று நோக்கினால் கங்கையும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
அதன் கரையும் அலைகளும் தோன்றும் என்கிறார். அது மட்டுமா? கனக மணியின் நாத ஒலி கேட்கும்; கருணைக் கடலின் தரிசனம் கிடைக்கும். ''சும்மா இரு சொல்லற என்றலுமே அம்மா பொரு ளொன்றும் அறிந்திலனே'' என்று அருணகிரிநாதர் சொன்னது போல பேசாது ஒடுங்கும் பெருநிலையாகிற அனுபூதி பிறக்கும். அத்தகைய உயர்ந்த நிலையை அடைந்த பிறகு, பெருஎ சிறுமை என்று பேசும் பேதமை ஒழியும். மெய்ஞ்ஞான உணர்வு இல்லாத பேய்க் கூட்டத்திலிருந்து கொண்டு, சபல சுகங்களுக்கு ஆளாகி அறிவு இழக்கும் நிலையிலிருந்து விடுதலை பெற்று, பேச்சு மூச்சு அற்ற மௌனானந்தப் பெரு நிலையை எனக்கு அருள்வாய் தாயே என்று வேண்டுகிறார் அபயாம்பிகை பட்டர்

66\. ''ஊசி நுனியில் மனதைஉன்னி
உயர்ந்த மனிதர் மயிர்பதினு(று)
ஒன்றும் நுழையா இடத்தில்தமர்
ஒடுங்கி அடங்கிக் குறிபார்க்கில்
காசிப் புனலும் நிறைந்தகங்கைக்
கரையும் கடந்து திரைகடந்து
கனக மணியின் ஒலிகடந்து
கருணைக் கடலுந் தான்கடந்து
பேசும் பருவம் உரைகடந்து
பெருமை சிறுமை தமைக்கடந்து
பேயி னுடனே பேயனுமாய்ப்
பிரமை கொண்டே அறிவழிந்து
வாசித் தடமே கடந்துநின்ற
மௌன னந்தம் எனக்கருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

(வாசித்தடம்-சுவாசம் செல்லும் பாதை)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சொல் அடங்க மனம் அடங்க!

தாயே! உன்னுடைய பெருங் கருணையால் சொல்லும் மனமும் அடங்கிய பின், உன் திருவடியில் மனம், அறிவு, செயல் அத்தனையும் ஒடுங்கிச் சேரும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைக்கும் போது, உலகிலுள்ள அரைவேக்காடுகள், அப்போதும் என்னைப் பார்த்து "இதோ கிறுக்கன், பயித்தியம் போகிறான் பார்" என்று என்னைப் பேசி ஏசுவார்கள். அதற்காக நான் கவலைப்படுவேனா என்ன?"

யார் அறிவு இல்லாத ஜென்மம்? யார் பயித்தியம்? என்று எனக்கும் உனக்கும் தான் தெரியும். தாமரைவதனத் தாயே! விடையொரு பாகனின் இடையொரு பாகம் பிடித்தவளே! மணம் பூத்த நறுமலர் செஞ்சடைப் பூத்தவளே! நதி கமழ்தாள் எமக்கொரு கதியாள் நீயே! அக இதழ் தாமரை அல்லிக்குளம் தாண்டி, சிறந்த உதயகால சூரியனைக் கடந்து, அநுபவஞானி களுக்கு விசுத்தியில் தோன்றும் கோடி சூரியப் பிரகாசத்தை அடியேனுக்கும் அருளி என்னையும் சிவபுரத்தில் சேர்ப்பாய். எல்லாம் வல்ல எனது அருமைத்தாயே! மௌனாதீத மோகனமே! மயிலா புரியின் வளரீசன் வாழ்வே! அருள் புரிவாயே!

67. "சொல்லும் மனமும் அடங்கியபின்
சென்றே ஊமைப் பருவமது
சேர வரவே அறிவழிந்து
செகத்தோர் நகைத்துப் பகைத்திடவும்
அல்லி முளரித் தடந்தாண்டி
அருண வுதய ரவிதாண்டி
அடங்கி யிருக்கச் சிவபுரத்தில்
அடியேன் குடியாய் நிலைக்கஅருள்
நல்ல கமல முகத்தாளே
நந்தி விடையோன் இடத்தாளே
நறுமா மலர்ச்செஞ் சடையாளே
நதிகள் பெருகும் பதத்தாளே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வல்ல பரையே பரம்பரையே
மௌனு தீத மோகனமே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

அடியார் மனம் பத்மாசனம்

சுழுமுனையைத் தாண்டி ககன உச்சியில் யோக வழியில் அமுத நதி பெருகிவரும் போது, அதனைப் புசித்து ஞானப் பசி தணிந்து, ஆன்மலயம் அடைந்து சிவானுக்ரகம் பெறுவேன். சிவத்தை அடையும் சிவானந்த நிலை கிடைத்தபின் தொல்லை வினைகள் பறந்தோடும். பவப்பிணியிலிருந்து ஜென்மம் விடுதலை பெறும். பின்பு அடைவது பரமானந்த சுகமே! செக்கச் சிவந்த ரத்னம் போன்ற நெற்றியை உடையவளே!

பாவம் அகன்ற அடியார்களின் மனக்கோயிலை இருப்பிடமாகக் கொண்டவளே! தாமரையில் வசிப்பவளே! வானத்து ஒளிரும் மணி யாய், மடந்தை பருவப்பேரழகியாய், மின்னைப் பழிக்கும் பொன் இடை கொண்டவளாய் திகழும் மயிலா புரித்தாயே! எனக்கு அருள்வாய் நீயே!

68. ''அடர்ந்த ககன முடியினிலோர்
அமுத நதிதான் பெருகிவர
அதனைப் புசித்து பசிதணித்து
அடியேன் மனந்தான் லயமாகத்
தொடர்ந்து சிவமே அநுக்ரகித்துத்
தொல்லை வினையைப் பறக்கடித்துத்
தொலையாச் செனன வழிதொலைத்துச்
சுகமா யிருக்க அருள் புரிவாய்
படர்ந்த அருண மணிநுதலே
பரம சுகவா னந்தமதில்
பாவம் அகன்ற மனத்துள்வளர்
பத்மாசனியே வான்மணியே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மடந்தைப் பருவம் உடையாளே
வளர்மின் கொடிபோல் இடையாளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

கணுவற்ற கரும்பு

தாயே! உன்னை அறிந்து கொள்வதற்கு ஜன்மாந்தரங்களில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். நீ அணுவுக்கு அணுவானவள். அரியும் அயனுமே அறிய முடியா அதிசயத்தாய்! நீ குணமற்று அகன்ற நிரஞ்சனம். குறியற்று இருந்த பரம்பரத்தி. ஆனால் ஒன்று எனக்கு நன்றாகப் புரிகிறது. உன்னுடைய கருணையைப் பெற்ற அடியார்களின் மிகுதியாக வரும் பிறவிப் பிணியைப் போக்கும் ககன மின்கொடி நீயே! கரும்பு தின்னத்தின்னச் சுவைக்கும். ஆனால் நடுவில் கணு என்ற ஒன்று வந்து தொலைக்கும். நீ கணு இல்லாத அருட் கரும்பு. என்னே உன் கருணை. உன் கருணைக் கரும்பைச் சுவைக்கும் அடியார்கள் தடையின்றி சுவைக்க வேண்டும் என்பது உன் ஆசையல்லவா! அடியார்கள் கண் களுக்கு மணியானவள் நீ! அந்த மணியில் ஒளிரும் ஒளிச் சுடரும் நீயே! கருணைக்கடல் நீ! நவமணி நீ! மணமுள்ள தாமரையில் வளரும் லெக்ஷிமியும் நீயே! இமய பர்வதராஜன் பெற்ற செல்வம் நீ! மயிலாபுரித் தாயும் நீயே!

69. ''அணுவுக் கணுவா யிருக்கும்உனை
அறிய வசமோ அருட்கடலே
யார்தான் அறிவார் அரிபிரமன்
அவரால் அறியா அதிசயத்தாய்
குணமற் றகன்ற நிரஞ்சனமே
குறியற் றிருந்த பரம்பரமே
கொள்ளைப் பிறவி தனையகற்றுங்
கொடியே ககன மின்கொடியே
கணுவற் றகண்ட அருட்கரும்பே
கண்ணின் மணியே மணியினுள்ளே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கலங்கா திருந்த ஒளிச்சுடரே
கருணைக் கடலே நவமணியே
மணமுற் ரெளிர்பூங் கமலமிசை
வளரும் திருவே மலேமகளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

தீ பரவட்டும்!

தாயே! நீ பஞ்சபூதங்களிலான சரீரம் உடையவள் போல் தோன்றினுலும் என்னைப் போல பாப புண்ணியங்களுக்கு உட்பட்ட உடம்பு அல்லவே அது. அது சத்துவ உடம்பு. ஆத்ம மாயையினுல் நீ அப்படி தோற்றமளிக்கிருய், மனித உடலிலுள்ள மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், விசுக்தி, அநாஹதம், ஆக்ஞை என்ற ஆறு நிலைகளேயும் கடந்த உடம்பு உன் அருள் உடம்பு. நீ பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள். கண்ணபிரானின் சகோதரி! அமுதம் போன்ற மொழி உடையவள்! அந்தரி! வஞ்சி! நவமோகனரூபி! தாமரை வதனத்தவள்! உன் கருணையை என் மீது பொழிய வேண்டும். நெஞ்சிலுள்ள ஆசைகள் ஒழிய வேண்டும். உன் நினைவே நினைவாக வேண்டும். உன் பார்வைப் பொறி பட்டு, என் பிறவிப்பிணியாகிற பஞ்சுப் பொதி எரியட்டும்! வேண்டாத வீண் நினைவுகளும் என் மனத்திலிருந்து அகலட்டும். நீ கருணையோடு வந்து என்னை ஆட்கொண்டால்தான் இத்தனையும் எனக்கு சித்திக்கும்.

70. ''நெஞ்சிற் சபலம் பொருந்தாது
நிலையை அறிவால் உணர்ந்தொன்றுய்
நின்னை நினைக்க பொன்னதனில்
நெறிமாற் றுயரும் வண்மைஎனப்
பஞ்சுப் பொறிபோற் பவம்அகலப்
பலவாம் நினைவு களும்அகலப்
பரிந்தென் பால்வந் தருள்புரிவாய்
பரமா னந்த சுகப்பொருளே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அஞ்சும் உடலா யிருப்பவளே
ஆறுங் கடந்த பரம்பரையே
அமுத வசன திருக்கிருஷ்ணன்
ஆதித் துணைவி அந்தரியே
வஞ்சி நவமோ கனரூபி
வதனும் புயத்தி அருள்மயத்தி
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

ஓவியக் கோலம்

அம்பிகையின் ரூபலாவண்யங்களை வர்ணிக்கிறார் அபயாம் பிகை சதக ஆசிரியர் இந்தப் பாடலில். அம்மை அவருக்கு பச்சை வண்ணத்தில் தோற்றமளிக்கிறாள். இன்னொரு சமயம் பசும் பொன் நிறமுடன் காட்சியளிக்கிறாள். ஒரு சமயத்தில் பளிங்கு நிறத்தில், வேறொரு சமயம் பவள நிறத்தில், மற்றுமொரு சமயத்தில் மேகத்தை ஒத்த நீல நிறத்திலும் தோற்றமளிக்கிறாள் தாய். அடியார்களின் அச்சங்களைப் போக்கி, அருள்பாலிக்கும் அன்னை இருளை ஒழிக்கப் புறப்படும் கோடி உதய சூரியனாகக் கோலம் காட்டுகிறாள். அத்தனையும் அவள் கருணை என்கிறார் ஆசிரியர். நினைப்பவருக்கு நினைத்தபடி தன் அழகுக் கோலத்தைக் காட்டும் அம்பிகை தனது அழகினால் சிவபெருமானையே மயக்கியவள் என்று சொல்லி ஆனந்தப்படுகிறார், பட்டர். தாயே! செக்கச் சிவந்த உனது உபய பாதங்களின் மேல் சிலம்பும், சிறு கிண்கிணியும், தண்டையும் அணிந்து கொண்டு! 'ஜல் ஜல்' என்ற அந்த ஒலி கேட்டு மயங்கும் சிவப் பரம்பொருளுடன் இணைந்து நீ அமர்ந்திருக்கும் (கொலு முகத்தை) திருவோலக் கத்தை, இந்தச் சிறியவன் காண அருள்புரிவாய்! அன்னையே என்னை ஆட்கொள்வதாக நீ ஏற்கனவே எனக்கு வரம் கொடுத் திருக்கிறாய். அந்த வரத்தை நினைவு படுத்தி உன்னைக் கேட்கிறேன். காவியங்களனைத்தும் வர்ணிக்கும் உன் ஓவியக்கோலத்தை எனது மனதில் பதியச் செய்ய வேண்டும் நீ!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

71. "பச்சை முழுப்பொன் னிறமுடனே
பளிங்கு பவள முடன்நீலம்
பருத்த மேக முடன்ஆறுய்ப்
பரவி யிருக்கும் பசுங்கிளியே
அச்ச மறவே அதன்மீதில்
அருண உதய ரவிகோடி
அகண்டா கார ரூபமதாய்
அமர்ந்த சிவமோ கனமாதே
செச்சை யதன்மேல் அணிச்சிலம்புஞ்
சிறுகிண் கிணித்தண்டை களொலிக்கச்
சிவஞே டிருக்குங் கொலுமுகத்தைச்
சிறியேன் காண அருள்புரிவாய்
வச்ச உனது பொருள்எனக்கு
வரத்தாற் கருத்தில் உரைத்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

பேசா மோனக்கொடி

எனது குழந்தைப் பருவத்தில் ஒரு மாது வடிவத்தில் வந்து என்னிடம் அருள் பாலித்த அணங்கே! (தான் பச்சைக் குழந்தையாய் இருந்த சமயம் பசியால் அழுதபோது அபயாம்பிகை தாய் வடிவில் வந்து தனக்குப் பால் ஊட்டியதைச் சொல்லுகிருர்) நவ பீடத்தை ஆசனமாகக் கொண்டவளே! உதயகாலக் கதிரவன் போல் ஒளி விடுபவளே! பராகாசப் பெருவெளியை இருப்பிட மாகக் கொண்ட ஆகாசத் தாமரை நிலேயாளே! அடியார்களின் விருப்பத்திற்கேற்ப அருள்புரியும் தவமணியே! உன்னே நோக்கித் தவம் இருப்பவர்களுக்குக் கிடைத்தற்கரிய விலே உயர்ந்த மாணிக்கமாகத் திகழும் நீ "தவ மணி" தானே! ஒப்பற்ற உன் கோலத்தை எனக்குக் காட்டி, உன் கருணேயை என்மேல் பொழிய வேண்டும். உனக்கு நாமங்கள் ஆயி.,ம்! நீ பேராயிரத்தி!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
ஆயிரமாயிரம் பெயர்களில் எந்தப் பெயரைச் சொல்லி உன்னை நான் அழைப்பேன். உன்னை நோக்கித் தவம் செய்பவர்களுக்கு அமைதியான இடத்தை அருளும் நீ தவ புரத்தி! உன் திருவடியைப் பற்றிக்கொண்டு, பயித்தியக்காரன்போல் நான் என்னென்னமோ பேசி உன் அருளுக்கு அழுதுகொண்டிருக்கிறேன். எல்லா வற்றையும் கேட்டுக் கொண்டு, புன்முறுவலுடன் ஏதும் பேசாமல் ''பேசா மோனக் கொடியாய்'' வீற்றிருக்கிறாய். நீ பேசினால் ஓரழகு! பேசாத உன் மோனநிலையோ பேரழகு! திருக்கல்யாண கோலத்தில் வீற்றிருக்கும் தாயே! பிறவிப் பிணிகளுக்காளாகி, சபலங்களுக்காட்பட்டு காம, மோக சேற்றில் உழல என்னை நீ விட மாட்டாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. என்னை ஆட் கொண்டு அருள்புரிவாய் தாயே! மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே!

72. ''அணங்கே நவபீ டாசனியே
அருளே உதய மதிச்சுடரே
ஆகா யத்தில் முளைத்தெழுந்தே
அலர்ந்த முளரி நிலையாளே
இணங்கும் அடியார் நினைத்தபடி
இசைந்த புவனத் தவமணியே
ஏகா கார மாகளனை
எடுத்துன் னருளைக் கொடுத்தாள்வாய்
பிணங்கு மலமா யாதிதனிற்
பிரிய விடவும் மாட்டாயே
பேரா யிரத்தி தவபுரத்தி
பேசா மோனக் கொடிமடலே
மணங்கொண் டிருக்குங் குழலாளே
வந்தென் றனையாட் கொண்டருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நாட்டியப் பேரொளி

சம்சாரம் என்னும் கடலில் உழலும் தோணியாய், இந்த உடல் அமைகிறது. முன் ஜன்மங்களின் வினைகளின் விளைவாக, இந்தப் பிறவியில் இந்த உடலின் உள் இருக்கும் இவ்வுயிர் இன்ன இன்ன விளைவுகளை நுகர வேண்டும் என்று பிரம்மன் அமைத்த பாதையில் இந்த உடலாகிற தோணி, மேற்காற்று கீழ்காற்று என்பது போன்ற சம்பவங்களால் அலைக்கழிக்கப்பட்டு, ஆடிக் கொண்டிருக்கிறது. இந்த சம்சாரக் கடலில்தான் எத்தனை புயல்கள், எத்தனை சூருவளிகள்! அத்தனைக்கும் ஆளாகி, புயல்களாலும், சூருவளிகளாலும் அலைக்கழிக்கப்பட்டு, கடல் அலைகளால் ஒதுக்கப்பட்ட துரும்பு போன்ற என்னை, உன் கருணைக்கண்களால் நீ பார்த்தருள வேண்டும்! மெய்யான பக்திகொண்டு தூய்மையான சொற்களால் உன் திருநாமங்களைச் சொல்லி, உன்னைப் பூசிப்பவர்களுக்கு கருணை புரியும் மயிலா புரித்தெய்வம் அல்லவா நீ! பிரளய காலத்தில் உலகங்களனைத்தும் நீரால் சூழப்படும் போது, சர்வ சங்காரியாய் திரு நடனம் புரியும் நாட்டியப் பேரொளி அல்லவா நீ! சந்திரனைத் திலகமாக நெற்றியில் அணிந்த ஒளி விளக்கே! உன் கடைக்கண் வீழ்ச்சி இந்தப் பேதைபால் பட வேண்டும் தாயே!

(மடு அம்பு ஆர் முடிவில் நடனமிடும் என்பதன் பொருள் எல்லாவற்றையும் அழிக்கின்ற நீர்நிறைந்த பிரளய காலத்தில் அன்னை சர்வசங்காரியாய் திருநடனமிடுகிறுள் என்பதாகும்.)

73. ‘‘குடும்பம் எனுமைக் கடல்தனிலே
குலவும் உடலா கியதோணி
குறித்தே பிரமன் வகுத்தவகை
கொள்ள மேற்கால் கீழ்க்காலாய்த்
தடம்புக் கியதோர் நாளையிலே
தடுத்து வழியோர் சுழலடிக்கத்
தாறு மாறு யொருமுடுக்கில்
தானே ஒதுங்கிக் கிடக்குமையோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திடம்புக் கிடவே நோக்காற்றுல்
சேர்ந்து வரவே கரைஒதுங்கச்
சற்றே தயவாய்ப் பார்த்தருள்வாய்ச்
செஞ்சொற் கிசைந்த திருமாதே
மடம்பார் முடிவில் நடனமிடும்
மதிசூடியபேரொளி விளக்கே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

வல்லமை தாராயோ

தமிழ்ச் சமுதாயம் பெருமைபடக் கூடிய காலமாகிற சங்க காலத்துக்கும் தெய்வத்தமிழ் வளர்த்த ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த வறுமைக்காட் பட்ட தமிழ்ப் புலவர்கள் குறுநில மன்னர்கள் போல் இருந்த நிலக் கிழார்களையும், ஜமீன்தார்களையும் புகழ்ந்துபாடி காலத்தைப் போக்கும் அவல நிலைக்கு ஆளானார்கள். அதன் விளைவாக விறலி விடு தூது, கூளப்பநாயக்கன் காதல் போன்ற கொச்சை இலக்கியங்கள் தமிழில் மலிந்தன. அவைகள் அனைத்தும் மனிதர்களைப் புகழும் நரஸ்துதிகள்.

தமிழ்ப் புலவர்களைப் பார்த்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் அழகாகச் சொன்னார். ''ஏ! தமிழ்ப் புலவர்களே ஏன் இப்படி மனிதர்களை இச்சையே பேசிப் புகழ்ந்து பாடுகிறீர்கள்? கேவலம் இந்த வயிற்றுச் சோற்றுக்குத் தானே! அந்த மனிதர்களை நீங்கள் புகழ்ந்து பாடினாலும், பாவம் உங்களுக்கு, அவர்கள் எங்கே தருகிறார்கள்? பிறகு வா! நாளைக்கு வா என்று தங்கள் வள்ளல் தனத்துக்கு தவணை பேசி அனுப்பிவிடுகிறார்கள். புலவர்களே! திருப்புகலூரில் உள்ள என் அப்பனைப் பாடுங்கள். அந்தப் பொல்லாசுப்பன்களை பாடியது போதும். உங்கள் வயிற்றுக்குச் சோறும், நீங்கள் இருக்க வீடும், வளமான வாழ்வும் அருளுவான் அந்த திருப்புகலூர் ஈசன். அது மட்டுமா! உங்களுக்கு முக்தி உலகும் அவன் அளிப்பான்'' என்றார் சுந்தரர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection: Sholinganallur, Chennai

"தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் சார்கினும் தொண்டர் தருகிலாப் பொய்மையாளரைப் பாடாதே, எந்தைப் புகலூர் பாடுமின்புலவீர்காள்! இம்மையே தரும் சோறும் கூறையும்; ஏத்தலாம் இடர்கெடலும் ஆம்; அம்மையே சிவலோகம் ஆள் வதற்கு யாதும் ஐயுறுவு இல்லையே!

சுந்தரர் சொன்னது போல் பேசுகிறார் அபயாம்பிகை பட்டரும் இந்தப் பாடலில். "தாயே! கல்லாத மூடர்கள் வீட்டு வாயிலில் நின்று, அவர்கள் பொல்லாத முகம் பார்த்து, இல்லாதது சொல்லி, இச்சகம் பேசி, என் பல்லெல்லாம் தெரியக் காட்டி, பருவரல் என்முகத்தில் கூட்டி, வறுமையால் என் கண்களில் நீர் சொறிய, நிற்கும் என் அவல நிலையிலிருந்து என்னை நீ மீட்க வேண்டும் தாயே!"

அபயாம்பிகை பட்டர் இந்த நிலையில் உள்ளவர் அல்ல. உலகில் பல மனித ஜன்மங்கள் அப்படி உள்ளன. அத்தகையவர் களில் தன்னையும் ஒருவராக முன்னிறுத்தித் தன்னைத் தாழ்த்திக் கொண்டு பேசுகிறார். "பணியுமாம் என்றும் பெருமை" என்று வள்ளுவர் சொன்னது இங்கு நினைவு கூறத்தக்கது. அபயாம் பிகை பட்டர் மேலும் சொல்லுகிறார். "உன்னைத்தவிர மற்றவர் களைப் புகழாத ஞானிகளின் பாதையை எனக்கு நீ காட்டியருள வேண்டும். ஞானிகளுக்கு ஆனந்தத்தை அருளும் ஞானானந்த சுடர்விளக்கே! நாட்டில் வறுமை போய் வளமை கொழிக்க சரமேகம் பொழிய வேண்டும். அது போல என் அஞ்ஞான வறுமைபோக, மெய்ஞ்ஞான வளமை கூட்ட, இன் தமிழால் உன் பெருமை பேசும் வல்லமை எனக்கு நீ அருள வேண்டும்! "அவன் அருளால் அவன் தாள் வணங்கி" என்று மணி வாசகர் சொன்னது போல உன் அருள் இருந்தால் உன்னை நினைப்பேன்! இனிய தமிழால் உன்னைப் போற்றி புகழ்ந்து பாட, நீ வல்லமை தந்தால் தானே என்னால் பாட முடியும். நல்ல தமிழால் நாயகி உன்னைப் பாட நற்கருணை புரிவாய் நாரணியே!

74. "கல்லாக் கயவர் முகம்பார்த்துக்
காத்துக் கிடந்து விழிபுனலாய்க்
கரையக் கரைய இதம்பேசிக்
கலங்கித் திரியும் கடையேனை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நல்லார் பதத்துக் கானஎழில்
நடத்தை அறிய எனதுமதி
நம்ப உறுதி அருள்புரிவாய்
ஞானு னந்தச் சுடர்விளக்கே
பொல்லா வறுமை தனைஅகற்றிப்
பொழுதை மறைத்துச் சரமேகம்
பொழியும் வகைபோற் கவிமாரி
பொழிய மொழி நல் வாக்களித்தே
வல்லா ளுக்கி எனைஆள்வாய்
வாலாம் பிகையே நாரணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

சிவசக்தி

பிரம்மாதி தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தனர். அவர்கள் விரும்பி வேண்டியது அமிர்தம். தோன்றியது கொடிய விஷம். ஆலகாலத்தைக் கண்டு அனைவரும் ஓடினார்கள். அஞ்சியவர் களுக்கு எஞ்ஞல் இல்லாத் தன் கோலம்காட்டி அபயம் அளித்தான் பரமேசன். அவன் சக்தியின் பெருமை சொல்லி விளக்க முடியுமோ? கஜமுகாசுரனை வதம் செய்து ஆனைத் தோல் உடையாகத் தரித்தவன். இனிய தன் புன்னகையால், பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளில் அரசு செய்த முப்பெரும் அசுரர்களையும் கண நேரத்தில் பொசுக்கியவன். இப்படி எல்லாம் சிவப்பரம்பொருளைப்பற்றிப் பேசுவார்கள். இப்படிப் பேசுபவர்கள் முழுக்கதையும் அறியாதவர்கள். சிவ பெருமானுக்கு அத்தகைய ஆற்றல் எப்படி வந்தது? அரனுக்கு சக்தியாய் இருந்து செயல்படுவது நீ அல்லவோ?

''அருளது சக்தியாகும் அரன்றனக்கு'' என்பது சிவஞான சித்தியார். சிவ பெருமான் செயல்கள் அனைத்துக்கும் சக்தியானவள் நீ என்று வேதங்கள் பேசுமே! கரும்புச் சிலையைக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
கரத்தில் கொண்டவளே! எப்படியும் நீ என்னை வந்து ஆட்கொண்டு அருளுவாய் என்று நம்பி வாழ்கிறேன்.

75. ''அரிபிரம் மாதி தேவரொடும்
ஆழி கடைய விடம்பிறக்க
அதனுற் பயந்தே அபயமிட
அபயங் காத்தோன் கரியுரித்தோன்
எரியப் புரத்தை நகைத்தெரித்தோன்
இறையோன் என்பார் அறியாதார்
இறையோன் உடலில் நீபாதி
இருந்தே செய்த விவகாரம்
தெரியா துலகம் அறியாதோ
சிவனுர்தமக்கோர் தொழில்ஏது
தேகம் நீஉன் தொழில்எனவே
செப்பு மறைகள் அநுதினமும்
வரிவில் தரித்த மலர்க்கொடியே
வந்தென் றனையா தரித்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

அதிசயமான வடிவுடையாள்

இறைவி இருக்கும் அற்புதத்தை யாராலும் அறிய முடியாது. அந்த சர்வேசுவரன் ஒருவனே அவள் அதிசயத்தை அறிய முடியும். அவன் ஒருவனைத்தவிர மண்ணுலகில் வாழும் மாந்தர்களோ விண்ணுலகில் உள்ள தேவர்களோ இறைவியின் அதிசயத்தை அறிய முடியாது. அவள் பெருமையை கடலும், பூவுலகும், நெருப்பும், காற்றும் அறியாது. தாயே! உன் அதிசயத்தை இவர்களெல்லாம் அறியாவிட்டால் என்ன? உன் திருவடியைத் தவிர வேறு பற்றுக்கோடு இல்லாத உன் மெய்யடியார்கள் நீ இருந்த அதிசயத்தை, உன் பெருமையை, உன் கருணையை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri. Hariharan Collection, Sholinganallur, Chennai

அறிவார்கள் அதனால்தான் அவர்கள் மீண்டும் வந்து இந்த மண்ணில் பிறப்பதில்லை. ஒலிக்கின்ற சிலம்புகளை அணிந்த உபய பாதங்களை உடையவளே! அமுத விழி பார்வையால் அடியார்கள்மேல் கருணை மழை பொழியும் செஞ்சரணியே! அடியேன் அறிவுக்கும் உணரக்கூடிய பேரறிவாய் அமைந்தவளே. வேதங்களின் முடிவாய் அமைந்த உப நிஷிதங்களில் நடனமிடும் மலர் போன்ற பாதங்களை உடையவளே. மயிலா புரியில் வளரீசன் வாழ்வே! அபயாம்பிகைத்தாயே!

76. "இறைவி இருந்த அதிசயத்தை
எவரால் அறிய வசமாகும்
ஈசன் தனக்குள் தானறிவார்
இருமா நிலத்தோர் அறியாரே
நிறையுங் கடலும் நிலம்பவனம்
நெருப்பு ககனம் அறியாதே
நின்னை அறிந்தார் பிறப்பிறப்பு
நிலத்தில் திரும்ப முளையாரே
அறையஞ் சிலம்பு மிகஒலிக்க
அமுதக் கிரணச் செஞ்சரணி
அடியேன் அறிவுக் கோரறிவாய்
அமைந்தே இருந்த பரம்பரையே
மறையின் முடியில் நடனமிடும்
வனச மலர்ப்பூம் பதத்தாளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

நீயே கதி

அன்னையே எப்போதும் உன் நினைவாகவே இருக்க வேண்டும் என்று என் கருத்து முழுதும் உன் திருவடியிலேயே செலுத்த முயலுகிறேன். வினைகளின் விளைவு அந்த பாழும் கருத்தை எங்கெங்கோ இழுத்துச் செல்லுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மீண்டும் மீண்டும் வெவ்வேறு திசைகளில் செல்லும் கருத்தை இழுத்து வந்து உன் திருவடியில் நிறுத்துகிறேன். இதற்குள் மனம் சல்லடைக்கண்ணாய் மயங்குகிறது. ஒரு கனவு தாயே! அந்தக் கனவில் உன் அடியார் ஒருவருக்குக் கருணை செய்து ஆட்கொண்டது போல் கண்டேன். நானும் உன் கருணைக்குத்தானே தாயே, ஏங்குகிறேன். உன் திருவடியை நோக்கி குருடன் இருட்டில் நடப்பது போல் நடந்து வருகிறேன். அன்னையே என் வினைகளால் நான் படும் துயரை நான் எப்படிச் சொல்லுவேன் யார் எனக்கு உதவப் போகிறார்கள்? உன்னைத் தவிர ஏது கதி எனக்கு? ஒளிமயமானவளே கதிரின் ஒளியில் கார் இருள் கரைவது போல என் வினையனைத்தும் ஓட்டிடுவாய். என் கஷ்டத்தை அறிந்தவளே! உன் திருவடியே சரணம் என வீழ்வேன். காப்பாற்றுவாய் தாயே!

77. "கருத்தோ செலுத்தச் சல்லடைக்கண்
களைப்போற் கலங்கி மயங்குமையோ
கனவில் எவர்க்கும் உபகாரங்
கருதி னாற்போல் காணலுற்றேன்.
பருத்த இருளில் விழிக்குருடன்
பாதை அறிந்து நடப்பானோ
பதியே எனது மதிவினையால்
படும்பா டிவையான் ஏது சொல்வேன்
ஒருத்தர் உதவி களுங்காணேன்
உனையே அடைந்தேன் ஒளிச்சுடரே
உதித்த கதிர்முன் இருள்போலும்
ஓட்டி வினையை வாட்டிடுவாய்
வருத்தம் அறிந்த தாயேஉன்
மலர்ப்பா தத்தில் வீழ்ந்தடுத்தேன்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கேட்டல், உணர்தல், காண்பது, உண்பது, நுகர்வது முதலிய செயல்கள் புரியும் பஞ்ச இந்திரியங்கள் சிற்றின்ப வாசனையைத் தேடி எப்போதும் ஓடும். தன்னையே அறியும் மெய்ஞ்ஞான உணர்வு தருவது உயிரே. பொறிகளை அந்தக் கரணம் அறியும். உயிரை தான் என்றும் பொருளாகிய பதி அறியும். அதுவே சாட்சியுமாம். அந்த சாட்சியை அறிய ஒருவருமில்லை. முதிர்ந்த உணர்வுடைய ஞானிகள் முதலாம் சாட்சியை அறிந்து தியானிப்பர். அவர்கள் மோகாவேசங்களைக் கடந்தவர்கள். அத்தகைய முனிவர்களைப் போன்று அடியேனும் உன் உபய பாதங்களை என் சிரசில் வைத்து தியானமுடன் மகிழ்ந்திருக்க நீ அருள் புரிய வேண்டும் தாயே!

78. "சத்த பரிச மொடுரூபம்
தரித்த ரசமா கனக்கந்தம்
தாவும் பொறிகள் தாம்அறியுந்
தனையே அறியும் கரணமது
உற்ற உயிர்தான் இவைஅறியும்
உயிர்தான் அறியும் அதுசாக்ஷி
உகந்த சாக்ஷி தனைஅறிய
ஒருவர் தமையும் நான்காணேன்.
முற்ற அறிவை உடையோர்தாம்
முதலாம் சாக்ஷி தனையறிந்து
மோகா வேசந்தனைக்கடந்த
முனிவ ரானோர் இருபதங்கள்
வைத்தென் சிரசில் தியானமுடன்
மகிழ்ந்தே யிருக்கும் வகைஅருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என் மனம் என் வசமாக வேண்டும்

மண்ணுலகில் வாழும் மனிதர்கள், ''எனது எனது'' என்று சொல்லிக்கொள்கிறார்கள். எனது தாய், எனது தந்தை, எனது பணம், எனது வீடு, ஏன்? எனது உடல் என்றும் சொல்லுகிறோம். இதில் எது நம்முடையது? இந்தப் பிறவியில் நமக்குத் தாய், தந்தையாக இருப்பவர்கள் போன பிறவியில் நமக்குத் தாய் தந்தையாக இல்லை. இன்னொரு பிறவி இருந்தால், அப்போதும் இவர்களே தாய் தந்தையராக இருக்கப் போவதில்லை. நம் மனைவியும் அப்படித்தான். நம்முடைய வீடு முதலிய பொருள் களும் நிரந்தரமல்ல. நாம் போற்றிப் பாதுகாக்கும் இந்தப் பாழும் உடலும் நம்முடையது அல்ல. இந்த உலகியல் வாழ்க் கையின் மாயத்தோற்றத்தின் விளைவுகள் இவை. உனது திரு வடியே சாசுவதம் என்று உணர்ந்தேன் தாயே! ஆனால் இந்தப் பாழும் உடலும் மனமும் வினை வசத்தால் ஒடுங்கித் தளர்ந்து துடிக்கிறது. இந்த மாயைகளிலிருந்து மனம் நீங்கி என் வசமானால் தான் உன் திருவடியை ஒருமையுடன் நினைக்க முடியும்.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்க, அலையும் மனத்தை என் வசமாக்கிக் கருணை புரிவாய் தாயே!

79. ''தனதென் றிருப்பர் உலகமதில்
தந்தை யொடுதாய் தனதாமோ
தனந்தான் தனதோ அகம்தனதோ
தழுவும் மனையாள் தனதாமோ
எனதென் றிருந்த பாழும்உடல்
இதுதான் தனதோ மனம் தனதோ
எல்லாம் உலக விருத்தியினால்
இதம் போற் கரவில் இசைந்திருப்ப
உனது பதத்தை யான்பிடித்தேன்
உணர்ந்தொத் திருக்க வகையடுத்தேன்
உடலும் மனமும் வினைவசத்தால்
ஒடுங்கித் தளர்ந்து துடிக்குமையோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மனதின் நீங்கி எனதுவச
மாகக் கருணை யதுபுரிவாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

இனிய தமிழால் உன்னைப் பாட வேண்டும்

அநுதினமும் உன் உபய பாதங்களை நான் காண வேண்டும். அந்தத் திருவடிகளைக் கண்டு என் உள்ளம் களிக்க வேண்டும். என்னைச் சுற்றியிருக்கும் கவலைகள் கரைய வேண்டும். எல்லா வற்றிற்கும் திருக்கிருஷ்ணன் சகோதரியான உனது திருக்கருணை தோன்ற வேண்டும். துவாசந்தப் பெருவெளியில் உனது தோற்றத்தை மனம் பூண வேண்டும். உன் கருணை அமுதத்தை நான் புசிக்க வேண்டும். நாவினுல் உன் நாமாவளிகளைச் சொல்ல வேண்டும். உனது பெருமைகளையும், கருணைச் செயல்களையும் இனிய தமிழில் கவிதையாகப் பொழிய நீ எனக்கு அருள் செய்ய வேண்டும்.

விண்ணில் தோன்றும் எண்ணில்லா அழகுடைய மதியே! தங்கமாளிகையில் வாழும் சவுந்தரியே! மயிலா புரித்தாயே!

80. ''காண வேண்டும் இருபதத்தைக்
களிக்க வேண்டும் அநுதினமும்
கவலைக் கடலா கியவினைகள்
கரைய வேண்டும் எனைஅகன்று
தோண வேண்டும் திருக்கிருஷ்ணன்
துணைவி உனது திருக்கருணை
தோற்ற வேண்டும் நடுவணையில்
துவாத சாந்த வெளியில்மனம்
பூண வேண்டும் அருளமுதம்
புசிக்க வேண்டும் எனதுடலம்
புகழ வேண்டும் அருட்கவிதை
பொழிய எனக்குள் அருள்புரிவாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வான மதியே அபரஞ்சி
மணியில் இருந்த சவுந்தரியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

அமுதச்சிவம்

பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்று என்பது சத்யம். நீ அதுவாக இருக்கிறாய். ''தத்வமசி'' என்பது அத்வைத சித்தாந்தம். அம்பிகை அத்வைத சித்தாந்த வடிவாய் இருக்கிறாளாம். சிவ புரத்தின் நாயகியான அவளை 'சிவ புரமே' என்கிறார் அபயாம்பிகை சதக ஆசிரியர். அவள் அணுவடிவிலும் இருப்பாள். அகண்டித மாகவும் இருப்பாள். அன்னையை ஆசிரியர் அமுதச்சிவம் என்றும் அழகு கொப்பளிக்கும் செக்கச்சிவந்த நெற்றியை உடையவள் என்றும் போற்றுகிறார். அபயாம்பிகை பட்டர் மேலும் அன்னையை வர்ணிக்கிறார். நவநிதியே என்றும் ஜீவன் முக்தர்களின் அறிவாய் அமைந்தவள் என்றும், உடலாகிற மேரு மலையின் உச்சியிலுள்ள மோனநகரம் என்றும், சுவைகளிலெல்லாம் இனிய சுவை என்றும் நவ முடிமேல் முடிந்த பரமே என்றும் திரிபுரசுந்தரி என்றும், பரகாச வெளியை இருப்பிடமாகக் கொண்டவள் என்றும், அதன் நடுவில் தோன்றும் ஒளி என்றும் வருணிக்கிறார். மதம் பிடித்துத் திரியும் வலிய உலகமாகக் காணும் இந்த உலகையேக் கூட அம்பிகை வடிவமாகக் காண்கிறார் அபயாம்பிகை பட்டர்.

81. ''அத்துவிதமே சிவ புரமே
அணுவில் அணுவே அகண்டிதமே
அமுதச் சிவமே அழகொழுகும்
அருண நுதலே நவநிதியே
முத்தர் அறிவே கனகமுடி
மோனப் பதியே அதிரசத்தின்
முக்ய ரசமே நவமுடியில்
முடிந்த பரமே திருப்பரையே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சுத்த வெளியே வெளிக்குறி
சூழ்ந்த ஒளியே ஒளிக்குமுனந்
தோயும் திரையே திரைக்கும் அப்பால்
தோன்றும் வெளியே வளிக்கனலே
மத்த மதனப் பிரபஞ்ச
வடிவே இமய மலைமகளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

கல்யாணியே

தாயே! உன்னை யார் யாரெல்லாம் வணங்குகிறார்கள் என்று எனக்குத் தெரியாதா? (மருத நிலத்தோன்) இந்திரன் உன்னை வணங்குகிறான். எமனும் வணங்குகிறான். வருணன் வணங்குகிறான் நிருதியும் குபேரனும் வாயுவும் வணங்குவது பெரிதல்ல, அந்த ஈசானனும் உன்னை வணங்குகிறான் தாயே. அமரர்கள் முடிகளனைத்தும் உன் திருவடியில் புணைந்து கொள்ளும் பேரரசி நீ! அருள்மயமான உன்னை பூமா தேவியும் ஆகாசவாணியும் வணங்குவது அதிசயமோ? பொன்னாபரணம் அணிந்த திருக்கரங்களை உடையவளே! உன்னை மெய்யாக நினைந்து நினைந்து உருகும் அடியார்கள் மனக்கோவிலில் குடியிருக்கும் கல்யாணியல்லவா நீ!

அபிராமி அந்தாதி ஆசிரியர் அழகாகச் சொல்லுவது போலவே அபயாம்பிகை பட்டரும் இப்படி வருணிக்கிறார் தாயை. அபிராமி அந்தாதியில் அன்னையை சூரியனும், சந்திரனும், அக்னியும், குபேரனும், இந்திரனும், மலரில் வாழும் பிரம்மனும், திருமாலும், இந்திரனும், அகத்தியனும், கந்தனும், கணபதியும், மன்மதனும், எல்லோருக்கும் மேலாகச சிவபெருமானும் அபிராமி தேவியைப் போற்றித் துதிப்பதாகக் கூறப்படுகிறதல்லவா.

''ஆதித்தன் அம்புலி அங்கி
குபேரன் அமரர்தங்கோன்
போதிற்பிரமன் புராரி
முராரி பொதிய முனி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காதிப் பொருப்படைக்கந்தன்
கணபதி காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர்
போற்றுவர் தையலேயே!''

காமக்கிரிபீடாசனியான காமாட்சியான கன்னி உமையே நீ உலக இயக்கம் அனைத்துக்கும் காரணமானவள். இதுவரை அடியேனுடைய வாழ்நாள் எப்படி எப்படியெல்லாமோ தொலைந் திருக்கலாம். எஞ்சியுள்ள நாட்களை உன் நினைவோடு என்னை வாழவைத்து என்னை உன் திருவடியில் நீ சேர்த்துக் கொள்ள வேண்டும். அருள் நீ எனக்குச் செய்வாயா தாயே!

82. ''மருத நிலத்தோன் ஒருபாலில்
வந்து வணங்கக் கனல்மறலி
வருணன் நிருதி குபேரனோடு
வாயு முடிவில் ஈசான்
பொருந்தி வணங்க அமரர்முடி
புனையும் பதத்தி அருள்மயத்தி
பூமா தொடுவா ணியும்வணங்கும்
பொன்னு பரணம் அணிபுயத்தி
கருதும் அடியார் நினைவினுள்ளுங்
கலந்த வதனி கல்யாணி
காமக் கிரிப்பீ டாசனியே
கன்னி உமையே காரணியே
வருநற் பருவ மாக்கிளனே
வளர்சே வடிக்கா ளாக்கிடுவாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம்பிகைத்தாயே!''

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திரிகோணசனத்தி

அம்பிகை பிந்துவை சுற்றியுள்ள முக்கோண ஆசனத்தில் வீற்றிருக்கிருள் திருகோண ஆசனத்தியாக. சகல புவனங்களுக்கும் சக்தியானவள் அவள். அவளே சர்வபூதமான சக்தி. அவள் சகல ஆகமங்களிலும் உறைகிருள். எல்லா திக்குகளையும் அவள் ஆள்கிருள். திருகோணத்தையும் கடந்த பிந்துவில் வசிப்பவள் அவள். பொற்கலசத்தைப் போன்ற தனபாரங்களைக் கொண்டவள். அந்த சோதி மயமான தாய் அடியார்களின் உள்ளங்களில் மனம் உவந்து ஆனந்த நடனமிடுகிருள். பஞ்சபூதங்களாய்த் திகழ்பவளும் அவளே! நாதந்தப் பொருளான அந்த மலர்க்கொடியை அபயாம்பிகை பட்டர் வேண்டிக் கொள்கிருர். சஞ்சலங்களால் அவதிப்பட்டும் மக்கிக் கொண்டுமிருக்கும் என் மனச் சலனத்தைப் போக்கி என்னை நீ கருணையோடு ஆட்கொள்ள வேண்டும் தாயே என்று அன்னையை வேண்டுகிருர் இந்தப் பாடலில்.

83. ''தக்க திரிகோண சனத்தி
சகல புவன மானசத்தி
சர்வ பூத மானசத்தி
சகலா கமங்க ளானசத்தி
திக்கே உடையாய் அமர்ந்தவளே
திரிகோ ணதீ தப்பொருளே
செம்பொற் கலசத் தனத்தழகி
திவ்ய சோதி மயமான
புக்கே அடியார் சிந்தையினில்
புகழ்ந்து நடன மிடுஞ்சரணி
பூதம் ஐந்தாய் நாதாந்தப்
பொருளாய் இருந்த மலர்க்கொடியே
மக்கும் எனது மனச்சலனம்
மாற்றிக் கருணை மிகுத்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

துயர் அறுக்கும் சீர்வாள்

தாயே! நீ எல்லாவற்றிற்கும் முடிவான பொருளாய் உள்ளாய்! அடியார்களுக்குக் கருணை பாலிக்க வேண்டும் என்று கருணைப் பழமாய் பழுத்த அடியார்களின் தவப் பயன் நீ! அகில போக தனுகரண சுகமாய் இருப்பவள் நீ! நீ அற்புதப் பேரரசி! உன் திருவடிகளைப்பற்றிக் கொண்டு உன்னைச் சரணமடையும் அடியார்களின் பிறவிப் பிணியினை அறுக்கும் அற்புதமான வாள் உன் கையிலிருக்கிறது. தினந்தோறும் உன்னை வழிபடுபவர்களின் சிந்தையில் நீ நிலைத்திருப்பாய் என்பது எனக்குத் தெரியாதா? செருக்குற்ற (கனத்த) மகிடாசுரன் சிரத்தை உதைத்த உபய பாதங்களை உடையவளே! கருணைச் சமுத்திரமே! மேலான பொக்கிஷமே! மூன்று கண்களை உடைய கற்பகவல்லியே! அடியேன் மனத்திலுள்ள சலனங்களைப் போக்கி உன் திருவடித் தாமரைகளை என் சிரசில் அணிவிப்பாய் மயிலா புரித்தாயே!

84. ''அனைத்தும் அகண்ட முடிவிலொன்றாய்
அருளாய்ப் பழுத்த தவப்பொருளே
அகில போக தனுகரண
மான சுகமே அற்புதமே
செனித்த பிறவி துயரறுக்குஞ்
சீர்வாள் பிடித்த கரத்தழகி
தினமும் உனையே பணிந்தவர்கள்
சிந்தை நிலையாயிருப்பவளே
கனத்த மயிடா சுரன்சிரத்தைக்
கலங்க உதைத்த பதத்தாளே
கருணைக் கடலே பரநிதியே
கண்மூன் றுடைய கற்பகமே
மனத்துள் சலனம் அறக்கருதி
மலர்ச்சே வடியை அளித்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri.V Hariharan Collection, Sholinganallur, Chennai

அமுதைப் பொழியும் நிலவே

பல பாடல்களில் அபயாம்பிகை பட்டர் யோகவழியில் அன்னையை வழிபடும் முறையைச் சொல்லுவது போல் இந்தப் பாடலிலும் கூறுகிறார். துரங்கம் என்றால் குதிரை. பூரணமாக உள்ளே இழுக்கப்படும் பதினாறு அங்குல நீளமான பிரணவாயுவாகிற குதிரையிலிருந்து அன்னை சுகமாக நடனமிடுகிறாளாம். வான வெளியில் பராகாச சுவரூபமாயும், அதே சமயம் சுயம் பிரகாச வடிவினளாகவும் தாய் இருக்கிறாள். அவள் கருணைக்காக ஏங்கும் அடியார்கள் மனத்தில் கருணைச் சமுத்திரமாகப் பொங்கி நிறைகிறாள். இளகிய மனமுடையதாய் அடியார்களின் துயரைப் பொறுக்க மாட்டாள். அடியார்கள் நடுவில் நின்று அமுதைப் பொழியும் பூரண நிலவு அவள். அவளே கருணைப் பெருவெள்ளம். நிலையில்லா உலகில் காணும் அற்ப சுகங்கள் எனக்கு வேண்டாம். பரமானந்த மான நீ அருளும் அமல சுகத்தை அடியேன் அடைய அறிவு நீ எனக்குத் தர வேண்டும். வேண்டியவர்களுக்கு வேண்டியவை அருளும் வேண்டவராசித்தாய் நீ! தாமரையை ஆசனமாகக் கொண்டவளே! மயிலாபுரித் தாயே! அருள் புரிவாயே!

85. ''துரங்கம் பதினா றங்குலமே
சுகமாய் நடன மிடுஞ்சரணி
தொலையா வெளியே வெளிமுதலே
சுயம்பி ரகாச நிலையாளே
இரங்கும் அடியர் சிந்தையுள்ளே
இனிதாய் வளரும் வாரிதியே
இலகு நினைவும் உடையவளே
ஈன ரகம்விட் டிருப்பவளே
அரங்க முடிவில் நடுவணையில்
அமுதாய்ச் சொரியும் அருள்நதியே!
அமல சுகத்தை அடியேனும்
அடையும் அறிவு தரஸ்வேண்டும்
வரங்கள் இனிவந் தருள்புரிவாய்
வனசா சனத்துள் இருப்பவளே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Padmashri V Hariharan Collection, Sholinganallur, Chennai
மலைமா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

உயிருக்கு உயிர்

தாயே! தேவர்களுக்கும் முனிவர்களுக்குமே உணர்தற்கரிதா யிருப்பவள் நீ! வேதம் ஓதினால் ஞானம் வரும். ஆனால் நீ வேதங்களை ஓதாமலேயே ஞான சுவரூபியாக இருக்கும் ஞானாம்பிகை. உயிர்களுக்கெல்லாம் உயிராக இருப்பவள் நீ! ஒளிக்கு ஒளிதருபவள். அம்பு என்று பட்டர் கூறுவது ஆனந்தக் கண்ணீர். உனது தரிசனம் கிடைப்பவர்களின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் வரும். அதற்குக் காரணம் அந்த விழிகளுக்குப் பொருளாக, விழிப்பொருளாக நீ விளங்குவதுதான். அந்த சிவப்பரம் பொருள் உன்னை நினைக்காத நாளில்லை. அத்தகைய பேரரசியான நீ எளிய அடியார்களின் உள்ளங்களில் மணி விளக்காய் விளங்குவது எவ்வளவு பெரிய கருணை? அகத்தியருக்கும் வியாசருக்கும், சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமார் முதலிய யோகீசுவரர்களுக்கும் சித்தர்களுக்கும் தங்கள் உள்ளங்களில் மனச் சாந்தி பெற வழியினை அருள சிவபெருமானிடம் வேண்டுமாறு குறிப்பால் உணர்த்தியவள் நீ அல்லவா? என்னைப் போன்ற எளிய அடியார்களுக்கு கருணை செய்ய புதுமையாகப் பழுத்த நவீனமான கனி நீ. மனித உள்ளங்களில் குடிகொண்டுள்ள மதமாச்சர்யங்களை அழிக்கும் மதமோகினியும், அந்த யோகத்தைச் செய்யும் யோகினியும் நீயே!

86. "உம்பர் முனிவர் முதலோர்க்கும்
உணர்தற் கரிதா யிருப்பவளே
ஓதா வேதம் உணர்பவளே
உயிருக் குயிரே ஒளிக்கொளியே
அம்பு படர்ந்த விழிப்பொருளே
அரவ முடியில் இருப்பவளே
அரனார் தினமும் நினைத்தருளும்
அடியா ருளத்துள் மணிவிளக்கே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கும்ப முனிக்கும் வியாசருக்கும்
குலவு நவசித் தாதிகட்கும்
குறித்த சனகா தியர்கட்கும்
குறிப்பை அருளும் நிலையாளே!
வம்பில் பழுத்த ரசக்கனியே
மதமோ கினியே யோகினியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

காலனுக்கு காலன்

ஆன்மாக்களை துரத்தி வரும் வினைகளின் மூட்டையான கன்மத்தை தொலைக்க அடியார்களுக்கு அருமருந்தாய் திகழ்பவள் நீ. துக்கம், சுகம் என்று ஒரு சக்கரம் போல் மாறி மாறி வரும் அவலத்தைத் துடைக்க உன் பக்தர்களுக்கு நீதானே கதி! உன் அடியார்களின் மேல் அவரவர் இழைத்த வினையின் வழி தன் பாசத்தை வீச வரும் காலனுக்கும் காலனாய் இருப்பவளல்லவா நீ! அரியும் அயனுமே உன்னை வணங்குவார்களாதலால், அவர்களுக்கெல்லாம் அப்பாலான பெரும் சக்தி அல்லவா நீ! வேதத்தின் வேராகவும், அதன் கிளைகளாகவும், முடிவில் அதன் கொழுந்தாகவும் இருப்பவள் நீ! முந்தியும் நீ; நடுவும் நீ; முடிவும் நீ! முதலும் நீ! முடிவும் நீ! முத்தர் சிவமானால், மோனப் பதியானவள் நீ! உன்னை நான் வணங்க வேண்டுமானால் அதற்கும் உன் அருள் வேண்டுமே! ''அவனருளால் அவன் தாள் வணங்கி'' என்று மணிவாசக பெருமான் சொன்னது நினைவுக்கு வருகிறது தாயே! உன்னை வணங்கவும் நீதான் வழிகாட்ட வேண்டும் அன்னையே!

87. ''தொந்த வினையாய் இருந்தகன்மம்
தொலைக்கு மருந்தா யிருப்பவளே
துக்க சுகமா யிருந்ததனைத்
துடைக்கும் கதியா யிருப்பவளே
அந்த கனுமா யிருந்தும்அவர்க்(கு)
அதிகா லனுமா யிருப்பவளே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Shringaganallur, Chennai

அரியும் அயனு மிருந்தும்அவர்க்(கு)
அப்பா லாகி இருப்பவளே
முந்தி நடுவா யிருந்தும்அதன்
முதலாய் முடிவா யிருப்பவளே
முத்தர் சிவமா யிருந்தும்அருள்
மோனப் பதியா யிருப்பவளே
வந்தித் திடநீ வந்தெனக்கோர்
வழியைக் காட்டி ஆதரிப்பாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

தாண்டவத்தி

தாயே! பஞ்ச பூதங்களும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு உட் கருவிகளும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து விஷயாதிகளும், மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்ற கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆக பத்தும், வித்தியா தத்துவங்களான காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்னும் ஏழும், சிவ தத்துவங்களான சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்த வித்தை என்ற ஐந்தும், தாவரங்கள், ஊர்வன, நீர்வாழ்வன, பறவை, விலங்கு, மக்கள், தேவர் என்று ஏழு வகையான, பேதா பேதம் கொண்ட எண்பத்து நான்கு நூறாயிரமான தேகங்களும் பிறந்தும், இறந்தும், மீண்டும் பிறந்தும் மத்தினால் தயிர் கடையப்படுவது போல் அவதியுறுகிறது. ''ததியுறு மத்திற் சுழலும் என் ஆவி தளர் விலதோர் கதியுறு வண்ணம் கருது கண்டாய்'' என்று அபிராமி பட்டர் கெஞ்சியது போல் நானும் கெஞ்சுகிறேன். பேய் போல திரிந்து பொய்களையே பேசிக் கொண்டு வாழும் இந்தப் போலி வாழ்வு எனக்கு வேண்டாம்! உன் கருணை விழி கொண்டு என்னை நீ சற்று நோக்கினால் போதும் என் கவலை எல்லாம் தீரும். பிறவிப் பிணியும் தொலையும். அதற்கு நீ வரம் தரவேண்டும் தாயே! கண்ணே! என் கண்ணின் மணியே! உலகெலாம் உணர்ந்தோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
தற்கரியவன்! அலகில் சோதியன்! அந்த அம்பலத்தில் ஆடும் கூத்தனைப் போல, ஞானப் பெருவெளியில் நடனமிடும் தாண்டவத்தி நீ! கூத்தனோடு சேர்ந்து ஆடி மகிழும் நீ உன் கடைக்கண்ணால் இந்த ஏழையையும் கொஞ்சம் பாரம்மா!

88. "பூதம் ஐந்தும் சதுர்கரணம்
புலனோ ரைந்தும் பொறிகள்பத்தும்
புகழும் வித்யா தத்துவங்கள்
பொருந்தோ ரேழும் சிவம்ஐந்தும்
பேதா பேதம் ஓரேழில்
பிடித்த தேகக் கோடியினிற்
பிறந்தும் பிறந்தே இறந்திறந்து
பேய்போல் திரிந்தே பொய்பேசிக்
காத லுடைய மனத்தையுன்றன்
கருணை விழிகொண் டினிநோக்கிக்
கவலை தணிய வரம்அருள்வாய்
கண்ணே எனது கண்மணியே
வாத மகன்ற பெருவெளியில்
வளரும் நடனத் தாண்டவத்தி
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

பேராயிரம் உடையவள்

எல்லோருடைய உள்ளத்திலும் நீ இருப்பாய் தாயே! யார் யார் உள்ளும் என்பதை ஆரார் (ஆர்ஆர்) அகமும் என்று இந்தப் பாடலில் கூறுகிறார். தெவிட்டாத அமுதமாகவும் நீ இருக்கிறாய். எல்லா உயிர்களிலும் நீ உள்ளாய். எல்லாப் பொருள்களிலும் நீ இருக்கிறாய். நீ இல்லாத இடமில்லை நீ இல்லாத பொருளும் இல்லை. இங்கு அங்கு எனாதபடி எங்கும் நிறைந்த இறைவி நீ! என்றாலும் அடியார்களுக்கு உன் அழகுக்கோலத்தைக் காட்ட சில க்ஷேத்திர நிலையங்களை தேர்ந்தெடுத்துக் கொண்டு பல திருநாமங்களோடு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihara Collection, Sholinganallur, Chennai

காட்சியளிக்கிருய். மதுரையில் மீனாட்சி; மாங்காட்டிலும் காஞ்சியிலும் காமாக்ஷி; காசியில் விசாலாக்ஷி; தில்லையில் சிவகாமி; திருக்கடையூரில் அபிராமி; நெல்லையில் காந்திமதி; திருவையாற்றில் தர்மசம்வர்த்தினி திருக்கருகாவூரில் கர்ப்பரக்ஷகாம்பாள்; மயிலாடுதுறையில் அபயாம்பிகை; திருவேற்காட்டில் கருமாரி; மயிலையில் கற்பகம்; இப்படி ஒரு நாமம் என்று இல்லாமல் உனக்கு ஆயிரம் திருநாமம். நீ பேராயிரம் உடையவள். பேதா பேதம் பேசினுலும், பெருமை சிறுமை சொன்னுலும், மெய்யாக உன்னை நினைத்துப் போற்றித் துதிப்பவர்களுக்குப் பிரியா அருளாக நீ விளங்குவாய். நானறிவேன் தாயே நாரணியே உன் பெருமை! பூரணி நீ பூவுலகு அனைத்துக்கும் காரணி நீ! தாமரையைக் கோயிலாகக் கொண்டவள் நீ! உன் அழகுக் கோலத்தைக் காணும் அகக் கண்ணுகிற ஞானம் இல்லாத சன்மங்களின் உள்ளங்களிலும் நடனம் புரிந்து உன் அருட்கோலத்தைக் காட்டுவாய் என்ருல் அதுதான் உன் பெருமை. வாராகினியே என்மீதும் சற்று கருணை புரிவாய் தாயே!

89. ''ஆரா ரகமும் நீயாணுய்
ஆரா அமுதும் நீயாணுய்
ஆரா ருயிரும் நீயாணுய்
யாவர் பொருளும் நீயாணுய்
பேரா யிரமும் உடையாளே
பேதா பேதம் பேசிஎன்ன
பெருமை சிறுமை நீயாணுய்
பிரியா அருளும் நீயாணுய்
நாராயணியே பூரணியே
நளிஞ சனத்துள் நடிப்பவளே
நாட்டம் அறியா தவருளத்தும்
நடனம் புரிந்தே நிற்கிலேயோ
வாரா கினியே தயைபுரிவாய்
வாலாம் பிகையே பலவகையே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாயே! உன் அருள்வாக்கை நான் கேட்டு தட்டாமல் நீ சொன்ன சன்மார்க்கத்தில் வாழ நீ கருணை செய்ய வேண்டும். என்னைப் போன்ற திக்கற்ற எளிய அடியார்களுக்கு கருணை செய்வது உன் பொறுப்பு அல்லவா! அன்னையே கருணையின் முழுமுதல் பொருள் நீ அல்லவா! உலகாய்தர் என்று ஆசிரியர் இந்தப் பாடலில் சொல்லுவது கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று திரியும் மதவாதிகளை. தெய்வங்களுக்குள் பேதம் பேசுவதை கட்டுப்பாடாகச் செய்யும் அந்த மதவாதிகள் உறவு எனக்கு வேண்டாம். தாமரையை ஆசனமாகக் கொண்டவளே! மாமணியே! கருணைநிதியே! கற்பகமே! என் மனச் சஞ்சலங்களைத் துடைத்து பரமசாந்தியை எனக்கு அருள்வாய் தாயே! மனச் சாந்தி அருளும் கருணையை உன் மோகனப் புன்னகை ஒன்றாலேயே புரிந்திடுவாய் என்று உணர்ந்த ஞானிகளான முனிவர்கள் திருக்கிருஷ்ணமூர்த்தியின் சகோதரியான உன் திருநாமங்களைச் சொல்லிச் சொல்லி ஆனந்தப்படுகிறார்கள். ஆகாயம் வட்டமா யிருப்பதால் வட்டாகாயத்தொளிச்சுடர் என்று அம்மையை இந்தப் பாடலில் வருணிக்கிறார். வாலாம்பிகையே என்னை வந்து ஆட்கொள்வாய் என்று கெஞ்சுகிறார்.

90. ‘‘தட்டா துனது மொழிகேட்டுத்
தமியேன் பிழைக்கும் வழிதேடித்
தயை செய் வதும் உன் கடன்அலவோ
தாயே கருணைக் கோர்முதலே
கட்டா யிருக்கும் உலகாய்தர்
கலங்கிப் பிரிய அருள்புரிவாய்
கமலா சனியே மாமணியே
கருணை நிதியே கற்பகமே
முட்டா திருந்த சலனமிவை
முழுதும் துடைப்பாய் முழுமுதலே
முனிவர் புகழுந் திருக்கிருஷ்ண
மூர்த்தி துணைவி மோகனமே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வட்டா சமயத் தெளிவிர்சுடரே
வாலாம் பிகையே வந்தாள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

சேஷாபரணி

தத்துவங்கள் அனைத்தும் உன் திருவடியில் தோன்றுவனவாகும். தத்துவங்கள் எல்லாவற்றையும் கடந்து நின்றவள் நீ. ஆம் தாயே! நீதான் தத்துவாதீத சுடர் விளக்கு! ஏழை எந்தனுக்கு உயிராய் இருப்பவள் நீ! சர்வ உலகங்களுக்கும் கருணையை வாரி வழங்கும் சர்வலோக தயாபரி நீயே! சாக்ஷாத்காரம் என்பதற்கு ''கண்டு துணையாயிருப்பது'' என்பது பொருளாகும். உன்னை அறியும் அடியார்களுக்கு என்றும் துணையாய் இருக்கும் சாக்ஷாத்காரமானவள் நீ! சித்தம் தெளிந்து அமைதியடைந்த உன் அடியார்களின் உள்ளம் உனது திருக்கோயில். பாம்புகளை அணிகலன்களாக அணிந்த தாமரைத் திருவடியாளே! அழகோவியமே! உருவமான பொருளே! அருவமானவளே! மூலமாய், முடிவாய், முத்தான கனகசபை மேலாய், சொத்தான சுகமாய், குண்டலினியாய், அஞ்ஞான உள்ளங்களுக்கு விளங்காத மெய்ஞ்ஞான பொருளாய் திகழும் அருட்பழமே! மண்ணுலகில் உள்ளோரும், விண்ணுலக வாசிகளான தேவர்களும் தொழும் தெய்வமே! வற்றாத கருணைக் கடலே! என் தோத்திரங்கட்கு ஆட்பட்டு மகிழ்ந்து எனை வந்து ஆட்கொள்ள வேண்டும் அன்னையே!

91\. ''தத்வா தீதச் சுடர்விளக்கே
தமியேன் உயிரா யிருப்பவளே
சர்வ லோக தயாபரியே
சாக்ஷாத் கார மானவளே
சித்த மோனத் தடியார்தஞ்
சிந்தை யிடையில் குடியான
சேஷா பரணி மலர்ச்சரணி
திருவே அருவே திகழுருவே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வித்தா யடியிற் கனகசபை
மேலாய்ச் சுகமாய் குண்டலியாய்
விளங்கா நிற்கும் அருட்கனியே
மேலோர் கீழோர் தொழுபவளே
வற்ரு துலவும் அருட்கடலே
மகிழ்ந்தென் றனைவந் தாண்டு கொள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

அஷ்டாங்கயோகம் சித்திக்கும்

அம்மா உன்னை விரும்பித் தொழும் அடியார்கட்கு உலகம் அனைத்தும் வசியமாகும். அது மட்டுமா தாயே? இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலான அஷ்டாங்க யோகங்களும் உன் கருணையால் சித்திக்கும், தித்திக்கும் நின் திருவடியும், பார்க்கும் திசைதொரும் பாசாங்குசமும், பனிச் சிறைவண்டு ஆர்க்கும் புது மலர் ஐந்தும், கரும்பும் புனைந்த திரிபுரசுந்தரி உன் தரிசனமும் கிடைக்கும். உன் அருளாசி கிடைக்கப்பெற்ற அத்தகைய அருளாளர்கள் தான் எல்லாம் பெற்றவர்களாவார்கள். அவர்களே எல்லாம் சித்திக்கப் பெற்றவர்களாதலால் சித்தர்கள். அந்த சித்த புருஷர்கள் சபித்தல், கருணை செய்தல் என்ற இரண்டு ஆற்றல்களையும் பெற்றவர்கள். அவர்கள் விரல் அசைந்தால் பதினுன்கு உலகங்களும் அசையும், சுகதுக்கங்கள் அவர்களை அணுகாது. இத்தகைய சக்திகளை அவர்கள் எப்படி அம்மா பெற்ருர்கள்? ஆதிபராசக்தி உன் கருணை செய்த திருவிளையாடல் தானே அம்மா அவையெல்லாம்? அந்த உன் கருணையை பெருமையை, லீலா விநோதங்களை எடுத்துச் சொல்ல இந்த நாவுக்குத்தான் சக்தி உண்டா? எண்ணிப்பார்க்க இந்த மனதுக்குத்தான் ஆவது உண்டோ?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

92. ''அம்மா உனையே அடுத்தவர்கட்(கு)
Vedika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அனைத்தும் உலக வசியம் உண்டாம்
அஷ்டாங் காதி யோகமுடன்
அடியும் முடியும் கவனம் உண்டாம்
தம்மாற் சாபா நுக்ரகமும்
சகல மூர்த்தி கரமாகும்
சடமே வெகுநாள் நரைதிரைகள்
தமையே அகற்றித் தனியிருக்கும்
சும்மா அவர்கள் விரல்அசைந்தால்
தொடர்ந்தீ ரெழுபார் சுழன்றுருளும்
துக்க சுகமும் அணுகாது
சுகரு பாதி அருளமையும்
அம்மா அதைத்தான் ஏதுசொல்வேன்
வாக்கு மனதுக் கடங்காதே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

முதிர்ந்த மொழியில் படர்ந்த கொடி

அபயாம்பிகைபட்டர் அன்னையைச் சொல் மலர்களால் அர்ச்சிக்கிறார் இந்தப் பாடலில். பொன்னே நிறைந்த புது மலரே! புகழ் மிகுந்த வேதத்தின் விழுப் பொருளே! மதிமண்டலமாகிய சகஸ்ராரத்தை இருப்பிடமாகக் கொண்ட அன்னையை பொற்று மரைப் பூங்கமலமதில் புகழ்ந்தேயிருக்கும் போதகமே என்றார். மின்னல் கொடியே! பவழக் கொடியே! மேகத்தையொத்த கூந்தலை உடையவளே! நவபீடத்தை ஆசனமாகக் கொண்டவளே! வேதத்தின் வித்தாய், வடிவாய், முடிவாய் (வேதத்தின் வேராய், மரமாய், கொழுந்தாய்) திகழ்பவளே! அடியார்களுக்குக் கருணை செய்ய முன்னே பழுத்த கதிப்பழமே! ஞானிகளின் அமுத மொழிகளை படரும் கொடியான உனக்குக் கொம்பாய் கொண்டவளே!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முதலாய், நுதலே குடியாக (புருவ நடுவில் வீற்றிருப்பவள்) அமர்ந்தவளே! அடியார்களுக்குக், கருணை பொழியும் வான் மணியே வாலாம்பிகையே! என் மீதும் கருணை காட்டுவாய் தாயே!

93. ''பொன்னே நிறைந்த புதுமலரே!
புகழ்சேர் மறையின்பொருள் அணங்கே
பொற்று மரைப்பூங் கமலமதில்
புகழ்ந்தே யிருக்கும் போதகமே
மின்னே பவழக் கொடிவடிவே
மேகம் அனைய கருங்குழலே
விளங்கு நவபீ டாசனியே
வித்தாய் மரமாய் மறைமுடிவில்
முன்னே பழுத்த கதிப்பழமே
முதிர்ந்த மொழியிற் படர்ந்த கொடி
முதலே நுதலே குடியாக
முடிவா யிருந்த மோகனமே
அன்னே பொருந்த அருளளிக்கும்
வாலாம் பிகையே வான்மணியே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

நீலகண்டனின் இடப்பாகத்தவள்

அன்னையே ஸ்தூலமாகவும் சூக்மமாகவும் இருப்பவள் நீ அல்லவா? வற்றாத கருணைக்கடலே! துவாத சாந்தப் பெரு வெளியில் சுகமாய் வீற்றிருப்பவள் நீ! எல்லா தத்துவங்களுக்கும் நீயே அதிகாரி! கமலாசனி! மெய்ப் பொருளே! நீல நிற நஞ்சு உண்டு கண்டம் கறுத்த நீல கண்டனர் இடப்பாகம் கவர்ந்தவள் நீ! அமுத மயமான தேக ஒளி பரப்பும் அருணும்புயத்தி! திரியம்பிகையே! உன் திருவடிகளைச் சிக்கெனப் பிடித்தேன். காத்தருள வேண்டும் என்னைத் தாயே!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

94. “தூல சூக்ஷ்ம காரணமே
தொலையாக் கருணை வாரிதியே
துவாத சாந்த வெளிதனிலே
சுகமா யிருக்கும் நிரந்தரமே
மேலாம் தத்வத்துக் கதிகாரி
விரிந்த கமல நடுப்பீடம்
வியாபித் தொளியாய் வெளியதன்மேல்
வெளியா யிருந்த மெய்ப்பொருளே
ஆல கால விடம்அருந்தும்
அரனார் இடப் பாகத்தில்வளர்
அமுதே தேக வொளிமயமே
அருணாம் புயத்திரி யம்பிகையே
வாலாம் பிகையே உனையடுத்தேன்
வந்தென் றனைநீ காத்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!”

மந்த்ர ஸ்வருபி

ஸ்ரீம் என்ற சக்தி மந்திரத்தில், ஸகார ரகார, இகாரங்களைக் காண்கிறோம் அல்லவா. அந்த மந்திர ஸ்வரூபிணியாய் இருக்கும் அபயாம்பிகையை, பட்டர் மூன்று எழுத்தாயிருப்பவளே என்கிறார். அன்னை நாதவடிவாகிய பிரணவத்தில் உள்ளாள். அதை முனை மேலெழுத்தே என்றார். கம்முதலாக ஹ்ரீம் என்பது இறுதியாக உள்ள பதினைந்து எழுத்துக்களை மனதில் கொண்டு “பதினைந்தாம்” என்று கூறுகிறார். இது காதி வித்தை எனப்படும். இவற்றின் முறையைத் திருமந்திரம் புவனாபதி சக்கரத்தானும் குரு முகத்தாலும் உபதேசம் பெற்று சிந்திக்க வேண்டும். அம்பிகையை வழிபடுப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika ... Hariharan Collection, Sholinganallur, Chennai

முறைக்கு "சமயாசாரம்" எனப் பெயர். உள்ளே நிகழும் ஆறு ஆதாரங்களில் நிகழும் மார்க்கத்திற்கு" நெறி அந்தரமாய் என்றார். அம்பிகை குண்டலினி சக்தியாயிருப்பதால் "குண்டலியாய் நின்றே இருந்த நேரிழை" என்றார். அப்படிப்பட்ட அன்னை யார் யார் அவள் திருவடியைத் தலையில் சூடிக்கொள்கிறார்களோ அவர்கள் உள்ளந்தோறும் பொன்னம்பலமாய் நடனமிடுகிறாள். அந்த அன்னையை பொன்னே என்றும், பொருளே என்றும் அருளே என்றும், என்னையாளும் பொன்னே, கண்ணின் மணியே, மாட்சிமை பொருந்திய குருவாய் வந்தவளே, மருவுஞ் சுகத்தைத் தந்தவளே என்றும் துதிக்கிறார் அபயாம்பிகைபட்டர் இந்தப் பாடலில்.

95. "மூன்றே எழுத்தா யிருப்பவளே
முனைமே லெழுத்தே பதினைந்தா
முதலாயி ருபத் தெட்டாக
முடிவா யிருந்த மோகனமே
நீண்ட சமயா சாரமுமாய்
நெறியந் தரமாய் முகமாகி
நிகழா தாரக் குண்டலியாய்
நின்றே யிருந்த நேரிழையே
பூண்ட அடியர் அகந்தோறும்
பொன்னம் பலமாய் நடனமிடும்
பொருளே அருளே எனையாளும்
பொன்னே கண்ணி னுள்மணியே
மாண்ட குருவாய் வந்தவளே
மருவுஞ் சுகத்தைத் தந்தவளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Ramanan Collection, Sholinganallur, Chennai

அம்பிகையை ஆறு சமயங் கடந்து நின்ற சுந்தரி என்கிறார் இந்தப்பாடலில். ஆறு சமயங்களுக்கும் இவளே தலைவி என்பது ஒரு பொருள். அகமும் புறமும் அகப்புறமும், புறப்புறமுமாக ஆறு ஆறாக விரிந்து நின்ற சமயங்களுக்குத் தலைவி என்பது மற்றொரு பொருள். ஆசாபாசங்களிலிருந்து தங்களை விலக்கிக் கொள்பவர்களுக்கு அருள் பாலிக்கும் அருந்ததி என்கிறார் அம்பிகையை. பதினெண் புராணங்களின் வடிவாயும் அம்பிகை இருக்கிறாள். சாக்த சமயத்தை ஏற்றுக் கொள்ளும் சடங்காய் (தீக்ஷை) இருப்பவளும் அவளே. திசைகளை உடையாய் அணிந்தவள் அவள். உலகமே தன் வடிவாய் கொண்டவள். 51 அக்ஷரங்களின் வடிவாயும் அவள் இருக்கிறாள். மந்த்ரஸ்வரூபியா கவும், வேத வடிவினளாகவும் இருக்கிறாள். அந்த அம்பிகையை நோக்கிக் கையெடுத்து தொழுது "தாயே எனது கன்ம மலங்களைப் போக்கி என்னை அடிமை கொண்டருள்வாய்" என வேண்டுகிறார் அபயாம்பிகை பட்டர்.

96. "ஆறு சமயங் கடந்துநின்ற
அருண நிதியே சுந்தரியே
ஆசா பாசம் அகன்றவர்பால்
அருளா யிருந்த அருந்ததியே
தேறும் பதினெண் புராணமுமாய்த்
திசைதீ க்ஷையுமாய் நின்றவளே
திக்கே உடையாய்த் தரித்தவளே
செகமே வடிவாய் நின்றவளே
கூறும் ஐம்பத் தொன்றதிலுங்
கோடா கோடி மந்திரமும்
குறிக்கும் அனந்த வேதமுமாய்க்
குறிப்பா யிருந்த பரமாதே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

[illegible]

வந்தே அடிமை கொண்டருள்வாய்

மயிலா புரியில் வளரீசன்

வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

முன்னம் அவனை ஈன்றவள்

மூன்று கண்களுடைய பரமசிவத்தின் இடப்பாகம் கவர்ந்த சிவத்திற்கு சக்தியாக திகழும் மூல முதல் பொருளே!

அன்னை பராசக்தி முன்னை அந்தப் பரமனை ஈன்றவள். பின்னர் அவனையே ஆண்டவள் என்கிறார். ''தவளே இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம், அவளே அவர் தமக்கு அன்னையும் ஆயினள். இவளே கடவுளர் யாவருக்கும் மேலை இறைவியும் ஆம்'' என்று அபிராமி பட்டர் சொல்லியது போலவே இவரும் கூறுகிறார். ''சக்திதான் சிவத்தை ஈன்றும்'' என்பது சிவஞ்ஞான சித்தியார். செக்கச் சிவந்த இளம் மா வதனத்தின் தெளிவே என்றும், தேன்மொழியே தேவியாதி, பரஞ்சோதி, பார்வதி, பரமேஸ்வரி, எல்லாவற்றிற்கும் காரணமானவள், உலகேழும் படைத்தாய், பைங்கிளி என்றெல்லாம் போற்றும் அபயாம்பிகை பட்டர் பெற்ற பிள்ளையை காக்கும் தாய் என அன்னையே நீ என்னைக் காக்க வேண்டும் என்று கெஞ்சுகிறார்.

97. ''முக்கட் பரமர் இடப்பாக

முதலாய் முளைத்துத் தழைத்தவளே

முன்னம் அவனை ஈன்றவளே

முடிவில் அவனை ஆண்டவளே

செக்கர் இளமா மதிவதனத்

தெளிவிற் றெளிவே தேன்மொழியே

தேவி யாதி பரஞ்சோதி

ஸ்ரீபீ டாதி யருளாதி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

பக்கத் துணையே பார்வதியே
Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
பரமேஸ் வரியே காரணியே
பஞ்சா க்ஷரியே உலகேழும்
படைத்த தாயே பைங்கிளியே
மக்கள் தமைப்போல் எனைக்காக்க
வகைநீ அருள்வாய் வளமயிலே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

இசை புட்களம்

ஆலயங்கள் ஆயிரம் இருந்தாலும் கோயில் என்றால் சைவ சமயத்தவர்களுக்கு தில்லை தான். அந்த கூத்தன் அல்லும் பகலும் அனவிரமும் அங்கு ஆடிக் கொண்டிருக்கிறான் என்பது நம்பிக்கை. 'அங்கு ஆடுவது அத்தன் அல்ல அம்பிகை என்கிறார் அபயாம்பிகை பட்டர். கூத்தன் ஆடுவது போல் தான் உங்களுக் கெல்லாம் தோன்றும் அவனையே ஆட்டி வைக்கும் அன்னை கூத்தன் உருவிலும் தான் அருவாக திருவாக ஆடுகிறாள். அந்தச் சிதம்பரத்தில் சிற்பரமாகத் திகழ்கிறாள் அன்னை. ஞான மாகிய மேலான பொருளான அவள் உலகம் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் மூலமான பொருள் (செக சூத்திரம்). அவள் வேத வடிவானவள். இருள் மயமான ஆணவத்தை (அல்லை) தொலைக்கும் அருமருந்தும் அவளே! அவள் அமுதம் நிறைந்த பெருங்கடல். அறிவுக்கு அறிவான அந்த அன்னையை எல்லோரும் துதிக்க விரும்புவதற்குக் காரணம் அடியார்களுக்கு அருள் பாலிக்கும் அருள் பரையாக அவள் இருப்பதே! அந்தத்தாய நாதோபாசனை செய்பவர்களுக்கு இசையின் நிறைவாகவும் (இசை புட்களம்) இருக்கிறாள். அகண்டிதம் என்றால் முழுமை யானது என்று பொருள். அன்னையை முழுமையானவள் என்றும், இதத்துக்கு இதமானவள், இரவு பகலாய் ஒளிர்பவள் என்றும் மதிசூடியான (சோமன் சூடி) சிவபெருமானிடம் வளரும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

வாழ்வே என்றும் போற்றித் துதித்து ஆனந்தப்படுகிறார் அபயாம்பிகைப்பட்டர்.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

98. "தில்லை யதனுள் நடனமிடுந்
திருவே அருவே திகழ்உருவே
தெளிந்த பரமே சிற்பரமே
செகசூத் திரமே நான்மறையே
அல்லைத் தொலைக்கும் அருமருந்தே
அமுதா னந்தக் கடற்பெருக்கே
அறிவுக் கறிவாய் இருக்கும்உனை
அனைத்துந் துதிக்கும் அருள்பரையே
எல்லை கடந்த பரவெளியே
இசைபுட் களமே அகண்டிதமே
இதத்துக் கிதமா யிருப்பவளே
இரவு பகலாய் ஒளிர்பவளே
வல்ல சோமன் சூடியிடம்
வளரும் வாழ்வே என்கோவே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!"

இதய தெய்வம்

மனித ஜீவன்கள் நிலையில்லாத அழியும் உடலுக்கு அழகு கூட்டும் ஆசையோடு பொன்னாலான அணிகலன்களை அணிந்து கொண்டு ஆனந்தப் படுகின்றன. பொன்னாலான அழகுமலையான உன்னைத் தரிசிக்கப் பெற்றால், இந்த அற்ப சந்தோஷங்களுக்கு மனம் அலையுமோ? அமுத நதி சேரும் அருட்கடலான உன் தரிசனத்திற்கு ஈடான ஆனந்தமும் உண்டோ? இந்திரன், திருமால், பிரமன் முதலியவர்களுக்கு உரிய அதிகாரங்களையும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihaan Collection, Sholinganallur, Chennai

கொடுத்து அந்தப் பணிகளை அவர்கள் முறையாகச் செய்ய அதட்டி வேலை வாங்கும் அரசி அல்லவா நீ? எல்லாவற்றுக்கும் மேலாக வீற்றிருக்கும் ஒளிமயமானவளே! பாம்பை அணிகலனுக அணிந்தவளே! அடியார்களின் இதயங்களில் குடி கொண்ட தெய்வமே! யோகிகளின் யோக வழியில் வந்து அருள்பாலிப்பவளே! யோக நித்திரையில் வெளிப்படுபவளே! (தூங்காதுறக்க மானவளே) நிரந்தரப் பரமானந்தம் தருபவளே! நீல மணி போன்ற ஒளி உடையவளே! (மணி அம்கிரணி) மயிலாபுரித் தாயே! அருள் புரிவாயே!

99. ''அணியுங் கனக ஒளிமலையே
அமுத நதியே அருட்கடலே
அதிகா ராதி தேவதையே
அகண்ட முடிவில் ஒளிர்சுடரே
பணியும் அணியும் புயத்தாளே
பரநா தாந்த மடத்தாளே
பழகும் அடியார் இதயத்துள்
பரவி யிருக்கும் பனிமொழியே
துணியும் மனதா கியயோகி
தொடரும் படியே தொடர்பவளே
தூங்கா துறக்க மானவளே
தொலையாச் சுகமும் ஆனவளே
மணியங் கிரணி விளையாடி
வளரும் கொலுவீற் றிருப்பவளே
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

முக்தி

நூறுவது பாடலாகிய இந்தக் கடைசிப் பாடலில், இது வரை,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

99 பாடல்கள் பாடும் வரை வழிபாட்டிற்குரிய தெய்வமாக அன்னை அபயாம்பிகையும், அவள் தந்த தரிசனமும், தரிசித்த பட்டரும் வேறு வேருக இருந்தார்கள் என்பதையும், அன்னையின் கருணை அபயாம்பிகை பட்டரின் மீது பரிபூரணமான நிலையில், பார்வைக்குரிய அபயாம்பிகை, பார்க்கும் அபயாம்பிகை பட்டர், பார்வை மூன்றும் ஒன்ருயின என்பதையும் கூறுகிருர். ஆம், இனி பட்டருக்கு என்று ஒரு வாழ்வு இல்லை. அவர் எதற்கும் ஆசைப்பட, வேண்ட அவசியம் இல்லை. அவர் ஆன்மா அம்பிகையின் திருவடியில், அவள் சன்னதியில் ஏற்றும் கற்பூரமாகக் கரைந்து விடுகிறது. அந்தப் பரமானந்த சுகத்தைத் தெளிவு படுத்தும் பாடல் இது. தாயே! நான் வேறு! நீ வேறு! இது வரை! நீ வேதப் பொருள்! நானே நாயினும் கீழானவன்! இது கடந்த கால நிலை! இனி நான் இல்லை! என் குறை இல்லை! அதைப் போக்க யாரிடமும் விண்ணபிக்க தேவையும் இல்லை. வேதாந்த முடிவுக்கு எப்படிச் செயல் இல்லையோ, அதுபோல "வேதஜனனி" உன் திருவடியில் சேரும் எனக்கும் செயல் இல்லை. சர்வானந்தத்தை எனக்களித்து விட்டு சர்வானந்த சக்கரத்தில் வீற்றிருக்கும் தாயே! சட்கோணத்தவளே! சதுர்கரத்தி தேனுக்கு மாருன ருசி இல்லை! தேவி உன் தரிசனத்துக்கு ஈடான இன்பம் இல்லை! ஒளியில் சிறந்த தீப ஒளி நீ!

இனி தேகமும், அதனுள் உள்ள உயிரும் உயிர்க்குயிரான சிவமும் இனி ஒன்ருனதே! சிவத்தின் உள் ஒளிரும் சாக்த பரம் பொருளே! திருக்கிருஷ்ணன் தங்கச்சியாய் திகழ்பவளே! உன் திருவடி பற்றும் பேறு பெற்ற அடியார்களுக்கு அபயமளிக்கும் அஞ்சல் நாயகியே! மயிலா புரியில் வளரீசன் வாழ்வே! அபயாம்பிகைத்தாயே!

100. "நான்வே றெனநீ வேருனய்
நானு வேதப் பொருள்ஆனுய்
நாயேன் இனியாரு டன்பேசி
நண்ணுங் குறையைப் போக்குவது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

தான்வே தாந்த முடிவானால்
Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
தனக்கோர் செயலும் உண்டாமோ
சர்வா னந்த சக்கரத்தி
சட்கோ ணத்தி சதுர்க்கரத்தி
தேன்வே றுருசி உண்டாமோ
தீபத் தொளிவே றுண்டாமோ?
தேகம் உயிரும் உயிர்க்குயிராய்ச்
சிவமே யொன்றாய் ஆனாயே
வான்வே றுண்டோ திருக்கிருஷ்ணன்
வளருந் துணைவி நீஉரையாய்
மயிலா புரியில் வளரீசன்
வாழ்வே அபயாம் பிகைத்தாயே!''

நூல் பயன்

எந்த தெய்வீக நூலை எழுதும் ஆசிரியரும், நூலின் முடிவில் நூல் பயன் எழுதுவது என்பது மரபு. இராமாயணத்தை எழுதிய கம்பன், தன் காவியத்தின் இறுதியில் இராமனின் பெருமைகளைப் பேசுபவர்கள் ''நராதிபதியாகி நமனையும் வெல்லுவார்கள்'' என்று கூறி முடித்தான். அபிராம அந்தாதி எழுதிய அபிராமி பட்டர், அன்னை அபிராமியைத் தொழுவர்களுக்கு ஒரு தீங்கும் வராது என்று முடித்தார். ஆனால் அன்னை அபயாம்பிகைத் சதகம் பாடிய அபயாம்பிகை பட்டர் ஏன் நூல் பயன் எழுதவில்லை? மற்றவர்களுக்கு நூல் பயன் என்று எழுதுவதற்குப் பதிலாக, அந்த அம்பிகையை மெய்யாக அழுது தொழுததால் தான் அடைந்த முக்தியை தரிசனமாகக் காட்டி விட்டார் இந்த நூறாவது பாடலில். எனவே அன்னை அபயாம்பிகையை வழிபடுபவர்களுக்கு அபயாம்பிகைத் திருவடியைப் பற்றுபவர்களுக்கு அபயம் அளித்து, இப்பிறவியில் வரும் துயர் போக்கி, இனி எந்தத் துயரும் வரும் அவலமில்லா நிலையை, மரணமிலாப் பெருவாழ்வை, பிறவாமையை அருளுவாள் அன்னை என்பதே தன்னை உவமைப் பொருளாகக் காட்டி நமக்கு அவர் உணர்த்தும் நூல் பயன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அபயாம்பிகை சதகம்

ஸகல கார்ய ஸித்தி

அபயாம்பிகை சதகம் பாடல்களைப் பாராயணம் செய்வோர் அடையும் பலன்கள் அனந்தம். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு குறிப்பிட்ட பலனைத் தரும் வகையில் மூல அக்ஷரங்களால் அமைக்கப்பெற்றது. ஆகவே, பலனைக் கருதி படிப்பவர்களின் உதவிக்காக ஒவ்வொரு பாடலும் கருதிய பலன் இன்னதென அட்டவணையிட்டுக் காட்டப் பெற்றிருக்கின்றது.

பாடல் எண்	பலன்
(1)	மனம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க
(2)	விரும்பியதைப் பெற
(3)	பேரின்பம் உண்டாக
(4)	அறம் நிறைந்த வாழ்க்கை வாழ
(5)	புத்ர சந்தானம் பெற
(6)	யோக சித்தி பெற
(7)	இகபர சுகங்களை அடைய
(8)	சஞ்சலம் இல்லாத உறுதியான மன நிலை பெற
(9)	அஷ்ட சித்திகள் பெற
(10)	நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற
(11)	கல்வியும் ஞானமும் பெற
(12)	உயர் பதவிகள் அடைய
(13)	ஸம்ஸார பந்தம் நீங்க
(14)	வினைப்பயன் ஒழிய
(15)	எல்லா தோஷங்களும் தீர
(16)	நல்லறிவு உண்டாக
(17)	சரீரப்பற்று நீங்க
(18)	செல்வம் பெருகவும் ஆஸ்திகள் வளரவும்
(19)	அடியார்கள் உறவு உண்டாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

பாடல் எண்	பலன்
(20)	மரண பயம் நீங்க
(21)	பவப் பிணி நீங்க
(22)	தனமும் கல்வியும் பெற
(23)	ஆபத்துகள் நீங்க
(24)	மனவியாகூலம் தீர
(25)	உலகியல் ஆசைகள் நீங்கி துறவறம் சித்திக்க
(26)	அனுபூதி நிலை பேற
(27)	அம்பிகையின் பரிபூரண அருளைப் பெற
(28)	சொல்லாற்றல் பெருக
(29)	வியாதிகள் நீங்கி குணமடைய
(30)	நினைத்த காரியம் இடையூறின்றி நிறைவேற
(31)	தொல்வினைகள் தொலைந்து போக
(32)	மலையென வரும் துன்பம் பனியென நீங்க
(33)	முக்காலமும் உணரும் ஆற்றல் உண்டாக
(34)	கோபத்தை அடக்க
(35)	எப்போதும் அம்பிகையின் உருவம் மனத்தில் நிலைத்திருக்க
(36)	மரணாவஸ்தை நீங்கவும் அம்பிகை தன் கருணைக்கோலம் காட்டவும்.
(37)	பூர்வ புண்ணியம் பலன் தர
(38)	நல்லவர்கள் நட்பைப் பெற
(39)	அகால மரணமும் துர் மரணமும் உண்டாகாதிருக்க
(40)	நவரத்ன பிராப்தி உண்டாக
(41)	எப்போதும் இளமையோடு இருக்க
(42)	உலக அபவாதம் நீங்க
(43)	அற உணர்வுடன் வாழ்க்கை நடத்த
(44)	சிக்கனமாக வாழ்க்கை நடத்த
(45)	இல்வாழ்க்கையில் இன்பம் பெற
(46)	மோகம் நீங்க
(47)	கடன் தொல்லைகள் தீர
(48)	மங்காத புகழ் நிலைத்திருக்க
(49)	எல்லோரையும் வசீகரிக்கும் ஆற்றல் உண்டாக
(50)	மெய்யுணர்வு தோன்ற
(51)	உடலில் ஜீரண சக்தி உண்டாக
(52)	தீய பழக்கங்கள் உள்ள பிள்ளை திருந்த

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பாடல் எண்	பலன்
(53)	பயமில்லாத வாழ்க்கை வாழ
(54)	குழந்தைகள் கல்வியில் முன்னேற்றம் அடைய
(55)	பெண்கள் தெய்வீக அழகைப் பெற
(56)	அழகான பெண் குழந்தை பிறக்க
(57)	பக்தி பெருக
(58)	விதியை வெல்ல
(59)	அம்பிகையின் அருள் எப்போதும் கிடைக்க
(60)	சகல செளபாக்யங்களும் உண்டாக
(61)	மன வலிமை பெற
(62)	தனக்குரிய பொருள் தப்பாமல் வந்து சேர
(63)	நல்ல பெண் தனக்கு மருமகளாக வர
(64)	வாழ்வில் அருள் சுரக்க
(65)	தேக ஆரோக்யத்துடன் திகழ
(66)	பேச்சைக் குறைத்து மௌனம் வளர்க்க
(67)	அவப்பெயர் நீங்கி நல்ல புகழ் உண்டாக
(68)	பிரிந்த தம்பதிகள் ஒன்றுபட
(69)	துன்பமில்லா இன்ப வாழ்வு பெற
(70)	நமது செயலுக்கும் முயற்சிக்கும் தெய்வானுக்கிரகம் கிடைக்க
(71)	கண் பார்வை நன்ருக இருக்க
(72)	மனம் அமைதி பெற
(73)	நன்னடத்தை உண்டாக
(74)	உண்ணும் உணவுக்கும், இருக்கும் இடத்துக்கும் ஒரு குறையும் இல்லாமலிருக்க
(75)	உடலிலும் உள்ளத்திலும் வாழ்நாள் முழுவதும் சக்தி குறையாமலிருக்க
(76)	நம்முடன் பழகுபவர்களின் உள் மனத்தை அறிந்துகொள்ள
(77)	வாழ்க்கையில் கஷ்டங்களெல்லாம் நீங்க
(78)	மனதில் துறவு எண்ணம் வளர
(79)	மாயையான பாசங்களும் பற்றுகளும் விலக
(80)	கவி பாடும் திறன் பெற
(81)	தெய்வ பக்தி வளர
(82)	வாழ்க்கையின் எஞ்சிய நாட்களை நல்ல வழியில் செலவழிக்க
(83)	அரசியல் வாழ்க்கையில் பதவிகள் பெற

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பாடல் எண்	பலன்
(84)	எதிரிகளின் தீய முயற்சிகளை முறியடிக்க
(85)	இல்வாழ்வில் தர்மத்துடன் கூடிய இன்பங்களை மட்டுமே அனுபவித்து அறவாழ்க்கை வாழ
(86)	எல்லோரிடத்தும் அன்புடன் இருககும் மனோபாவம் வளர
(87)	நெஞ்சம் தியானத்தில் நிலை பேறு அடைய
(88)	ஐம்புலன்களை அடக்கி ஆன்மநேய ஒழுக்கத்துடன் வாழ
(89)	குழந்தைகளுக்கு ஞானத்துடன் கூடிய கல்வியில் நாட்டம் வர
(90)	பிற தெய்வங்களையும் மார்க்கங்களையும் பழிக்காதிருக்கும் மன வளம் பெற
(91)	ஏவலர் பலர் உளராக
(92)	நினைத்த காரியம் நடக்க
(93)	முக்தி நிலை அடைய
(94)	அம்பிகையின் அருள் துணை எப்போதும் இருக்க
(95)	குருவருள் பெற
(96)	மாயை அகன்று உண்மை உணர்வு உண்டாக
(97)	பெற்றவர்களிடமுள்ள அன்பும் பக்தியும் நீங்காதிருக்க
(98)	சங்கீத ஞானம் வளரவும் இசைத் துறையில் புகழ் பெறவும்
(99)	ஸர்வ பரித்யாகம் செய்யும் பக்குவம் உண்டாக
(100)	வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களையும் அனுபவித்த பிறகு, ஆன்மாவை அம்பிகையின் திருவடியில் சேர்க்க

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

L97

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

LIFCO

ABHAYAMBIKAI SATHAKAM

by

V. Dhandapani

PUBLISHERS :

THE LITTLE FLOWER CO.,

43, Ranganathan Street,

Madras-600 017.

★

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

61st YEAR OF GOLDEN SERVICE !